
# மறுகா

புதிய தலைமுறைக்கான உடைப்பு

இதழ் 6 - 2009

ரு. 110



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதழ் - 06

2009

உரையாடல்


- நான்கு பெண்களுடனான உரையாடல் 03


கட்டுரை


- மூன்றாம் பாலினம் நவரசம் திரைப்படம் பற்றிய ஓர் அறிமுகக் குறிப்பு 25
- பெண் மொழியும் முரணும் 29
- கையிறு காலம் 34
- பெண்ணியப் பார்வையில் சொல்லும் பொருளும் 40
- தாய் நிலமும் தாய் மொழியும் 45
- நானும் எனது படைப்புலகமும் 49
- பெண்ணியா நான் உணர்ந்தவைகளும் பதிந்தவைகளும் 52
- தமிழர் உணவு முறையில் பெண் 57


கவிதை


- காற்றில் ஈரலிக்கும் காதல் 28
- பூக்கள் 28
- பூனையின் இருட்டு ஜன்னலின் அருகாமை 32
- என் நோயின் முந்திய நிலையிலிருந்து விரிகிற கவிதை 33
- இல்லாமல் போகும் வலி 36
- குரல் ஒடுங்கும் காலம் 37
- ஆருயிரே வருக 38
- கடைசிச் சொல் 38
- கல்யாண வைரவன் 39
- Friend வந்திட்டா 43
- ரகசிய சினேகிதன் ஒருவனுடன் வாழ்வதன் ருசி தெரியுமா உங்களுக்கு? 44
- புதிய அர்த்தப்பாடு 51
- பேய் மழையின் பின் 59
- இறங்குகின்ற விம்பம் 59
- 29.09.2008 இரவு 06.25 60





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறுகா

**இதழ்-06**
**2009**


ஆசிரியர்

**த. மலர்ச்செல்வன்**

தொடர்புகொள்ளும் முகவரி

**ஆசிரியர்**

**மறுகா**

**ஆரையம்பதி - 03,**

**30150**

Tel : 0776084756

E-mail:maruka_publication@yahoo.com

marukamagazine@gmail.com


தனியிதழ்

**ரூபா 110/-**

வங்கி நடைமுறைக்கு

| | | |
|---|---|---|
| பெயர் | : | த. மலர்ச்செல்வன் |
| வங்கி | : | செலான் வங்கி |
| | | மட்டக்களப்பு கிளை |
| கணக்கு இல. | : | 0730-07305194-101 |
| | | (நடைமுறைக் கணக்கு) |

காசுக்கட்டளை அனுப்பவேண்டின்...

**த. மலர்ச்செல்வன்**
**ஆரையம்பதி அஞ்சல் அலுவலகம்**

எனும் முகவரிக்கு அனுப்பவும்

# அதீத நாடகம்



மிக உன்னதமான நாடகம் ஒன்று முடிந்துவிட்டது. வேதனைக்கும், சோதனைக்கும் கஷ்டத்திற்கும் இடையே நடாத்தப்பட்ட நாடகம் அரங்கே உடைந்து நிறைவுற்றுள்ளது. இனி நடிப்பதற்கு யாருமே தயாரில்லை. ஒப்பனைகள், அலங்காரங்கள், பட்டறைகள் எதையும் சந்திப்பதற்கு மனம் இடங்கொடுக்கவில்லை. ஆஸ்கார் விருதுக்காக ஆவலுடன் எதிர்பார்த்த நடிகர்கள் பெரும் சோகத்துடன் சென்று விட்டார்கள் நெறியாளர் புலம்பலுடன் புறப்பட்டு விட்டார்

முப்பது ஆண்டுகளாக பார்த்துப் பார்த்து வந்த பார்வையாளர்கள் அலுப்படைந்து, சோம்பல் முறித்து மாளிகையிலே அமர்ந்திருக்கிறார்கள். சிலர் குமுறுகிறார்கள், சிலர் ஆவலுடன் இருக்கிறார்கள்

பிரதம அதிதி நாடகமே தரமில்லை என்று சொல்லி முடித்தாயிற்று, இருந்தும் முப்பது வருட உழைப்பு, துயரம், முயற்சிக்காக ஏதாவது பரிசு கொடுத்துதான் ஆக வேண்டும் என்று நடுவர்கள் கூறுகின்றார்கள்.

இப்போது எல்லாப் பார்வையாளர் மத்தியிலும் எழும் வினா பிரதம அதிதி என்ன பரிசு தரப்போகிறார் என்பதே....

# பெண் மொழி

பெண்ணுக்கான சுதந்திரமும், ஒதுக்கீடுகளும் வெறு வார்த்தைகளிலே எழுதப்பட்டுள்ளது. பெண்ணை மனுசியாக, ஒரு ஜீவியாக எந்த அற்பங்களும் கணக்கில் எடுப்பதில்லை. பிள்ளைப்பேற்றுக்காகவும், சமையற் கட்டுகளுக்காகவும், கலவிக்காகவுமே பயன் படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. அவளுக்கென்றொரு வாழ்க்கை, அவளுக்கென்றொரு உலகமெல்லாம் தட்டிப்பறிக்கப்பட்டே வந்திருக்கிறது. இந்த வாழ்வியல் போராட்டத்தை அவர்கள் எழுத்தின் ஊடாகவே, பிற கதவுகளையும், புதிய உலகத்தையும் திறக்க முயல்கின்றனர். அப்படி முயல்கின்ற எழுத்துக்களையும் ஆண் எழுத்தின் அதிகாரம் பாலியல் எழுத்தாளியென கற்பிதங்களைக் கையாள்வதும் நடந்தே வருகின்றன.

இந்தப்பின்னணியில் பெண்கள் சிறப்பிதழாக இந்த இதழை உங்கள் முன் வைக்கின்றேன். பெண்மொழியின் வாசம் வீறு கொண்டு எழட்டும்.

* * * *

படைப்புக்காக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொடர்பு கொண்ட போது படைப்புக்கள் வந்து சேர்ந்த போதிலும் சிறு கதைக்கான படைப்பூக்கம் கனதி கொள்ளாத காரணத்தினால் பெண் கதை சொல்லிகளை இவ்விதழில் பதிவு செய்ய முடியாது போனது. எனினும் நல்ல கதை சொல்லிகள் மேற்கிளம்ப வேண்டிய தருணம் இது, கதை சொல்லிகள் கவனத்தில் எடுப்பார்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான்கு பெண்களுடனான உரையாடல்

**மலர்ச்செல்வன்**

இன்று பெண் எழுத்து, பெண்மொழி சார்ந்த பேச்சுக்கள் மிக முக்கியமான ஒரு காலகட்டம். பெண் சார் செயற்பாடுகள் இன்று தமிழ் நாட்டில் உக்கிரமாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. இங்கு எப்படி உள்ளது? ஈழத்தில் 80களில் இருந்த உச்சம் இன்று இல்லாத்தன்மை ஏன் ஏற்பட்டது? எழுதிய பெண்கள், ஏன் எழுதாமல் போனார்கள்? அதற்கான பிரச்சினை என்ன? ஆண் எழுத்து, பெண் எழுத்து என்று பார்க்கப்படும் பார்வை சரியானதா? இவை பற்றிய உரையாடலே இது. அதில் பங்கு பெற உங்களை அழைக்கின்றேன்

**உருத்திரா:** எழுத்து மொழிசார்ந்த பிரச்சினை யாகவே அமைகின்றது. என்னுடைய அனுபவம் என்பது நாம் வைத்திருக்கின்ற எழுத்துக்கள் யாருடையவை என்பதாகும். உதாரணமாகக் குறிப்பிட்டால் பெண் சஞ்சிகைக்கு கட்டுரை ஒன்றைப் பெறுவதற்காக மண்டூர் அசோகாவை அணுகியபோது "பெண்ணுக்குக் கட்டுரை தருவ தென்றால் பெண்ணுக்கென்று எழுத வேண்டுமே" என்னும் கருத்தில் அசோகா குறிப்பிட்டார். இந்தக் கருத்து தருவதான பிரச்சினை என்பது மொழி சார்ந்ததா, விடயம் சார்ந்ததா என்பது எனக்குப் புரியவில்லை. அத்தோடு இன்னுமொன்றையும் அசோகா குறிப்பிட்டார். பெண்ணின் உணர்வுகள் சார்ந்து, பெண்களுடைய உடலங்கங்கயையும், உறுப்புக்களையும் நேரடியாகக் குறிப்பிட்டு எழுதப்பட்டு வெளிவருகின்ற, குறிப்பாக தென்னிந்தியாவில் இருந்து வெளிவரும் சில படைப்புக்களில் ஆபாசத்தன்மை இருப்பதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகின்றார். இன்று நாம் நவீன இலக்கியம் என்று பேசிக்கொண்டிருக்கின்ற திசையில் இத்தகைய ஆபாச சொற்களைத் தான் நவீன இலக்கியம் என்று நாம் வைத்துக் கொண்டிருக் கின்றோம். இன்னொருபுறம் நவீன இலக்கியத்தில் இயங்கிக்கொண்டிருப்பவர்கள் குழு ரீதியானதாக வேறுபட்டு நிற்பதும் உண்டு. எழுதுபவர்க ளுக்கிடையே மட்டும் விளங்கும்/ விளங்கிக்கொள்ளும் ரகம், இன்னொருபுறம் 'பெண்ணே புறப்படு' என்று ஆரம்ப நிலையில் எழுதுபவர்களும் இருக்கின்றார் கள். ஆகவே எழுதுவது ஒரு இயக்கமாக தொடர்ந்து நடந்துகொண்டுதானி ருக்கின்றது. எந்த மட்டத்திலும் சரி கீழுக்கோ, மேலுக்கோ நடந்து கொண்டு தானுள்ளது. எனினும் எனக்கு விளங்கிக் கொள்ளக் கூடியதாகவிருக்கின்ற ஓர் அம்சம் என்னவெனில் மொழியைப் பயன்படுத்துவதில் உள்ள பிரச்சினையே ஆகும். அதாவது எனக்கு விளங்கவில்லை என்பதால் மிகச்சிறந்ததென்றோ, அல்லது அடி மட்டமான ஒரு வாசகனை சென்றடை யாமலுள்ளது ஓர் சிறந்த படைப்பு அல்ல என்றும் நான் கருதலாமா என்பது எனக்குப் பிரச்சினை.

பெண் மொழியில் எப்போதும் எழுதுவது, எழுதாமல் விடுவது, ஈடுகொடுக்க முடியாமல் போவது என்னும் மூன்று பிரச்சினைக்கும் மொழிதான் காரணம் என எண்ணுகின்றேன். மொழியைப் புரிந்துகொள்வதில் உள்ள பிரச்சி னைதான் - பெண் சார்ந்த எழுத்துத் தொடர்பான பிரச்சினையாக மாறுகின்றது எனலாம்.

இன்னும் குறிப்பிட்டால் இந்துப் பாரம்பரியத்தில் உள்ள சமய இலக்கியங்களில் குறிப்பாக சித்தர் பாடல்களில் இவர்கள் குறிப்பிடும் ஆபாசமான சொற்கள் விரவியிருக்கின்றது. அருணகிரிநாதர் தொடங்கி அகப்பைச் சித்தர் வரையானவர்களின் பாடல்களில் பெண்ணுறுப்பை கூவம் என்றும், கூவத்தில் விழுந்து கரையேறி வந்தேன் என்று பாடும் மிக இழிவான வரிகளும் வந்திருக்கின்றன. ஆனால் சல்மா எழுதத் தொடங்கினாலோ, இந்தியாவிலோ, இலங்கையிலோ வேறு யார் எழுதத் தொடங்கினாலோ நாம் பொத்தி மூட வேண்டியுள்ளது. பெண் சார்ந்த பெண் குறியீடு சார்ந்த உணர்வுகளை வெளியிடத் தகுந்ததான வேறு சொற்கள் எதனையும் நாம் வைத்திருக்காத நிலையில் பெண்மொழி என்பது இது சார்ந்த பிரச்சினையாகின்றது. இது என் பிரச்சினையாகவும் மாறுகின்றது.

**விஜயலட்சுமி:** உருத்திரா குறிப்பிட்ட பிரச்சினையானது விளங்க வைப்பதிலிருந்து தொடங்குகிறதா? அல்லது விளங்கிக்கொள்வதிலிருந்து தொடங்குகிறதா? என்பது எனக்கு தெரிய வில்லை. நான் பெண் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் சேர்க்கின்ற போது - 'பெண்ணுக்கா? எப்படி எழுதுவது?, பெண்ணுக் கென்றால் நான் எப்படி எழுதவேண்டும்? என்று எழுத்துத் துறைக்கு வருபவர்கள் கேட்கும்போது அந்த மொழி வகையை விளங்கப்படுத்தவேண்டி ஏற்படுகின்றது. இது எனக்குப் பிரச்சினையாகின்றது. புதுச்சொற்களைத் தேடி, புது விடயம் ஒன்றை எழுதுவது போன்ற எண்ணப்பாடு ஓர் பிரச்சினையானதுதான். உண்மையில் எழுதப்படும் விடயம் ஒரு பொது விடயம் தான். அது பொதுவானதும் கூட. இந்தப் பொது விடயம் ஒரு நாடகமாக அல்லது வேறு ஓர் உரை வடிவமாக கூட வரலாம். அது வெளிப்படும் ஊடகத்தின் தன்மையைப் பொறுத்து அமைவதேயன்றி அது பிரித்துப் பார்க்கப்படுவதென்பது தேவையில்லாதது என்றே எனக்குத் தோன்றுகின்றது. விடயம், மொழி என்ற வேறுபாட்டைத் தவிர்த்து என்ன சொல்லப்படு கின்றது என்ற அம்சத்தை மட்டுமே கவனிக்க வேண்டும்.

இதில் இன்னுமொரு சிக்கலும் உள்ளது. இத்தகைய பெண்சார்ந்த பெண் மொழியில் எழுதப்படும் படைப்புக்கள் வெளிவரும்போது நிர்ப்பந்தமாகவும் சில சொற்கள் சேர்க்கப்படுகின்றன. இது அவசிய மற்றது. இத்தகைய படைப்புக்களில் இது ஓர் நிர்ப்பந்தமாகி இந்தக் கட்டத்தில் இந்தச் சொற்களைப் பிரயோகிப்பது என்பது அடுத்ததொரு பிரச்சினையாகப் போய்விடுகின்றது. இந்த நிர்ப்பந் தத்தில் சேர்க்கப்படுகின்ற சொற்கள் ஒரு கட்டத்தில் எல்லோராலும் பயன்படுத்தப்பட்டு, பேசப்பட்டு, சிலகாலம் சென்ற பின்னர் பழைமையடைந்து விடுகின்றது. இவ்வாறு நிர்ப்பந்தத்தில் சேர்க்கப்பட்டு வெளிவரும் ஆக்கம் உண்மையில் ஓர் ஆக்கம் இல்லை. இயல்பாய் வருவதே ஆக்கம். இனி இவற்றின் அடிப்படையில் எழுதப்படுவதுபற்றி கதைக்க வேண்டும். பின்னர் பேசலாம் என நினைக்கின்றேன்.

**அனார்:** பெண்மொழி, பின்னர் பெண் எழுத்துக்கள், பெண்ணுடைய ஆக்கங்கள் அதனுள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்ற பெண் என்ற அடிப்படையில் என்னமாதிரியான விடயங்களைப் பேசுவது என்பது பற்றி பார்க்கின்ற போது அனேகமான சந்தர்ப் பங்களில் ஒரு தீர்மானத்திற்கு வரமுடியாது. பெண் பெண்ணாக நின்று வெளிப்படுத்தும் படைப்புக் களின் நியாயங்களும், பெண் எழுத்தை வாசிப்போர், பெண் எழுத்தை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று கருதும் நியாயங்களுக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. எனவே நாங்கள் நினைக்கும் சரியான விஷயங்களையே மற்றவர் களும் நினைக்க வேண்டும் என்பதில் எந்தக் கட்டாயமும் இல்லை. ஆனால் பெண் என்று வரும்போது, எழுதும் போதும் அவற்றில் உறுதியாக இருக்க வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அதில் நாம் உறுதியாகவே இருக்க வேண்டும். மற்றவர்கள் என்ன சொன்னாலும் கூட. அதாவது எது பெண்ணுக் குச் சரியானதாகவோ, நியாயமானதாகவோ படுகின்றதோ அதனைச் சரியானதாகவே செய்ய வேண்டும்.

இந்த வகையில் வெளியில் எழுதுபவர்கள் குறிப்பிடும் ஆபாசம் சார்ந்த சொற்கள் என்ற விடயத்தை அடியோடு மறுக்கின்றேன். பெண்கள் எந்தவொரு ஆபாசத்தையும் வலிந்து எழுதுபவர்கள் அல்ல. அவர்கள் தங்களுக்குச் சொந்தமான தங்களது உடலை கொண்டாடவே செய்கின்றார்கள். இவ்வாறு தங்களுக்குச் சொந்தமான உடலைக் கொண்டாடக் கொண்டாட மேம்படும் அவள் தனது இரண்டாம் நிலையிலிருந்து வெளியில் வருவாள். நான் எழுதும்போது கூட எனது உடலை நான் விரும்புவதும், மதிப்பதும் ஒரு காரணம். அந்த அடிப்படையில்தான் நான் கவிதை எழுதுகிறேன். அதாவது என்னுடலைக் கொண்டாடிக்கொண்டு, மதித்துக்கொண்டு அதேசமயம் எனது உணர்வுகளை நான் மிகவும் மரியாதை செய்கிறேன். அதே விடயத்தை எழுத்தில் நான் கொண்டு வரும்போது ஒரு ஆண் சமூகம் வித்தியாசமாகப் பார்க்கின்றது. இது எமக்குச் சொந்தமான உடலை நான் எழுதுவதே ஆண் சமூகத்திற்கு பிரச்சினை யாகின்றது. அவன் படைப்பை ஓர் மலினமான சினிமாப் பாடலாகவோ அல்லது ஒரு வக்கிரமான கலை ஊடகமொன்றின் ஊடாகவோ கொண்டு வருவதனைவிட நாங்களே எங்கள் விடயத்தை சொல்ல வருவது பிரச்சினையாகின்றது. ஆண்க ளின் உலகம் மிகவும் தட்டையானது. அவர்க ளும்கூட தட்டையானவர்கள். காரணம் பெண்களுக் கென்றே உள்ள சில விசேஷத் தன்மைகள் என்ப வற்றை ஒருவித பொறாமைத் தன்மையோடுதான் பார்க்கின்றார்கள். இது ஆண்களின் பிரச்சினை யல்ல. அவ்வாறு பழக்கப்படுத்தி விட்டார்கள். எனவேதான் இத்தைகைய விடயங்களைத் தொடர்ச்சியாகச் செய்கின்றபோதுதான் அதன் நியாயங்கள் விளங்கும். அதற்கு நிறையக் காலங்கள் எடுக்கும். இப்போதுள்ளது ஒரு கலகமான காலம். ஒரு விமர்சனமயமான காலமாக இருந்தாலும், காலம் போகப் போகப் பெண்களின் எழுத்துக்களிலுள்ள நியாயங்களும், அதிலுள்ள கொண்டாட்டங்களும் அவர்களுக்குக் கூட விளங்குவதற்கு நியாயம் உள்ளது.

அதுமட்டுமல்ல நான் கூற வருவது மொழியில் உள்ள பிரச்சினை. எழுதவரும் பெண்ணுக்கு மொழி பெரிய பிரச்சினையாகவுள்ளதா என்பதைப் பற்றி எனக்குக் கூறத் தெரியவில்லை. ஏனெனில் மொழி என்பதில் ஆண்மொழி, பெண்மொழி என்றோ அல்லது ஆண்களுக்கான மொழி, பெண்களுக்கான மொழி என்றோ இல்லை. மொழியைக் கையாள் வதில் உள்ளது. மொழி ஓர் பெரிய விஷயமாகும். சிலவேளை மொழியின் போதாமைகளிருந்தாலும் பெண்ணானவள் பெண் மொழியை இன்னும் வளர்த்துக்கொள்வதற்கான வாய்ப்புக்களையே கொண்டிருக்கின்றது. அது இப்போதுதான் ஆரம்ப நிலையிலுள்ளது. பெண்சார்ந்த விடயங்களைக் கொண்டு அது வெளிவருவதால் குறிப்பாக இப்போது எழுதுகின்றவர்களில் அம்பை போன்றவர்களின் மொழி மிகவும் வித்தியாச மாகவுள்ளது. வேறுபாடுகளைக் கொண்டுள்ளது. அதேபோல் தமிழ் நாட்டில் எழுதும் மாலதி மைத்திரேயி, சுகிர்தராணி போன்றோர் துணிச்சலோடு பலவிடயங் களை எழுதுவதால்தான் பின்னர் அதனை (பெண்ணுணர்வு) ஒட்டியபடி பலவிடயங் களை நாம்கூட எழுதமுடிகின்றது.

**மலர்ச்செல்வன்:** நீங்கள் சொல்வதிலிருந்து நோக்கினால் பெண்மொழி என்பது ஆரம்ப நிலையில் இருந்து முதிர்ச்சியடைந்த பின்னர்தான் அது பெண் எழுத்தாக மாறுகின்றது என்று கூறுகின்றீர்கள். இது எந்தளவு சாத்தியமானது?

**உருத்திரா:** எனக்கு இதனை எங்கு தொடங்கி கூறுவதென்று தெரியவில்லை. பெண்மொழி என்று நாம் கதைக்கின்றபோது, மொழியென்ற ஒன்றைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொது வானதாகப் பார்ப்பதற்கும், எமது எண்ணங்கள், கருத்துகள், தேவைகள், விருப்பங்கள், பிரச்சினைகள் என்பவற்றை வெளியிடுவதற்குப் பயன்படுகின்ற சொற்கள்தான் பிரச்சினை. சொற்களூடாக மொழி பிரச்சினையாகின்றதா என்பது எனக்குப் புரியவில்லை. சொற்களை தீர்மானிப்பதும், வடிவமைப்பதும், சொற்கள் யாருடையவை என்பதும்தான் பிரச்சினை. எனவே சொற்கள் முதிர்ச்சியடைய வேண்டும் என்பதும், அது வளரவேண்டும் என்பதுமான இந்தக் கருத்துக்கள் எனக்கு விளங்கத்தக்கதாகவில்லை.

ஏனெனில் ஒரு அனுபவத்தைக் கூர்மையாக்கும் போது ஓர் ஆரம்ப நிலையிலுள்ள ஓர் படைப் பாளியும் முதிர்ச்சியான சொற்களோடு வரலாம். பிரச்சினை இதிலில்லை. அனுபவத்தை கூர்மை யாக்க கூர்மையாக்கவே மொழி முதிர்ச்சியானதாக வெளிவரும். ஆனால் இந்த கூர்மையான அனுபவ வெளிப்பாடுதான் மொழியை பிரச்சினையான தாக்கியுள்ளது என்று நான் கருதுகின்றேன்.

**மலர்ச்செல்வன்:** அண்மைக்காலத்தில் பேசப்படு கின்ற பெண்மொழி சார்ந்த பிரச்சினை பற்றிக் குறிப்பிடும் போது, தமிழ்நாட்டில் எழுதுகின்ற சல்மா, சுகிர்தராணி, குட்டி ரேவதி போன்றோர் நிர்ப்பந்த மாகவே ஆபாசமாக குறிப்பிடப்படுகின்ற சில சொற்களைப் படைப்புக்களில் சேர்த்து அதனைப் பெண் மொழியாக்குகின்றனர் என்ற விமர்சனம் ஒன்று வெளிவந்தது. இது பற்றிய கருத்துக்களை எவ்வாறு எடுத்துக்கொள்ளலாம்?

**விஜயலட்சுமி:** கவிதை செய்பவர்களுக்குத்தான் இது மாதிரியான பிரச்சினை இருக்கின்றது. இப்படிப் பார்ப்பது ஒவ்வொருவரினதும் பார்வையைப் பொறுத்தது. சில சொற்களை அதன் தேவைப்பாடுகள் கருதி அதனைப் பயன்படுத்தவேண்டியிருக்கும். அதற்காக அதனை வேண்டுமென்றோ, நிர்ப்பந்தமா கவோ செய்கின்றார்கள் என்று கூற முடியாது.

**அனார்:** பெண் 'முலைகளை' முலைகள் என்று குறிப்பிடாமல் அதனை வேறு எப்படி குறிப்பிடுவது? பெண்கள் தங்களது உடலை, உடல் உறுப் பொன்றை முலைகள் என்று குறிப்பிட்டால் அது பிரச்சினையானது. ஆபாசமானது. ஆனால் பெண்களது உறுப்புக்களை பற்றி ஆண்கள் குறிப்பிட்டால் அது பிரச்சினையானது அல்ல. ஆபாசமானது அல்ல. தப்பானது அல்ல.

**விஜயலட்சுமி:** முலை என்ற சொல்லையோ, அல்லது ஆண்கள் கருதும் ஆபாசமானது என்ற வகைச் சொற்களையோ ஏன் வேறு கண்ணோட்டத்தில் பார்க்கவேண்டும்? சொற்களை அவை கொண்டுவர முயலுகின்ற விடயத்தை, சார்ந்ததாக, தேவை சார்ந்ததாகப் பார்க்காமல் ஏன் வேறு வகையாகப் பார்க்கப்படுகின்றது?

**அனார்:** சிறு பராயத்திலிருந்தே இப்படியான உறுப்புக்களை பெயர் சுட்டி அழைப்பதனை நாம் விலக்கியே வந்திருக்கின்றோம். குழந்தைகள் முதல் அதனைத் தவிர்த்தே வந்திருக்கின்றோம். மட்டுமன்றி சபையில் பேசுவதனையும் அப்படியே தவிர்த்திருக் கின்றோம். 'கண்'ணை கண் என்று பேசுவத னையோ, மூக்கென்று பேசுவதனையோ போன்று முலைகள் என்று பேசுவதில்லை. அது எவ்வாறு எண்ணப்பட்டது என்றால் அது மறைவானதாக மர்மமானதாக பேசுவதற்குத் தகாததாக, கீழானதாக பேசப்பழக்கப்பட்டு வந்த சூழலில் நாம் திடீரென எழுதுவதற்கு வரும்போது, அல்லது எழுத்துக்குள் கொண்டு வரும்போது ஆண்கள் அவர்கள் பழக்கப்பட்ட கண்ணோட்டத்திலிருந்துதான் அப் படைப்புக்களைப் பார்க்கின்றார்கள். இதனால் வரும் பிரச்சினைதான் இது. அல்லாமல் எழுதுபவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினை இல்லை இது. இது விளங்கிக் கொள்வதிலிருந்து, புரிந்துகொள்வதிலிருந்து உருவாகின்ற பிரச்சினைதானேயல்லாமல் வேறு பிரச்சினையல்ல.

**உருத்திரா:** பெண் எழுதத் தொடங்குகின்றபோதே மொழி பிரிக்கப்பட்டு விடுகின்றது ஆண்களின் பார்வையில். அதனால் பெண் எழுதுவதனால் அது பெண்மொழி என்று பார்க்கப்பட்டு, பிரச்சினையாகின்றது. ஏனெனில் மொழிசார்ந்த பிரச்சினைக்கான எதிர்ப்புக் குரல்கள் ஒருபோதும் பெண்களிடம் இருந்து வரவில்லை.

அக்குரல்கள் முதலில் வெளிப்படுவது ஆண்களிடமிருந்துதான் வருகின்றது. பெண்கள் எதிர்ப்புக் குரல்கள் எழுப்பாத போது, இது புலப்படுகின்றது. அப்படியானால் நாம் வைத்திருக்கின்ற சொற்கள் யாருடையவை என்பது பிரச்சினைக்குரியதொன்றாகவல்லவா உள்ளது?

**விஜயலட்சுமி:** அதுதான் பார்வை சார்ந்து எழும்பும் ஓர் குறிப்பிட்ட வட்டத்தினரின் போதாமையை முழு தொகுதியினருக்கும் உரியதான ஓர் பொதுப் பிரச்சினையாக்க முற்படுகின்றனர். எனவேதான் பார்வை சார்ந்த பிரச்சினையென்பதனை நாம் பெண் மொழிசார்ந்த பிரச்சினையாக்கத் தேவையில்லை என்றே கருதுகின்றோம். இது ஒட்டுமொத்தமான எழுத்துலகு சார்ந்த பிரச்சினையல்ல.

**மலர்ச்செல்வன்:** எதிர்ப்புக் குரல்கள் ஆண்களிடமிருந்து வருவது தொடர்பாக நான் சில மறுப்புகளைக் கூறலாம் என எண்ணுகின்றேன். சரிநிகரில் கோணேஸ் வரிகள் - என்னும் கவிதை கலாவினால் எழுதப்பட்ட போது பெண்கள் சொற்கள் தொடர்பாக அதிகமான எதிர்வினைகளை வெளியிட்டவர்கள். பெண்களே!

**சித்திரலேகா :** இது இரண்டுவிடயங்களைக் கொண்டிருக்கிறது. ஒன்று அக்கவிதை வெளிவந்த காலகட்டம், மற்றது விடயம் சார்ந்தது. அதாவது 1997 காலப் பகுதியில் கலாவின் கவிதை வெளிவந்திருந்தது. நான், ஜெயந்தி, கமலினி போன்றோரும், பின்னர் ஓட்டமாவடி அறபாத் போன்றோரும் சில எதிர்கருத்துக்களை வெளியிட வேண்டி வந்தது. காரணம் கவிதையிலிருந்தசொற்கள் அல்ல. "எமது சிங்களச் சகோதரிகளே உங்கள் யோனிகளைத் திறந்து வையுங்கள்" என்னும் வரிகளிலிருந்த இனவாதத் தன்மைமிகுந்த, பெண்களில் பிரிவினையைத் தூண்டும் விளிப்பே, அதாவது இனத்துவ ரீதியான கருத்தே அன்றி மொழிப் பிரயோகம், தொடர்பான பிரச்சினைக்காக அல்ல. எமது கோபம் சிங்களப் பெண்களை விரோதிகளாகப் பார்க்கின்ற தன்மையும், அந்தக் காலகட்டம் தொடர்பான போதிய விளக்கமில்லாமல் வந்தது என்பதனால்தான். சொல்லுக்காக அல்ல பொருளுக்கான கோபமே எமது வெளிப்பாட்டுக்குக்காரணம். இது தொடர்ந்து பலருக்கு இடமளித்த விவாதமாக இருந்து பல எதிர்க்கவிதைகளும் வெளிவந்தன. இறுதியாக கமலினி ஓர் கடிதம் எழுதியிருந்தார். அத்துடன் சரிநிகரில் அந்த விவாதம் முடிவுற்றது. இத் தொடர் விவாதத்தை அவதானித்தால் இது மொழி தொடர்பான பிரச்சினை அல்ல. அது நிலைப்பாடு தொடர்பானது. குறிப்பாக பெண் அரசியல் நிலைப்பாட்டுடன் தொடர்புடையது. பெண் அரசியல் என்பது தனிப்பட்டவர்கள் பேசுகின்ற அரசியல் அல்ல. பெண்கள் இயங்குவதும், செயற்படுவதும் தொடர்பான ஓர் விடயமே பெண் அரசியலாகும். நான் கட்சி அரசியல் பற்றிச் சொல்லவில்லை.

பெண்கள் இயக்கம் பெண் செயற்பாடு தொடர்பான, குறிப்பாக இந்நாட்டில் இக் காலகட்டத்தில் பெண்கள் பிரச்சினை தொடர்பாக அதிலும் தமிழ்ப் பெண்கள் தொடர்பாக அரசியல் சூழலிருந்த பிரச்சினைகள் தொடர்பாக பல முஸ்லிம், சிங்களப் பெண்களும் சரி, ஆண்களும் சரி எமது செயற்பாட்டில் இணைந்து வந்திருக்கின்றார்கள். பல சிங்களப் பெண்கள் இனவாதிகளாக இருக்கின்றார்கள் என்பது சரியெனும் அத்தகைய சூழலில் நாங்கள் தொடர்ந்து இயங்கினோம்.

இந்தச் சூழலில், அதேவகையான கருத்து இருந்த சரிநிகரில்தான் சிறிய சிறிய வேலைகளைச் செய்துகொண்டிருந்தார் கலா. எனவேதான் கலாவின் கவிதை தொடர்பான பிரச்சினை என்பது மொழி தொடர்பான பிரச்சினை அல்ல. இதனைத்தான் நாம் (செல்வி திருச்சந்திரன், ஜெயந்தி, நான், கமலினி) நோக்கினோமே தவிர வேறில்லை. பின்னர் என்ன நடந்ததென்றால் ஓட்டமாவடி அறபாத் எழுதிய கவிதையை எடுத்துப் பார்த்தால் அக்கவிதையிலிருக்கும் அரசியல், அந்த அரசியல் பார்வைபற்றி நாம் முரண்பட்டோம் இதனையும் உள்ளெடுத்து குறிப்பிட்டே கமலினி எழுதினார். எனவேதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிதொடர்பாக பெண் எதிர்ப்புக் குரல் தொடர்பில் இப் பிரச்சினையை / சம்பவத்தை நீங்கள் இவ்விடத்தில் குறிப்பிடுவது அவ்வளவு பொருத்தமானது அல்ல என்றே நான் நினைக்கின் றேன். மொழி தொடர்பாக இது ஒரு விடயம்.

மற்றது குட்டி ரேவதி தனது படைப்புக்களை வெளியிட்டதிலிருந்து அவருக்கு நிகழ்ந்த அநியாயங்களைப்பற்றி நிறைய விடயங்களை அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் தமிழ் நாட்டின் கவிதைப் போக்கை நீண்ட காலமாக நான் அவதானித்து வருவதோடு, அண்மையில் ஐந்தாறு மாதங்கள் அங்கு தங்கியிருக்கும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தமையினால், இந்த அடிப்படையில் பலரைச் சந்திக்கவும், செயற்பாடுகளை அவதானிக்கவும் சில வாய்ப்புக்கள் கிடைத்தன. குட்டிரேவதி, மாலதி மைத்ரி அவர்களைத் தவிர இளம்பிறை, சுகிர்தராணி, போன்றோரின் கவிதைகளை படிக்கவும், கூடியதாகவிருந்தது.

மொழிக்கு குறிப்பாக தமிழ்மொழிக்கு 2000 வருடப் பாரம்பரியம் உள்ளது. வரலாறு உள்ளது. அத்தகைய தமிழ்மொழியின் வரலாற்றையும், இலக்கணத்தையும் வடிவமைத்தவர்கள் ஆண்கள். குறிப்பாக எழுத்துமொழியைச் சொல்லலாம். மொழியென்பது வெறும் மொழியல்ல. அது பேச்சு மொழி, எழுத்துமொழி என்னும் வடிவங்களைக் கொண்டது. பேச்சுமொழியில் கவிபாடுகின்ற பெண்களும் இருக்கின்றார்கள். எனவே மொழி என்பது பொதுமொழியல்ல என்பது என் கருத்து. எனவே ஆங்கிலமோ, தமிழோ, சிங்களமோ அது பொது மொழியல்ல. ஆண்மொழியென்றும், பெண் மொழியென்றும் அதனுள் இருக்கின்றது. நாங்கள் பேசுவது ஆண்களின் மொழியைத்தான். ஏனெனில் நன்னூல் கற்பித்ததும், தொல்காப்பியம் கற்பித்ததும் அந்த மொழியை, பெண்களுக்கு மொழி விலக்கியே வைக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக முலைகள் என்று கூறமுடியாதது போல், பாலுறுப்புக்களை சொல்ல முடியாதது போன்றதுதான். ஆனால் தூஷணத்தில் சொல்லலாம். எழுத்தில் சொல்ல முடியாது. அவ்வாறு பெண்கள் கூறினால் ஆட்டக்காரி அல்லது ஒழுக்கம் இழந்தவள். எனவே இவற்றை யார் சொல்கிறார்கள் என்று பார்த்தால் ஆண்கள்தான் சொல்கின்றார்கள். அதாவது ஆண்மனோபாவம்தான் இவ்வாறு கூறுகின்றது.



ஆண் பார்வைதான் அது. அத்தகைய ஆண் பார்வையை பெண்களும் உள்வாங்கிக்கொண்டி ருக்கிறார்கள். இதை 'அகப்படுத்திய' பார்வை, அல்லது கருத்து *(Ideology)* எனலாம். அதாவது எங்களுக்குள்ளாலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டு விடும் கருத்து.

ஆகவேதான் மொழியில் வித்தியாசம் உள்ளது. எனினும் மொழி தொடர்பான பிரச்சினை வந்தபிறகு, ஆண்மொழி, பெண்மொழி என்பதனை விட, சுதந்திரமாக மொழியை நாங்கள் கையாளலாமே தவிர, எப்போதும் முலைகள் என்று மட்டும் எழுதிக் கொண்டிருக்கமுடியாது. அதுமாத்திரம் பெண் மொழியல்ல.
இரண்டாவது விடயமாக, (அவரவர் சுதந்திரம் என்பது, பெண்கள் அமைப்புகளோடு இயங்கலாம், இயங்காமல் விடலாம், வெளியிலிருந்தும் பெண்கள் தொடர்பாக எழுதலாம். இது வேறுவிடயம)் நாம் ஒரு விடயத்தைச் சொன்னால், அதனை நாமே பொறுப்பெடுக்க வேண்டும். தொடர்ந்து அது தொடர்பாகச் செயற்படுவதற்கு முயலவும் வேண்டும். ஆனால் தமிழ் நாட்டிலிருக்கும் பெண்மொழி தொடர்பான விவாதத்தில், சிலர் பொறுப்பில்லாமல் நடந்து கொள்வதனையே நான் காண்கிறேன். இது என்கருத்து மட்டுமே. ஏனெனில் நான்பார்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் தமிழ் நாட்டில் எங்களின் அளவுகூட, பெண்கள் செயற்பாடுகள் என்பது ஒன்றுகொன்று ஆதரவு அளிப்பதாக, ஒற்றுமையானதாக உள்ளவை அல்ல. தனித் தனியாக இயங்குவதாகவேயுள்ள ஒரு நிலமையையே அங்கு காணமுடிகின்றது.

பெண்மொழி பற்றிக் கதைப்பவர்கள் வேறாக, தனித்து இயங்குகின்றார்கள். சிலசமயம் அவர்கள் வெளிப்படுத்துகின்ற கவிதைகள் சாதாரண மனிதர்களின் வாழ்நிலையோடு ஒட்டாமல் வெளிவருவனவாகவே உள்ளது. இது என்னுடைய அபிப்பிராயம். உங்களுக்கு வேறு அபிப்பிராயம் இருக்கலாம்.

மாலதி மைத்திரியை பொறுத்தவரை அவர் ஏதோ ஒரு பெண் அமைப்புசார்ந்து (சுனாமியினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சார்ந்த) வேலை செய்கின்றார். குட்டிரேவதி ஓர் ஆயுள்வேத வைத்தியர். அத்துடன் திரைப்படத்துறையில் இயங்குகின்றார். அவரின் திறமைகளோடு அவர் தனித்து இயங்குகின்றார். "பனிக்குடம்" என்ற சஞ்சிகையை வெளியிடுகின்றார். மாலதி மைத்திரி அணங்கு சஞ்சிகையை வெளியிடுகின்றார். எனவே அவர்கள் ஒன்றிணைந்து செயற்படுவதென்று நாம் கருதுவதில், அவர்களின் நாட்டில் சூழல்கள், நிலமைகள் கூட வித்தியாசமாக / வேறானதாக விருப்பதும் காரணமாகலாம். எங்களுடைய நிலமைகள் அங்கு இல்லை.

அதாவது ஒருவரை ஒருவர் தூண்டி இணைந்து இறுக்கமாகச் செயற்படத்தக்க நிலமைகள் இல்லாமலும் இருக்கலாம். இதனால் அவர்களுடைய செயற்பாடுகள் எங்களுடைய செயற்பாடுகளிலிருந்து வேறுபட்டிருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். எனவே நீங்கள் குறிப்பிட்ட அல்லது கதைத்துக்கொண்டிருக்கின்ற விடயம் தொடர்பாக எதற்குமே நேரடிப்பதில்களைப் பெறமுடியாது. என்னுடைய கருத்து என்னவென்றால் எந்தக் கேள்விக்கும் நேரடிப்பதில் என்ற ஒன்று இல்லை என்பதுதான். அதுபோலவே பெண்மொழி என்பது மிகச் சிக்கலான விஷயம் அது அவரவர் பார்வையையும், நியாயங்களையும் பொறுத்தது.

**மலர்ச்செல்வன்:** அப்படியானால் நீங்கள் குறிப்பிட்ட அடிப்படையில் நோக்கும் போது பெண்மொழி சார்ந்த சொற்களை ஆபாசம் என்று சமூகம் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கருதுகின்றீர்கள். ஆனால் தமிழ் இலக்கியவரலாற்றில் ஆண்டாள், ஔவையார், வெள்ளிவீதியார் போன்றோரது பாடல்கள், கவிதைகளை சமூகம் ஏற்றுக் கொண்டிருக்கிறதே?

**அனார்:** அவை கடவுளைப்பற்றிய பாடல்கள் என்றுதான் அனுமதித்திருக்கிறார்கள். அதனையே ஓர் ஆணைநோக்கிப் பாடுகின்றேன் என்றோ, ஆணை நோக்கியோ பாடப்பட்டிருந்தால், பாடமுயன்றிருந்தால் அதனை சமூகம் அங்கீகரித்திருக்காது

**சித்திரலேகா:** கடவுளைப் பொறுத்த விடயங்களில் - கடவுள் ஆண் தன்மையானதாக, ஆண் கடவுளாக இருப்பதனால் பெண்கள் தம் காதல், பாலுணர்வுகள் சார்ந்து பாட அனுமதியளித்திருக்கலாம். ஆனால் தெய்வீக நிலையில் பெண்கள், பெண்தெய்வ மூர்த்தங்கள் காளி, மாரி போன்ற உக்கிர வடிவங்களாகவே சித்தரிக்கப்பட்டிருக்கின்றது. கத்தி, கோடரி, வாள் போன்ற ஆயுதங்கள் தாங்கிய ஓர் கொடூரமான, கொலை வெறியுடன் கூட சித்தரிப்புக்களாகவே அமைந்துள்ளது. எனவே தேவர் உலகங்களிலும் வித்தியாசம் வைக்கப்பட்டுள்ளது.

அல்லது நடனம் ஆடும் ரம்பை, ஊர்வசி, மேனகை போன்ற பாத்திரங்களாகவும் தான் ஆக்கப்பட்டுள்ளது. கடவுள் ரூபங்கள் என வரும்போது பெண்களுக்கு காதல் இல்லை. அது வெட்டுக், கொத்து, அடி போன்ற அடாவடியானது.

**மலர்ச்செல்வன்:** ஔவையார் 'முட்டுவன் கொல் தாக்குவேன் கொல்...' என்று பாடக்கூடிய மாதிரியான சூழல் இருந்திருக்கின்றது என்றால், அவரின் பாடல்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றதென்றால், அதுபற்றி...

**சித்திரலேகா:** அந்தச் சமூகம் வேறுபட்டது மலர்ச்செல்வன். காலம் வேறுபட்டது. இந்தக் காலப்பகுதியில் தந்தை வழிக் கருத்துக்கள் நிறைய வளர்ந்துவிட்டது. முட்டு வேன்கொல், தாங்குவேன் கொல் என்பதல்ல, அந்தக் காலத்தில் கள்ளுண்ணுவது பற்றியும்தான் ஔவையார் பாடுகின்றார். அதாவது "சிறியகள் பெறினே எமக்கு ஈன மன்னே... .. பெரிகள் பெறினே எம்மொடுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர்ந்துண்ணும் மன்னே'', என்பதில் சிறியளவாக கள் கிடைத்தால் ஏனையவர்களுக்கு பகிர்ந்து வழங்கியும், பெரியளவில் கள் கிடைத்தால் தானும் உண்டு ஏனையவர்களுக்கும் வழங்கியும் செய்கின்ற மன்னனே என்பதுதான் இப்பாடலின் கருத்து. குறிப்பிட்ட ஔவையாரை நாம் கிழவியாகத்தான் பார்க்கின்றோம். ஆனால் அவரது பாடல்களைப் பார்த்தால் ஔவையார் ஓர் இளம் பெண்ணாக வேதான் தெரிகின்றார். நாடோடிகளாக பெண்புலவர்களும், ஆண்புலவர்களும் அலைந்த ஒரு காலகட்டம்தான் அது. எனவே அந்தமாதிரியான சமூகநிலை வித்தியாசம். இப்போது நாங்கள் 2000 ஆண்டுகள் கடந்து வந்து விட்டோம். இத்தகைய 2000 ஆண்டு காலப் பகுதிக்கப்பால் ஆணாதிக்கக் கருத்துக்கள் நம் இலக்கியத்தில் நன்றாக ஊறிவிட்டன.

காரைக்கால் அம்மையாரை எடுத்துப்பார்த்தால் அவரது உடலிலிருந்த தசைகளையெல்லாம் வழித்து எடுத்துவிட்டுத்தான் ஆளைவிட்டனர். எலும்புக்கூடுதான் காரைக்கால் அம்மையார். இது உண்மையாக நடந்ததா? இது கதை. அப்படி யென்றால் கதைக்குள் இருக்கும் கருத்து என்ன? அவர் தன்னுடைய உடலிலுள்ள வனப்பு *(Sexuality)* அவ்வளவையும் இழந்தால்தான் பொதுவெளியில் நடமாட முடியும். அவர் இறைவனின்மீது பக்தியாக இருக்கலாம். ஆனால் ஆண்டாளும், கன்னடப் பெண் கவி அக்கம்மாதேவியும் அவரிலிருந்து மிகவும் வித்தியாசம். ஆண்டாள் தன்னுடைய 15, 16வது வயதிலேயே கொண்டை போட்டு, பூ சூடிய பெண்ணாக வளர்க்கப்படுகிறாள். காரைக்கால் அம்மையார் போல் அல்ல. ஆனாலும் ஆண்டாள் கண்ணனைப் பற்றிப் பாடிய பாடல்கள் கோயில் களில் எத்தனை பாடப்படுகின்றது? திருப்பாவை மட்டும்தான் பாடப்படுகின்றது. நாச்சியார் திருமொழி பாடப்படுவதில்லை. இதேபோல் தான் காரைக்கால் அம்மையாரால் முதன்முதலாக உருவாக்கப்பட்டது விருத்தம். தமிழ் இலக்கியத்தில் முதல்முதலாக அதனைக் கொண்டுவந்த காரைக்கால் அம்மையாரின் பாடல்கள் திருமுறைகளில் பின்தள்ளப்பட்டு, தேவாரமுதலிகள் எனப்படுகின்ற அப்பர், சுந்தரர், சம்பந்தர் போன்றோர் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் 8ம், 9ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள்.

**மலர்ச்செல்வன்:** அப்படியென்றால் நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்? படைப்பிலக்கிய விமர்சன வாதிகளின் இக்குறைபாடுகளை நீங்கள் எவ்வாறு உடைக்கப்போகின்றீர்கள்/தகர்க்கப் போகின்றீர்கள்?

**அனார்:** அப்படியல்ல, உடைக்க வேண்டும் தகர்க்க வேண்டும் என்று யாரும் எழுதவரவில்லை. அந்த நோக்கத்தில் எழுதுபவர்களும் இல்லை. அப்படி யாக நோக்கில் எவராலும் எழுதுவதற்கும் இயலாது. முதலில் எழுதவருவது என்பது ஒரு கலைப்படைப் பொன்றை செய்யவேண்டும் என்றே வருகின்றனர். உதாரணமாக என்னுடைய உணர்வுகளை நான் வெளியிடும் போது அது வேறுபட்ட ஆயிரம் பெண்களின் உணர்வுகளாக இருக்கும். அதுதான் என்னுடைய விடயம். எனவே இதை எழுதி, மற்றையதை உடைப்போம் என்ற எந்தவொரு நோக்கமும் எங்களிடமில்லை.



**உருத்திரா:** எனக்கு எழுதத்தொடங்குவது என்பதே பிரச்சினையாக இருக்கின்றது. மலர்ச்செல்வன் நீங்கள் சொல்லுங்கள், நீங்கள் எழுதிய ''குறிநீளுகின்ற மரம்'' அந்தக் கதைக்கு எங்காவது எதிர்ப்பு வந்ததா? என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மலர்ச்செல்வன்:** எனது கவிதைகளும், கதைகளும் விளங்காத்தன்மையால் பிரச்சினையாகிறது. எனது தனித்துத்திரிதல் கவிதைத் தொகுப்பு வெளிவந்த போது, வெளிவந்த கருத்து மட்டக்களப்பில் ஓர் *"Sex Book"* ஒன்று வெளி வந்திருக்கின்றது என்று தான் பார்க்கப்பட்டது. எனது புத்தக வெளியீடு (தனித்துத் திரிதல்) காலையில் நடக்கின்றது. அன்றைய நாளில் பின்னேரம் *Training College* ல் நடந்த இன்னொரு நூல் வெளியீட்டு வைபவத்தில் (திமிலைத்துமிலனின் புத்தக வெளியீடு) இரண்டு மூன்று கலாநிதிகள் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்தான் மலர்ச்செல்வன் கவிதையைத் தூக்கிப் பிடிக்கின்றார்கள். ஆனால் அதில் சமூகத்திற்கு உதவாத, வளர்ந்த பிள்ளைகள் படிக்க முடியாத பல விடயங்களை அக்கவிதைகள் கொண்டிருக்கின்றது என்று பல கருத்துக்கள், விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அதுபோல்தான் கதைகளுக்கும். எனவே ஆண் என்ற வகையில் எழுதவந்த எனக்கு இத்தகைய விமர்சனங்கள், வந்தபோதும் நான் எழுதிக்கொண்டே இருக்கின்றேன்.

**உருத்திரா:** நாம் எழுதுவதற்கு தொடங்குவது என்பதே ஓர் பிரச்சினையாகவே உள்ளது. பிரச்சினையில்தான் எழுதத் தொடங்குகின்றோம். அதாவது ஓர் பிரச்சினையை எதிர்பார்த்தே எழுதத் தொடங்குகின்றோம் என்றே நான் நினைக்கின்றேன். எழுதாமல் விடும் அனேகமானவர்களுக்கும் பிரச்சினையாவதும் இதே விடயம்தான் என்று நான் கருதுகின்றேன்.

எனவே இப்படியான சூழலில் எவ்வளவு தூரம் வெற்றிகரமாக எனது எல்லா உணர்வுகளையும், சுதந்திரத்தினையும் நான் அவற்றில் வெளிப்படுத்தப் போகிறேன்? கவிதை என்பதை நான் நிச்சயமாக பகிர்ந்து கொள்ளலுக்கான வடிவமாகவே எடுத்துக்கொள்கின்றேன் என்றால் இது எப்படியான சாத்தியங்களைத் தரப்போகின்றது? பகிரப்படாமல் எழுதியதை எவரும் அப்படியே வைக்கப் போவதில்லையல்லவா? எனவே இன்னொருபுறம் எழுதாமல் விட்டவர்களில் 90 வீதமானவர்களின் பிரச்சினை நிச்சயமாக இதுமட்டுமல்ல. இப் போதைய நவீன இலக்கியம் என்னும் வட்டத்திற்குள் வந்தபிறகுதான் இந்தப்பிரச்சினை உள்ளெடுக் கவோ, அல்லது எதிர்கொள்ளவோ வேண்டி வருகின்றது.

இன்னொருபுறம் பார்த்தால் ஒரேதளத்திலும், கொள்கையிலும் நின்று எழுதுபவர்களுக்கு மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் இல்லை. அதேபோல் அவர்களது ஊடகங்களும், அவற்றின் போக்குகளும், கருத்தியல்களும் கூட சிக்கலானது இல்லை. ஆனால் நான் ஓர் லெஸ்பியன் கவிதையை வீரகேசரிக்கு அனுப்புவது சிக்கலானது மட்டுமல்ல. அவர்கள் அதனைப் பிரசுரிக்கவும் மாட்டார்கள். ஆனால் லெஸ்பியனோ, அதுபோன்று தான பாலியல் உணர்வுகளோ சமூகத்தில் இல்லாததொன்றல்ல, இருக்கின்ற விடயத்தைத்தான் சொல்லப் போகின்றோம்.

**சித்திரலேகா:** பெண் எழுதுவது தொடர்பான இன்னுமொரு பிரச்சினை என்னவென்றால் பெண், கலவியைப் பற்றியோ, அல்லது உடம்பைப் பற்றியோ எழுத்தில் கதைக்கக்கூடாது என்ற கட்டுத்திட்டமான சட்டம் எங்களிடமிருக்கின்றது. அது இலக்கியத்தினுள்ளும் இருக்கின்றது. இலக்கணத்தினுள்ளும் இருக்கின்றது. சாதாரண நடைமுறையைப் பொறுத் தவரை எழுத்து இலக்கியத்திலேயே அது அதிகம் இருக்கின்றது. ஆனால் வாய்மொழி இலக்கியத்தைப் பொறுத்தவரை எதனையும் கூறி விட்டுச்செல்லக் கூடியதாகவுள்ளது இவற்றுக்கான காரணங்களில் ஒன்று இனப்பெருக்கத்துடன் பெண்ணின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம், பாலுறவு எல்லாம் சம்பந்தப்பட்டிருப்பது தான். அப்படியான இனப்பெருக்கம் என்பது இனத்தோடு, சமயத்தோடு, அரசோடு, நாட்டோடு தொடர்பானது. எடுத்துக் காட்டாக பிள்ளைகளை நாம் பெறுகின்றோம். அப்பிள்ளைகள் யார்? அவர்கள் அரசினது, அல்லது நாட்டினது குடிமக்கள். எனவே சமூகத்திலுள்ள ஓர் இந்துப் பெண் பிள்ளையைப் பெற்றால் அது இந்துவாகவும், தமிழாகவும் தான் இருக்கமுடியும். அது இஸ்லாமாகவோ, சிங்களவராகவோ ஆக முடியாது. அதனை பிறப்புச் சான்றிதழும் உறுதிப்படுத்துகின்றது

இந்த வகையிலுள்ளதனைத்தான் சமூகம் எதிர் பார்க்கின்றது. தமிழாக, இந்துவாக இருக்க வேண்டும் என்று. அதாவது பெற்றோர் இந்துவாக வும் தமிழராகவும் இருந்தால் பிள்ளையும் அவ்வாறே இருக்க வேண்டும் என்பதைத்தான் நான் இங்கு குறிப்பிடுகின்றேனேயன்றி நான் மொழியைப்பற்றிக் குறிப்பிடவில்லை. மொழிக்கு அப்பாலிருந்து கதைக்கின்றேன். மொழியை பேசுவதனால் தமிழராகவோ, அல்லது வேறு சிங்களவராகவோ இருக்கலாம். அதுவேறு.

ஆனால் நான் ஏன் எனது தந்தை வழிபட்ட கடவுளை, அவர் பின்பற்றிய சமயத்தை பின்பற்ற வேண்டும்? வழிபட வேண்டும்? எனக்கு விருப்பமான கடவுளைக் கும்பிடலாம், எனக்கு விருப்பமான சமயத்தைப் பின்பற்றலாம் தானே? ஆனால் இன்றைய சட்டங்களின்படி சமயத்தையோ, மதத்தையோ மாற்றமுடியாது. இந்துவான ஒருவர் பௌத்தர் என்றோ, தமிழரான ஒருவர் சிங்களவர் என்றோ எழுத முடியாது. மதமாற்றங்களினுள் நான் செல்லவில்லை. நான் எமது சமூகத்தில் தனிநபருக் கான தெரிவைப்பற்றிக் குறிப்பிடுகின்றேன்.

அவ்வாறான தேர்வில், திருமணம், பாலுறவு போன்ற விடயங்களைத் தீர்மானிப்பது என்பதும் பெரிய விடயங்களாகும். இனத்தின் தூய்மையைப் பேண வேண்டும் எனின், சமயத்தின் தூய்மையைப் பேணவேண்டும், அல்லது நாடு அரசு தன்னை கட்டுக்கோப்புடன் இயங்க வேண்டும் என்று சொன்னால் பெண்ணின் பாலுறவு, பெண்களின் திருமண உறவு இவையெல்லாம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். எனவே இங்கிருந்துதான் கட்டுப்பாடுகள் தோன்றி மொழிக்கு வருகின்றன. ஆனபடி யால்த்தான் பெண்கள் கதைக்கமுடியாது. ஏனெனில் பெண்கள்தான் பிள்ளையைப் பெறுகின்றார்கள். இப்போது நாம் அனைவரும் நமக்கு விரும்பிய ஆடைகளோடு அமர்ந்திருக்கின்றோம். ஆனால் திருமணத்திற்கு இவைகளை அணியமுடியாது அதற்கு மட்டும் ஏன் சேலையை அணிய வேண்டி வருகின்றது? ஏனெனில் சேலை திருமணத்தில் ஓர் குறியீடாகும். மேலும் ஒரு உதாரணம் நான் மட்டக்களப்பிற்கு வந்தபோது பலர் கூறியது, 'அவவை என்னென்று பேசுவதற்கு கூப்பிடுவது. அவ தலைமுடியையும் வெட்டிக் கொண்டு பொட்டுமில்லாமல் இருக்கின்றா.' ஆனால் இப்போது அழைக்கிறார்கள் அதற்கு பதவியில் உயர்வடைந்ததோ, அல்லது மட்டக்களப்பிற்கு வந்து 17 வருடம் ஆனமையால் கூட இருக்கலாம். ஆனால் என்னை ஓர் பெண்ணென்று கருதி அழைக்கவில்லை. அறிவுக்காகவும் அழைக்கவில்லை நான் பேராசிரியர் பதவி எடுத்து விட்டேன், கிழக்குப்பல்கலைக்கழகத்தில் இருக்கின்றேன், என்று பல காரணங்களால் அழைக்கின்றார்கள்.

**மலர்ச்செல்வன்:** பொட்டுவைக்காம, தலைமுடி வெட்டியது என்ற ஏதோ வகையில் நீங்கள் உடைத்துக் கொண்டு வந்திருக்கின்றீர்கள் தானே? ஆனால் உருத்திரா குறிப்பிடுவது தன்னால் சில பிரச்சினைகளை எழுதமுடியாது என்று கூறுகிறார். ஆனால் அதே கால கட்டத்தில் தான் சுகிர்தராணி பல பிரச்சினைகளை எதிர் கொண்டும், தொலைபேசி மூலமான மோசமான மிரட்டல்கள், தொந்தரவுகளைத் தாங்கிக் கொண்டும், அதிலிருந்து விடுபட்டு தொடர்ச்சியாக அதே பாணியில் அதே சொற்களைக் கொண்டு எழுதுகின்றார். தனக்கான ஓர்வழியொன்றாக அதனை மாற்றிக் கொண்டு எழுதுகின்றார். அப்படியெனின் சுகிர்தராணியினால் இவ்வாறு எழுத முடிகின்றது என்றால் ஏன் இவர்களால் எழுத ஏலாது?

**உருத்திரா:** இந்த கேள்விக்குச் சொல்லக் கூடியது இரண்டு விடயங்கள். ஒன்று இந்தியாவில் தமிழ் நட்டிலுள்ளோரின் தொகை அதிகம். இரண்டாவது தனிப்பட்ட பொருளாதார நிலமைகளிலான சாத்தியப்பாடு, வாய்ப்புக்கள் என்பன இன்னொன்று. உதாரணமாக முன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டது போன்ற சவால்களும், மிரட்டல்களும், மோசமான விமர்சனங்களும் நிறைந்த ஓர் எழுத்துச் சூழலில் நான் என்னுடைய தொழிலை விட்டுவிட்டு எழுதுவதற்கு மட்டும் வரமுடியாது. எழுத்தை எனது தொழிலாகக் கொள்ள இயலாது. எனது வருமானத்தை நம்பி எனது குடும்பம் உள்ளது என்பது வேறு விடயம். அப்போது எனக்கு எழுதினால் வருகின்ற பிரச்சினைகள் என்பது, என் எழுத்தை மட்டும் பாதிப்பதல்ல. அது என் குடும்பத்தை, குடும்ப உறவுகளை, வேலையை, வேலைத்தள நிலமைகளை எனது சக உத்தியோகத்தர்களையும் பாதிக்கும். இது மட்டுமல்ல.

சாதாரண சூழலில் (தீவிர பெண்ணின் எழுத்துக் களை எழுதாத) கூட, சில கதையின், கவிதையின் சம்பவங்கள் தனிப்பட்ட தங்களது குடும்பத்தை, குடும்ப அம்சங்களைப் பிரதிபலிப்பதாகக் கருதி, ஏற்கனவே அனேகமான அனாமேதயக் கடிதங்களும், வாய்த்தர்க்கங்களும், பிரச்சினை களும் எனக்கு வந்திருக்கின்றன. அதனால்தான் சிறுகதைகளில் எனக்கிருந்த அதீத ஈடுபாடு, ஆற்றல் என்பன எனக்குப்பயமூட்டுவதான ஒரு விடயமாக, எனக்குப் பிரச்சினை தரும் விடயமாக, தோன்ற ஆரம்பித்தன. உதாரணமாக நான் சில பிரச்சினைகளை எதிர்கொண்டபின்னர், ஒரு சிறுகதையை எழுதத் தொடங்கினாலும் அது எனது ஊரில் யாருக்கு இருக்கின்றது, யாரையாவது நேரடியாக, மறைமுகமாகத் தாக்குகின்றதா, என்றெல்லாம் யோசித்தே எழுத வேண்டியிருந்தது. முன்னர் பிரச்சினைக்குரியவையாகத் தென்பட்ட கதைகளில் எந்தத் திட்டமிடலும் இல்லாமல், கற்பனையாய் எழுதிய சில விடயங்கள் கூட சிலருக்கு தங்களைத் தாக்கித்தான், தங்களுடைய வீட்டைத்தான் பிரதிபலிப்பதாகக் கூறித்தான் பிரச்சினை தந்தார்கள். இதனால் சிறுகதை என்ற, எனக்குரிய, எனக்கு விருப்பமான ஒரு வடிவம், என்னிடமிருந்து விலகிவிட்டது. இது நான் எழுதத் தொடங்கிய ஆரம்ப காலத்திலேயே நடந்தது. எழுதுவது என்பதே பிரச்சினைக்குரியதொன்றாகி விட்டால் சுகிர்தராணி போன்றோருக்கான வெளிப்பாட்டுத் தன்மையுடன் இருந்தால் அது மிகக் கடினமான தொரு செயற்பாட்டுக்குரிய தொன்றாகவே இங்கு அமையும்.

**சித்திரலேகா:** அப்படியானால் 'வௌவால்' சிறுகதையால் பிரச்சினை வரவில்லையா?

**உருத்திரா:** அது உண்மையுடன் சேர்ந்த ஓர் கற்பனைக் கதை. ஆனால் அதிலிருந்த சங்கரி என்னும் பாத்திரம் இப்போதும் உயிருடன் இருக்கின்றார். ஆனால் அவருக்கு தான் ஓர் சிறுகதைப் பாத்திரம் ஆகியிருப்பது தெரியாது. சிறுகதை வாசிக்கும் பழக்கமோ, குடும்பச்சூழலோ அவருக்கில்லை. இன்னொன்று 'பெண்' சஞ்சிகையில் வெளிவந்த சிறுகதையாதலால் அது எனது ஊரில் அனேகருக்குத் தெரியாது. இன்னொன்று அது யாருக்கோ நடந்த பிரச்சினைதானே, தங்களுக்கு இல்லைதானே என்ற மனோபாவமும், காரணமாகவிருக்கலாம். இவற்றுக்கு அப்பால் கேட்கக்கூடியவர்களுக்கு பிரச்சினைவந்தால்தான் அது பெரிய பிரச்சினை யாகின்றது. எனவே 'வௌவால்' – பறந்து விட்டது. ஆகவே இவ்வாறான பிரச்சினைகளை ஓர் ஆரம்பக்கட்டத்தில் எதிர்கொள்ளும் என் போன்றவர்களால் எழுத்து ஆபத்தான விடயமாகவே மாறுகின்றது. எழுதுவதற்கான எத்தனையோ விதமான தூண்டல்கள் உள்ளுக்குள்ளேயே அடங்கிப் போகுமே தவிர வெளியில் வராது.

**சித்திரலேகா:** பெண்மொழி தொடர்பான இந்த கருத்துக்களின் அடிப்படையில் நான் ஒன்று சொல்லலாம் என நினைக்கின்றேன். தனிய பெண் மொழி என்று கூறும்போது, அது தனிய *Sexuality* தொடர்பான அனுபவங்களைச் சொல்லும் மொழியை சுதந்திரமாக பயன்படுத்துவது மாத்திரம் அல்ல. இன்றையகாலகட்டத்தில் இந்தப் பெண்மொழி தொடர்பான விடயங்களைப் பார்க்கும் போது ஓர் அபாயநிலை ஒன்று தோன்றுவதாகவே எனக்குப்படுகின்றது. அதாவது பெண்மொழி தொடர்பான விவாதத்தில் பேசப்படுகின்ற குட்டி ரேவதி, மாலதிமைத்திரி உட்பட இவ்வாறு எழுதுபவர்கள் அனைவரும் எழுதுவதனை அவதானித்தால் 'பாலுணர்வு சார்ந்த விடயங்கள் தான் - பெண்மொழி என்று அர்த்தப்படுவதாகத் தோன்றுகின்றது. அது அப்படியல்ல. உருத்திரா எழுதிய வௌவால் கதையை நோக்கின், உருத்ரா வௌவால் போன்ற விடயத்தையும் எழுதுகிறார், மற்ற மாதிரியான விடயங்களையும் (பெண்மொழியில் பேசப்படுகின்ற பால் நிலை, பாலுணர்வு பற்றிய) எழுதமுடியும் என்று கருதினால், குறிப்பிட்ட ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயத்தை மாத்திரம் *(Sexuality)* எழுதுவதுதான் பெண்மொழி என்று கருதுவது படு பிழையானது.

குறிப்பாக பெண் மொழி என்று ஆண்கள் கூறும் போது பெண்ணுக்கிருக்கின்ற ஒடுக்குமுறை, அடக்குமுறை, எழுத்திலிருக்கும் பிரச்சினை, என எந்தவொரு உணர்வுகளும் இல்லாமல் தான் அது சொல்லப்படுகின்றது. அது முழுக்க பெண்களுடைய சாதாரண வாழ்வியலில், அன்றாட வாழ்க்கையினுடைய ஒரு பகுதியாகத்தான், பெண்களினுடைய *Sexuality,* அவர்களது அனுபவம், குடும்பம், திருமண உறவு, பாலுறவுகள் எல்லாம் அன்றாட வாழ்வியலின் ஒரு பகுதியாகத்தான் அமைந்துள்ளன.



இவ்வாறுதான், *Check Point* ல் உடலைத்தடவுவதும் என்னை குறிப்பிட்ட இடத்தில் நில் என்று சொல்வதும், பொட்டு வைக்காத பெண்ணை கூட்டத்திற்கு கூப்பிட ஏலாது என்று சொல்வதும், அல்லது இன்று இந்தக் கலந்துரையாடலின் இடையில் எழுந்து சென்று அரிசிக்கு உலையிடுவதற்குச் செல்வதும் என இவையெல்லாம் எனது அன்றாட அனுபவம்தான். அவ்வாறெனின் என்னுடைய அன்றாட வாழ்வின் அனுபவத்தின் கூட்டுமொத்தமானது தான், என்னுடைய இலக்கியமும், என்னுடைய இலக்கியத்தின் மொழியுமாகின்றது. தனிய *Sexuality* மாத்திரம் இல்லை. அப்படி பார்த்தால் குட்டிரேவதி அவர்களின் பிரச்சினை யென்னவென்றால் (எனக்குத் தென்படுவது மட்டும்) தனிய பாலியல் பற்றி *(Sexuality)* எழுதுவது தான். ஆனால் இவர்களைத் தவிர தமிழச்சி, இளம்பிறை, பாமா, போன்ற பலர் அங்கே வேறு பெண் அனுபவங்களை இன்னமும் எழுதிக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

உருத்திரா குறிப்பிட்டது போல் இந்தியாவில் தமிழ் நாட்டில் பரப்பு என்பது இலங்கையை விடப் பெரியது. அதுபோலவே அங்கு கவிதை எழுதுகின்றவர்களின் எண்ணிக்கையும் மிகமிக அதிகம். அங்கு நூற்றுக்கணக்கானவர்கள் எழுத்துத் துறையிலிருக்கின்றார்கள். ஆனால் ஒருவகையானவர்களை மட்டும், ஒருவகையான கவிதையை, ஒருவகையான மொழியைத்தான், காலச்சுவடு ஊக்குவிக்கின்றது என்பதை நான் வெளிப்படையாகவே கூறுகின்றேன். இது அவர்களின் அனைத்து வெளியீடுகளிலும் அவதானிக்கக்கூடிய ஓர் விடயமாக இருக்கின்றது. பன்மைத்துவமற்ற, ஒரு வகையான மொழியை அடிப்படையாக கொண்டவை மாத்திரம் தான் காலச்சுவடு வெளியிடுகின்றது என்பது என் தாழ்மையான கருத்தாகும்.

ஆகவே நான் சொல்லவருவது என்னவென்றால், ஒருவகையான மொழி மட்டும் பெண்ணின் மொழியல்ல. பெண்மொழி, பெண் மொழியென்றும், உடலரசியல் என்றும் சொல்வது, பெண்களினுடைய அவ்வளவு வித்தியாசமான பரிமாணங்களையும, செயல்வாதங்களை யும் ஒரு தனித்த அலகி னால் அடக்கிவிடுகின்றது. அடக்கி விடுவதாகின்றது. எதனை எழுதினாலும் அதனையேதான் குறிப்பிடுகின்றார்கள்.

**மலர்ச்செல்வன்:**
அவ்வாறெனின் காலச் சுவட்டில் பெண்கள் எழுதுகிறார்கள்தானே? அந்தப் பெண்கள் இந்தக் காலச் சுவட்டின் அரசியலுக்கு உடன் பட்டுத்தானே செயற்படுகின்றார்கள்?

**சித்திரலேகா:** காலச்சுவடு என்பது ஒரு வெளியீடு. அது ஒருவழி அது எல்லா இடங்களுக்கும் ஒன்றைக் கொண்டு செல்கின்றது. பெண்கள் இலக்கியம் என்பது இன்று சந்தைக் குரியதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிவிட்டது. அது ஒரு நாகரீகமாக மாறிவிட்டது. தமிழ் நாட்டு பல்கலைக் கழகங்களில் ஒன்று புகலிட இலக்கியம், *Fashsion*னாகி பாடத்திட்டத்திலும் இணைந்துவிட்டது. அதே மாதிரித்தான் பெண்கள் இலக்கியமும் பாடத் திட்டமாகிவிட்டது. 1986ம் ஆண்டு "சொல்லாத சேதிகள்" தொகுப்பைப் போட்டபோது என்ன வெல்லாம் சொன்னார்கள்? நீங்கள் பெண்கள் நீங்கள் மன நலம் அற்றவர்களாக இருக்கின்றவர்கள் என்றார்கள். ஆனால் ஸ்ரீகணேசன் என்று நினைக்கின்றேன், அவர் மட்டும்தான் இது ஒருபுதுவரவு என்று ஈழநாடு பத்திரிகையில் எழுதினார். மற்றக் கருத்துக்களெல்லாம் மனநலமிழந்த பெண்களின் படைப்பு என்றுதான் சொன்னார்கள்.

ஆனால் இன்று கிழக்குப்பல்கலைக்கழகத்தில் அது ஓர் பாடம் அதாவது பெண்கள் இலக்கியம் அங்கீகரிக்கப்பட்டு ஓர் பாடமாக சேர்க்கப்பட்டு விட்டது. இந்நிலைமை பல்வேறு சண்டை, சச்சரவுகள், விமர்சனங்களுக்குப் பிறகுதான் அடையமுடிந்தது. ஆனால் இன்று இண்னொருபுறம் பெண்கள் இலக் கியம் என்பது சந்தை - நோக்கியதாக, அதாவது பெண்கள் இலக்கியத்தை வியாபாரமாக்குவதற்கு முனைகின்றார்களே யொழிய, அன்றாட வாழ்வில் பெண்கள் எதிர்கொள்கின்ற அரசியல், சமூக, கலாசரப் பிரச்சினைகளின் ஒருபகுதியாகவோ, அல்லது அச்சிக்கல்களை, பிரச்சினைகளை தீர்ப்பதற்கான, அல்லது குறைப்பதற்கான செயலி னுடைய ஒருபகுதியாகவோ, காலச்சுவடு இதனைப் பார்க்கின்றது என்றோ என்னால் கூறமுடியாது.

**உருத்திரா:** பெண் சஞ்சிகை தொடர்பிலும், சித்திரா மிஸ் குறிப்பிடப்பட்ட விடயங்களிலும் சில ஒத்துப் போகின்றன. பாலுணர்வு, அல்லது பாலியல்பு சார்ந்தவிடயங்கள் மட்டுமே பெண் எழுத்து என்று நோக்குகின்ற இரு சாராரின் மனநிலைகள் போலவே பெண்சஞ்சிகை என்று எழுதத் தொடங்கி னால். "பெண்ணுக்குரிய, பெண் நிலைசார்ந்த, பெண்கள் தொடர்பானது மட்டுமான" என்னும் வரையறுக்கப்பட்ட எல்லையொன்றைக் கொண்டே மொத்தப் பெண்களின் உலகமும், இலக்கியமும் அளந்து முடிக்கப்பட்டுவிடுவதனை, பெண் சஞ்சிகைக்கான ஆக்கங்களை சேர்ப்பதிலிருந்து காணவும், அவதானிக்கவும் முடிகின்றது.

**அனார்:** உருத்திரா குறிப்பிட்டது மாதிரியான நோக்குகள் மிகவும் தவறானவை என்றே கருதுகின்றேன். பெண்களைப் பிளவுபடுத்த முனைகின்றவற்றை ஊக்கப்படுத்தும் இயங்குதளங் களை கட்டுப்படுத்தவே நாம் போராடுகின்றோம். ஆனால் இத்தகயை மொழிரீதியான பாகுபடுத் தல்கள் இன்னும் பிளவுகளையே ஆழப்படுத்தப் போகின்றனவேயன்றி கட்டுப்படுத்தக் கூடியனவல்ல.

மேலும் இதுபற்றிக் கூறக் கூடியது என்னவென்றால் பதிப்பகங்கள் ஏதோ ஒரு அரசியலுடன் செயற்படு கின்றன எனக்கொண்டால் பெண்களாகிய நாங்கள் எம்மிடையே ஒருமித்த ஒற்றுமையான பாதையை நோக்கியதாக இருப்பதில்லை. நமது நிலமையைப் பொறுத்தவரை நான் ஓரிடத்தில் இருக்கின்றேன். விஜயலெட்சுமி வேறொரு இடத்தில் இருக்கின்றார். உருத்திரா இன்னொரு இடத்தில் இருக்கின்றார். எமக்குள் பெண் என்ற தொடர்பைத்தவிர எமக்குள் செயற்பாட்டுரீதியான தொடர்புகள் என்பது மிகவும் குறைவு, இதற்கு பல காரணங்கள் இருக்கின்றான. சமூகஅரசியல் காரணங்கள், அதுசார்ந்த பிரச்சினைக்களும் கூட இருக்கலாம்.

இவ்வாறான ஒரு நிலமையில் பெண்களாக இருந்து கொண்டு இணைந்து நிற்கின்றன ஓர் அடிப்ப டையில் எங்களுடைய படைப்புக்களை, நாங்களே பதிப்பித்துக் கொண்டு வெளியீடு செய்து கொள் ளாமல் இருப்பதும், பெண்களின் எழுத்துக்களை வெளியிடுவோர் அவற்றை வியாபாரமாக்க முயல் வதற்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்று நான் நினைக்கின்றேன். இதன்மூலம் அவர்கள் இலாபம டையலாம், இதுதவிர்க்க முடியாததாகி விடுகின்றது. இங்குள்ள சூழலில் பெண்கள் எழுத்தை பெண்களே பதிப்பித்து வெளியீடு செய்கின்ற நிலமை இல்லை. அவ்வாறான தனித்த நோக்கமுடைய ஒரு பதிப்பகமும் கூட இல்லை. இன்னொருபுறம் பல்கலைக்கழகங்கள் தொடங்கி, பல்வேறு அமைப்புக்களிலும் பொறுப்பான பதவிகளில் இருக்கின்றவர்களுக்கு இப் பதிப்பகங்கள் தொடர்பான ஓர்சிந்தனை, அல்லது அது தொடர்பான பிரத்தியேக அக்கறை கொண்ட வர்களாக அவர்கள் இல்லை. முயற்சியும் இல்லை. அவ்வாறு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

எழுதி, ஓரளவுக்கு சமூகத்தில் அடையாளம் காணப்பட்ட பிறகு, ஓரளவு பெயரைச் சம்பாதித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட பிறகுதான் அவர்கள் தேடி வருகின்றார்கள். அதுவரையில் தனித்து எழுதிக் கொண்டிருக்கும்போது எமக்கு உதவி செய்தவர்கள், அதாவது எமது ஆக்கங்களை இணைத்துக் கொண்டவர்களை, ஆவணப்படுத்தியவர்களை, தொகுத்தவர்களைத்தானே நாம் நாட வேண்டும். அவ்வாறு உதவிபுரிந்தவர்களின் நோக்கம் வேறானதாக இருந்தாலும்கூட, நாம் அவர்களின்றி வெளிச்சத்திற்கு வந்திருக்க முடியாதுதானே?

**உருத்திரா:** இந்நிலைமைக்கு அடிப்படையான ஒரு காரணம் என நான்நினைப்பது, எழுதிக் கொண்டிருக்கும் ஒரு பெண்படைப்பாளி, ஆண்களின் அளவுகோல்களை இலக்கியம், செய்கின்ற / படைக்கின்ற ஓர் சூழலில், தனித்துவமாக தன்னைச் சமரசம் செய்ய இயலாது, தனித்து நிற்க முடியாது போகின்றது அபாயம்தான்.

அதாவது உதாரணமாக 'பெண்' சஞ்சிகையொன்றுக்கு ஆக்கங்களை எழுதும் ஒரு படைப்பாளி, பெண்மொழியோ, அல்லது பெண்களின் இலக்கியம் சார்ந்ததல்லாத ஒரு சூழலில் வளர்ச்சியடைகின்ற போது, அப்படைப்பாளிக்கு 'பெண்' சஞ்சிகையுடன் ஒரு சமரசத்தைக் கொண்டிருக்க முடிவதில்லை. அந்நிலையில் அத்தகைய சமரசத்தை விரும்புவதும் இல்லை. இந்நிலையில் 'பெண்' தொகுதியொன்று வருகின்றபோது மறுபடியும் மறுபடியும் மிகுந்த ஆரம்பநிலையில் உள்ளவர்களே திரும்பத் திரும்ப எழுதப்போகின்றார்கள். அந்நிலையிலிருந்தே விமர்சனமும், அபிப்பிராயமும் வரப்போகின்றது. இந்நிலைதான் 'பெண்களின் எழுத்தாக்கத்தை விருத்திசெய்யும் முகமாகவுள்ள எல்லா முயற்சிகளிலும் உருவாகப் போகின்றது. எனவே பெண்ணில் இருந்து (பெண் சஞ்சிகை) வளர்ச்சியடைந்தவர்கள், அக்கட்டத்தின் பின்னர் (வளர்ச்சி) பெண்ணைக் (சஞ்சிகை) கைவிடும்போது, மிகத்தேர்ந்த, செறிவான, சிந்தனையாற்றலுள்ள நிலையில், ஒரு பொதுவான விடயம் குறித்து (உதாரணமாக ஒரு தனித்த பதிப்பகத்தை உருவாக்கல் எனக் கொள்ளலாம்) சிந்தித்து செயலாற்றும் குழுவாக உருவாகின்ற வாய்ப்பு அற்றுப்போகின்றது. அனார் குறிப்பிட்டது போல் இறுக்கமான ஓர் இணைப்பு, தொடர்ச்சியாகப் பேணப்படுவதில்லாமல் போய் விடுகின்றது. இந்தத் தொடர்ச்சியற்ற நிலமை எமது நாட்டைப் பொறுத்தளவில் மிகுந்த பின்னடைவான நிலைக்கே இட்டுச் செல்கின்றது.

இன்னொருபுறம், தமிழ்நாடு போன்ற பரந்த பெரியளவான சூழலில் இயங்குகின்றவர்களின் முயற்சிக்கும், வெளிப்பாடுகளுக்கும் ஈடுகொடுத்துச் சமரசம் செய்யத்தக்க மாற்று வழிகளை இந்த இணைப்பற்ற நிலமை தடுத்துவிடுகின்றது. இன்னொருபுறம் எமதுநாட்டில், குறிப்பாக இந்த நவீன இலக்கியச் சூழலில் கருத்தியல் ரீதியில் ஒத்துப்போகக் கூடியவர்கள், ஒத்துச் செயற்படுகின்றவர்கள், சமகாலத்தவர்கள், இலத்திரனியல் ஊடகங்களால் அறியப்பட்ட பெண் படைப்பாளிகள் எத்தனைபேர் உள்ளனர்? அதுவும் மிகக் குறைவு. எண்ணி எடுக்கத்தவர்கள் ஒருசிலரைமட்டுமே இன்றிருக்கின்ற இலங்கைத் தமிழின் பெண் படைப்புலகம், அல்லது பெண்ணிலக்கியச்சூழல் கொண்டுள்ளது. இவ்வாறான தொரு நிலமையில் ஓர் 'பெண்ணியல்சார்ந்தே உச்சபட்ச படைப்பாக்க'' செயற்பாடு ஒன்றைக் கொண்டுவர முயன்றால், இந்த எண்ணி எடுக்கத்தக்கவர்கள்தான் எழுத வேண்டும். அவர்கள்தான் படைப்பாளர்களை இனம் காணவேண்டும். படைப்புக்களை சேகரிக்க வேண்டும், இவற்றை வெளியிடவோ, பதிப்பாக் கவோ முயலவேண்டும், மட்டுமன்றி அவர்களே விமர்சனமும் செய்ய வேண்டியும் எழுகின்றது. இன்னொரு புறம் அடுத்தடுத்த தலைமுறையை வளர்த்தெடுக்கும் பொறுப்பும் இக்குறிப்பிட்ட சிலரிடமே சேரும் நிலையும் ஏற்படும். இப்படியான தொரு மிகுந்த தட்டையானதொரு சூழலில், பெண்எழுத்தை விமர்சிப்பதோ, இளக்காரம் பண்ணுவதோ ஆண் உலகுக்கு பெரியதொரு விடயமாக இருக்கும் என நான் கருதவில்லை.

**அனார்:** என்நிலமை முற்றிலும் மாறானது. என்னுடைய தொகுப்புக்கள் வெளிவந்தபோது எல்லா வகையிலுமான ஊடகங்களிலும், விமர்சனங்களைச் செய்தது ஆண்கள் மட்டுமே. ஒரு பெண்ணும் எந்தவொரு ஊடகத்திலும், ஒரு விமர்சனத்தைத்தானும் செய்யவில்லை. ஒன்றிரெண்டு பெண்களின் நேரடி உரையாடலைத் தவிர, ஒரு பெண்ணாக இருந்தெழுதிய படைப்பைப்பற்றி, இன்னொரு பெண்ணின் உணர்வுகள் எவ்வாறு இருந்தன என்பதை எவரும் எழுதவில்லை. இதனால் அந்த இன்னொரு பெண்ணின் உணர்வுகளையும் என்னால் அறிந்து கொள்ள இயலாது போய்விட்டது. இப்படியான இறுக்கம் எழுதுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெண்களுக்கு இடையில் இருக்கின்றதன் காரணம் எனக்குப் புரியவில்லை.

ஆனால் நான் நினைத்தது பெண் படைப்புலகோடு நிறையப் பெண்களோடு உறவாடலாம், இன்னொரு தளத்திலான பிரச்சினைகளை அறிந்து கொள்ளலாம் என்று எண்ணித்தான் இந்த எழுத்துலகில் நான் நுழைந்தேன். ஆனால் எனது உலகம், எனது எழுத்துக்களை ஆண் நண்பர்கள் நிறைந்ததாக, ஆண்நண்பர்களின் கருத்துக்களால் ஆனதாக, அவர்களாலேயே அதிகம் விமர்சிக்கப்படுவதாக ஆகிவிட்டது. பெண்களைவிட, எனக்கு அதிகமான ஆண்நண்பர்களைத் தான் இந்த எழுத்துலகு எனக்குப் பெற்றுத்தந்துள்ளது.

**உருத்திரா:** அதாவது பெண்கள் பெண்களோடு தொடர்பு கொள்வதென்பது கூட ஆண்கள் நடந்த வழிகளால் மூலமாகவே அன்றி, பெண்களால் உருவான புதிய வழிகளால் / பாதைகளால் அல்ல என்கிறீர்கள். அப்படித்தானே அனார்?

**அனார்:** நிச்சயமாக என்றில்லை. இருக்கலாம்.

**விஜயலட்சுமி:** அனார் பார்க்கும்போதே விளங்கியிருக்கும், ஆரம்பத்தில் உங்களோடு இருந்த தொடர்புகளுக்கும், இப்போது உங்களுக்கு இருக்கும் தொடர்புக்ளுக்கும் உள்ள வித்தியாசம். நிறைய வித்தியாசத்தை உணர்வீர்கள் என்றே நினைக்கின்றேன். அனேகர் அறியப்படாதிருந்த அனாருடைய தொடர்புகளுக்கும், இன்று ஓரளவு அறியப்பட்ட அனாருடைய தொடர்புகளுக்குமான வித்தியாசம் அனார் குறிப்பிட்டது போலவே ஆண்கள் உலகுடனான தொடர்புகள் அதிகரித்திருக்கும்.

இந்நிலை அனாருடன் முடிவடைந்து விடுவதில்லை. இன்றும் தொடர்கின்றது. ருத்திரா குறிப்பிட்டது போல் ஆரம்பநிலையில் எழுதத் தொடங்கிய வர்களை சேர்ந்து எடுப்பது, அதற்கு வரும் விமர்சனம், அதனைத் தொடர்ந்து எனக்கு வருகின்ற விமர்சனம் அவ்வாறான நிலமைகள் எனக்குப் பெரும் பிரச்சினைகளையும், கேள்விகளையும் கொண்டுவருகின்றது. நான் தொடர்ந்தும் அனார் போன்றவர்களைத் தேர்ந்தெடுக்கப் போகிறேனா? அல்லது மீண்டும் மீண்டும் அனாரையே கொண்டுவரப் போகின்றேனா? இவற்றுக்குச் சாத்தியமான இடைவெளி எங்குள்ளது? எவ்வாறு கண்டறிவது? எத்தனைபேர் எழுத்துக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை ஆளுக்கு கொடுக்கிறார்கள்? போன்றவை இந்தத் தொடர்பு நிலை சம்பந்தமான பிரச்சினைகளுக்கு பெரிதும் தாக்கம் விளை விப்பவை என்றே கருதுகிறேன்.

**உருத்திரா:** மறுகா சஞ்சிகையின் அடுத்த ஆறாவது தொகுதி பெண்கள் சிறப்பிதழ் என்று மலர்ச்செல்வன் குறிப்பிட்டு அது தொடர்பான வேலைகளில் ஈடுபட்டிருப்பதில் இருந்தே, விஜயா குறிப்பிடுகின்ற தொடர்பின்மையும், அது உருவாக் கின்ற உறுதியற்ற படைப்பாளர் வகுப்பொன்றை யும் நம்பி சஞ்சிகைகளை நடாத்தவேண்டியிருப்பதை வைத்தே அதை உறுதிப்படுத்திக்கொள்ளலாம்.

ஏனெனில் மலர்ச்செல்வனின் மறுகா சஞ்சிகையின் பெண் சிறப்பிதழ் தொகுப்பிற்கான ஆக்கங்களில் அனேகமானவை இந்திய எழுத்தாளர்களிடமிருந்தே பெறவேண்டியிருப்பதை அறிகின்றோம். அந்தள விற்கு இங்கு பெண்படைப்பாளிகளின் (பெண் எழுத்துச் சார்பாக, பெண்ணினைக் கோட்பாடுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளோடு எழுதுபவர்கள்) எண்ணிக்கை குறைவாக வுள்ளது. அதாவது இந்தப்பெண்ணியக் கருத்தியல் களோடு ஒத்துப்போவது ஒரு பிரச்சினை, இன்னொரு புறம் கருத்தியல்களை வெளிப்படுத்தும் ஊடகமும், சஞ்சிகையை வெளியிடும் நபர்களுக் குள்ள ஒத்திசைவான கருத்துக்களும் கொண்ட கொள்ளளவும் கூட, மேற்குறிப்பிட்ட நிலமையை நிர்ணயிக்கின்றது என்பது என் அபிப்பிராயம். அதாவது நான் கூறவருவது என்ன வென்றால் கருத்தியலுக்கும், ஊடகத்திற்கும் ஏற்றவாறு நெகிழ்வுத்தன்மை கொண்டவராக ஒரு பெண் படைப்பாளி நமது சூழலில் இயங்கவேண்டி யிருக்கின்றது. ஆகவே ஒரு ஆரம்பத்தில் இருந்து இன்னொரு தளத்திற்கு குறிப்பிட்டளவு புரிதல்க ளோடு எழுதவந்திருப்பவர்களுக்கே, முன்னர் குறிப்பிட்டது மாதிரியான நெகிழ்வுத்தன்மையோடு இயங்கித்தான் வெளியில் வரமுடிகின்றது என்றால், இன்னமும் ரமணிச்சந்திரனை மெச்சுகின்ற நிலமையுள்ள, அல்லது அதேமாதிரி எழுதிக் கொண்டிருக்கின்றவர்களை எவ்வாறு மேலெழுப்ப முடியும்? ஒருநாளுமே இந்தக் கனவுகள் சாத்திய மானதல்ல என்பதுதான் உண்மை.

முன்னர், பேராசிரியை சித்திரலேகா குறிப்பிட்டது போல் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் குழுக்குழுவாக இலக்கியச் செயற்பாடுகள் இடம் பெறுவது போன்று இங்கு இடம்பெறுவதில்லை தான். எல்லாவற்றையும் சேர்த்து எடுத்தால்கூட, இங்கு ஒரு குழுவாக்கூட இயங்குவதற்கு அந்த எண்ணிக்கை போதுமானதாக உள்ளதா என்று யோசித்தால் ஒரு குழுவாவதுகூட சாத்தியமில்ல என்றே தோன்றும். இன்னொருபுறம் கூறப்படுவது என்னவென்றால் தமிழ்நாட்டை விட இலங்கை யில்தான் மிகச்சிறந்த இலக்கியம் தோன்றுவதற்கான சூழல் உள்ளது என்று கூறுவது அது உண்மையும் கூட. ஆனால் இங்கிருந்து அவ்வாறு போற்றிக் கொண்டாடத் தகுந்த ஒரு மாபெரும்படைப்பென்று ஒன்றைச் சுட்டிக் காட்டமுடியாதுள்ளது. ஆக பெண் எழுத்து தொடர்பான இந்த நிலமைகளை மலர்ச்செல்வன் போன்றவர்கள் எவ்வாறு மாற்றப் போகின்றீர்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி.

**விஜயலட்சுமி:** சில பார்வைகள் மாற்றக்கூடியன. எல்லாவற்றையும் விமர்சனமாக்குவது இலகுவானது. ஆனால் ஒன்றைக்கூட வளர்த்தெடுப்பது என்பது பெரும்சிரமான பணியாகும். விமர்சனத்தால் விவாதிக்கப்படும் இடங்களை வளர்த்தெடுப்புக்கு அதிகம் பயன்படுத்தலாம் அல்லவா?

**உருத்திரா:** இது கீழ்நிலை வாசிப்புடையவர்களி னூடாகத்தான் வளரவேண்டும்.

**விஜயலட்சுமி:** வாசிக்கிறவர்கள் அதை விளங்கிக் கொள்ளவேண்டும். மேலோட்டமான ஒரு பார்வை யோடு நின்றால் அது கஸ்டமானதாக மாறிவிடும்.

**உருத்திரா:** பனிக்குடத்தைக் கூட எடுத்துக் கொண்டால் 'பெண்' சஞ்சிகைக்கு எழுதும் ஒரு ஆரம்பநிலை யிலிருக்கின்ற படைப்பாளிகளில் எத்தனைபேரால், பனிக்குடத்தில் வருகின்ற ஆக்கங்களைப் புரிந்து கொள்ளமுடியும்? அது ஒருபுறமிருக்க பனிக்குடம் பிரசுரிக்கின்ற மொழிபெயர்ப்புக் கட்டுரை ஒன்றை, வாசிக்கும் ஒரு சராசரி படைப்பாளி புரிதலுக்குப் அப்பால் அவற்றின் அவசியம் பற்றித்தான் யோசிப்பார். நானும் கூட யோசிக்கலாம். எனவே தேர்வுவிடயங்களால் கூட வாசிப்பு நிகழ்வது தீர்மானிக்கப்படுகின்றது. ஆகவே வாசிப்பு விடயங்களைச்சார்ந்து, பின்னர் அந்த விடயங்களை விளங்கத்தக்கதனை மொழி தெரிவுசெய்து, அதன் பிறகுதான் ஒரு வடிவம் பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கின்றது. இதுமிகவும் கஸ்டமானது. சுதந்திரத்தன்மையை குறைத்துவிடுகின்ற நிலமை யைத் தோற்றுவிக்கின்றது.

**மலர்ச்செல்வன்:** நீங்கள் சொல்லுவதைப் பார்த்தால், பனிக்குடத்தில் வருகின்ற படைப்புக்கள் காத்திரமாய் இருப்பதனால் கீழ் மட்டத்திலுள்ள வர்களால் வாசிக்க இயலாமலுள்ளது என்பது போன்று தென்படுகின்றது. அப்படியானால் நாம் ரமணிச்சந்திரனின் படைப்புக்களை வாசிக்கும் ஓர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பினரைத்தான் இன்னும் இன்னும் உருவாக்கப் போகின்றோம்? அத்தகைய வாசகர்களை பெண்கள் எழுத்தை விருத்தி செய்தல் என்ற அடிப்படையில் எவ்வாறு மேற்கிளப்புவது?

**விஜயலட்சுமி:** ரமணிச்சந்திரனின் படைப்புக்களை வாசிப்போரைத்தான் திரும்பத்திரும்ப உருவாக்குவ தென்பதோ, அதனை வாசிப்பதென்பதோ அல்ல. திரும்பத்திரும்ப ஒரே விடயத்தையும், ஒரேமுடிவை யும் நோக்கிய வழியை, அல்லது ஒரு வடிவத்தைத் தான் நாமும் செய்யப்போகின்றோமா, அல்லது அதுதான் காத்திரமானது என்று ஓர் எண்ணப் பாட்டை ஏற்படுத்தப்போகின்றோமா என்பதுதான் பிரச்சினை.

**மலர்ச்செல்வன்:** எனக்குத் தெரிந்த ஒருவர் அனாரின் கவிதைகளைப் படித்துவிட்டு அனார் என்ன சொல்கிறார் இக்கவிதையில் எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை என்கிறார். அதேவேளை ரமணிச்சந்திரனை வாசித்துவிட்டு விளங்கி அதுபற்றிய விமர்சனத்தைச் சொல்கிறார். இந்நிலை மையை எவ்வாறு இணைத்துக் கொண்டுசெல்வது?

**உருத்திரா:** 'விளங்காமலிருத்தல்' என்பதில் இரண்டு விதமான நிலமைகளிலிருக்கின்றது. ஒன்று வாசிக்கும் வாசகனுக்கும், படைப்பிலிருக்கின்ற மொழிஇறுக்கத்துக்கும் இடையில் நிகழும் போதாமையை காட்டுதல். இன்னொன்று 'விளங்கா திருக்கும்' படியான ஒரு செயற்கைப் படைப்பில் நிகழும் தரமற்றதன்மை, மேற்குறிப்பிட்ட அனாரின் கவிதைகளை விளங்கிக் கொள்ளாமல் ரமணிச்சந்திர னின் படைப்பை விமர்சிப்பது என்பது வாசகனின் போதாமையேயன்றி. அது அனாரின் கவிதைகள் தரமற்றவை என்பதல்ல.

**மலர்ச்செல்வன்:** ஏனென்றால் இன்று நமது நூலகங்களிலுள்ள நூல்களில், அனேகமானவர்கள் விரும்பிப் படிக்கும் நூலாக விருப்பது ரமணிச்சந்திர னின் படைப்புக்களாகத்தான் உள்ளது. எனவே இந்நிலமையை எவ்வாறு மாற்றப் போகின்றீர்கள்?

**அனார்:** ரமணிச்சந்திரனை வாசிக்கும் வாசகர்களில் அனேகர் பெண்களாகவிருப்பது உண்மைதான். ஆனால் ரமணிச்சந்திரன் விரும்பப்படுவதற்கு காரணம், உண்மையிலே வாசிப்பதற்கு இலகுவாக விருப்பதும் மற்றது வாசிப்பவர் எழுத்தாலோ அல்லது அக்குறிப்பிட்ட எழுத்தை வாசிக்கும் வாசகராலோ எந்தவிதமான பாதிப்பையும் பெறுவ தில்லை. தாக்கம் என்ற ஒன்று இடம்பெறுவதில்லை. ரமணிச்சந்திரனின் படைப்புக்கள் ஒருவிதமான சலனஉணர்வையும், மிதப்பையும்தான், ஏற் படுத்துகின்றன. அது ஒருவிதமான பொழுதுபோக்கு அம்சம் மட்டுமாக இருக்கின்றது. அவ்வளவுதான். ஏனென்றால் சூழலால் எழுகின்ற நெருக்கடி களைவிட அதிலிருந்து விடுபடுகின்ற, ஒரு Relaxe தன்மை வாய்ந்த ஒன்றையே வாசகர்களில் சிலர் விரும்புகின்றார்கள். நெருக்கடித்தன்மைவாய்ந்த ஒன்றை அவர்கள் சூழலிலும் பெற்று, எழுத்திலும் பெறுவதில் விரும்புவதில்லை. விமர்சனமோ, குற்றச்சாட்டுக்கள் நிறைந்தவற்றையோ, மிதமான வாசகர்கள் எதிர்கொள்ள விரும்புவதில்லை. ஒருவிதத்தில் இது ஒரு நழுவல் நிலைதான்.

எனவே அதிகளவான நெருக்கடி மிகுந்த சூழ லொன்றிலிருக்கும் ஒரு வாசகன் அதிலிருந்து விடுபடவே விரும்புவதால், எழுத்தின் ஒரு மலினமான, சுமைகளற்ற எழுத்தொன்றை தெரிவு செய்கின்றான். அது ரமணிச்சந்திரனின் படைப்புக்களாகவோ, அதனையொத்த படைப்புகளாகவோதான் அவை அமையும். சிறுவர் பத்திரிகை யொன்றை மேலோட்டமாகப் பார்ப்பதுபோன்றது. எனவே வாசிப்பை தரப்படுத்தவோ, வளப்படுத்தவோ வேண்டியது வாசகனைச் சார்ந்ததுதான். அது எழுத்தாளனைச் சார்ந்தது அல்ல. வாசகனுக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கவில்லை என்பதற்காக, ரமணிச்சந்திரனைப் போல் இன்னும் எழுதிக் கொண்டிருக்க முடியாது. இன்னொருபுறம் வைரமுத்து, மேத்தா போன்றவர்களின் பாணியிலிருந்து விடுபட்டு கொஞ்சமாவது சொந்தமான ஒரு எழுத்துப்பாணியில் நின்று ஓரளவு தரமான எழுத்துக்களை வழங்குவதற்கு - வளர்ச்சிய டைந்திருக்கின்ற நாம், இந்த வாசகர் வட்டத்தை கண்டு பயந்து தடுமாறி மீண்டும் பழைய பணிக்கோ, அல்லது ரமணிச்சந்திரனைப் போன்றோ எழுத முடியாது.

எனவே கல்வியாளர்களோ, அல்லது கலைச் செயற்பாட்டாளர்களோ, நூலகங்களோதான் இதே நிலமையை மாற்றி நல்ல தரமான படைப்புக்களை நூலகங்களில் சேர்க்கவேண்டும்

**மலர்ச்செல்வன்:** நீங்கள் முன்னர் குறிப்பிட்டீர்கள் இந்தியாவிலுள்ள பதிப்பகங்கள் பெண் படைப்புக் களை வெளிக்கொணர்வதில் அக்கறைகாட்டுவது போல் இங்கு இல்லை என்கிறீர்கள் அதாவது 'அணங்கு' 'பனிக்குடம்' போன்றவை பெண்கள் சார்ந்தவற்றை முதன்மைப் படுத்தி வெளியிடு வதனை போன்று இங்குள்ள பதிப்பகங்கள் செய்வதில்லை. ஆனால் நீங்கள் அங்குள்ள மக்கள்தொகை அதிகம்பற்றியும், அதனால் பதிப்பகங்களின் எண்ணிக்கையும் அதிகம் என்று கூறுகின்றீர்கள். உண்மையில் தமிழ் நாட்டில் 7 கோடிப்பேர் இருந்ததபோதும் குழுக்களிடை யேயான ஒத்துழைப்பும், கருத்தியல் ரீதியான உடன்பாட்டுச்சூழலும் மிகக்குறைவு ஆனால் இலங்கையில் குறிப்பாக தமிழ் எழுத்தாளர் களிடையே அதுவும் பெண் எழுத்தாளர்களிடையே ஒற்றுமைத்தன்மை இருப்பதாக ஒப்புக் கொள்கிறீர்கள் அப்படியானால் ஏன் உங்களால் உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்போடு ஒரு பதிப்பகத்தை இங்கு உருவாக்க முடியவில்லை? சூரியாபெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் கட்டமைப்பு வேறு அதற்குரிய நிதியாளர்கள் வேறு அவர்களின் நோக்கங்கள்வேறு.

**உருத்திரா:** இந்தக்கருத்து மிகுந்த மேல்தளத்தி லிருந்து நோக்கியமையால் மலர்ச்செல்வனுக்குத் தோன்றியிருக்கலாம். ஆண் எழுத்தும், வெளியீடும் என்பதும் என்னைப் பொறுத்தவரை இங்குள்ள சூழலின் மூலம் வேறு செயற்பாடு கொண்டவை என்றே நான் கருதுகின்றேன். ஏனெனில் ஓர்



அறிமுகப் படைப்பாளர்களின் இடையோனான ஓர் சமுகத் தொடர்பே இங்குள்ளது. மிகுந்த பிரபல்யமான அல்லது எழுதித்தள்ளிய படைப்பா ளர்களுக்கும் அதே தரத்திலான படைப்பளர்களி டையேயான தொடர்பு என்பது மிகுந்த சொற்பமானது.

ஏனெனில் இங்குள்ள மலர்ச்செல்வன் குறிப்பிட்ட எழுத்தளார்கள் என்பவர்கள் இரண்டு மூன்று ஊடகங்களில் எழுதியபின் அறிமுகமா னவர்கள். ஆகவே அதேநிலையிலுள்ள ஒருவர், தன்னைப்போல் அறிமுகமானவர்களை தேடுவ தையோ, அவர்களிடமிருந்து படைப்புக்களைச் சேகரிப்பதனையோ யோசிக்கமாட்டார்கள், அதாவது அடுத்தபடைப்பை இன்னும் கடமையாகவோ, அல்லது தரமானதாகவோ படைக்கவேண்டிய நிலையிலுள்ள எழுதிக்கொண்டிருக்கின்ற ஒருவர் பதிப்பையோ, சேகரிப்பையோ பற்றி நினைக்க ஏலாது. அது எத்தகையதூரம் நியாயமானது என எனக்குப் புரியவில்லை. முதலாவது நிலையில் நின்று கொண்டு மூன்றாவது நிலையைப்பற்றிச் செயற்படவாய்ப்புக்கள் இல்லை. அதில் அர்த்த மில்லை. என்றுதான் நான் நினைக்கின்றேன்.

**அனார்:** என்னைப் பொறுத்தவரை என்னுடையது போன்ற சமூகச் சூழலிலிருந்து முற்றாக விடுபட்டால் தான் அது சாத்தியமாகுமென நான் நினைக் கின்றேன். நாங்களே எழுதி நாங்களே வெளியி டுவது சாத்தியமானதாக மாறும். எழுதிக் கொண்டி ருக்கும் தளத்திலேயே பலசிக்கல்களை எதிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் நிலையில், இது சாத்தியமானது இல்லை. நிறுவன ரீதியாகக் செயற்படும் அமைப்புக்களோ அல்லது செயற்பாட்டாளர்களோதான் இதனைச் செய்ய முடியும். உதாரணமாக சூரியா பெண்கள் அமைப்புக் கூட இதுபற்றி யோசிக்கலாம்.

**விஜயலட்சுமி:** இதுபற்றிய முயற்சிகள் எம்மிடமுள்ளனதான். ஆனால் அதனை வடிவமைத்துச் செயற்படுத்துவது சிக்கலானது. எழுதுவதுமட்டும் வேலையாய் இருந்தால் தொகுப்புக்களைப்பற்றி யோசிக்கலாம். ஆனால் எழுதுபவர்களையும் வளர்த்து, தெரிந்து கொண்டு இன்னொருபுறம், முழு வேலையையும் உழைப்பையும், வேண்டிநிற்கின்றது பதிப்பகத்தைப் பற்றி யோசிப்பதென்பது தனியான ஓர் செயற்பாடு. எனவே பதிப்பகத்தை யோசித்தால் அங்கொன்றும் இங்கொன்றுமாக சேர்த்து வளர்க்கின்ற எழுத்தாளர்களை இழக்கவேண்டும். எழுத்தாளர்களை யோசித்தால் பதிப்பகத்தை இழக்கவேண்டும். இந்நிலையில் நீண்டகால ரீதியான செயற்பாடுகளின் கூட்டுறவே நல்ல மாற்றங்களை சாதிக்க வழிகோல் வேண்டியிருக்கும் ஒரு கருவியாகும்.

**மலர்ச்செல்வன்:** பெண்களே எழுதி பெண்களே பதிப்பிப்பது அசாத்தியமானதென்று கூறுவது அர்த்தமற்றது. ஏனெனில் எழுத்தளார்களே ஒரு அசைவியக்கமாக செயற்படமுடியும். இந்தியாவைப் பொறுத்தவரை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உண்டியல் குலுக்கித்தங்கள் இலக்கியத்தினை செயற்படுத்துகின்றது. NGO's வையோ, அல்லது பேறு உதவி நிறுவனங்களையோ நம்பி அல்ல. அப்படியிருக்கையில் ஏன் உங்களால் செய்ய முடியாது?

**அனார்:** உண்டியல் குலுக்க இறங்கும் சூழல் இங்கு இல்லை. ஏனெனில் பெண்களின் எழுத்தையே இன்னும் விளங்கிக் கொள்ளாத சமூகமொன்றில் தெருவில்நின்று கொண்டு உண்டியல் குலுக்குவதனை அனுமதிக்க போவதில்லை. அது அசாத்தியமானது. பெண்கள் எழுதும்போதே ஆயிரம் பிரச்சினைகளைத்தான் இங்கு எதிர் கொள்கின்றனர். ஒவ்வொரு சொல்லாய்ப் பெண் எழுத்து விமர்சிக்கப்படுகின்றது. எழுதும் போது ஆயிரம் தணிக்கைகள் செய்து யோசித்து யோசித்துத் தான் சில விடயங்களை எழுதுகின்றோம். அதிலும் சில விடயங்களை இன்னும் எழுத



முடியாமல் இருக்கின்றது. ஒரு காதல் கவிதையைக் கூட எமது சமூகத்தை பொறுத்தவரை எழுதுவதென்பது பெரிய கண்டனத்திற்குரியது. 'உன்னை எழுதவிட்டதே' பெரிய விடயம் என்றிருக் கையில் இப்படியான செயற்பாடுகளைச் செய்யும் போது அவற்றின் அவசியம்பற்றிய கேள்விகளே அதிகமாக வருகின்றது. வரும். அதாவது எழுதியவை பற்றியதாக வரும் கேள்விகளுக்குப் பதில் சொல்லி முடியாமல் இன்னமும் இருக்கையில் களச் செயற்பாடுகள் என்பது எத்தனை தூரம்?

**மலர்ச்செல்வன்:** பொதுவாக பெண்களிடையே ஊடாட்டம், ஒற்றுமை இல்லாத்தன்மை போலத்தான் எனக்குத் தெரிகின்றது. அங்கொன்று இங்கொன்றாய் உதிரி உதிரியாக இருப்பதாலும் உங்களிடையே கூட்டு அசைவியக்கம் இல்லாத்தன்மையும் இதற்கு காரணமாக எனக்குப்படுகிறது. அதேநேரம் ஆண்கள்தான் பெண்களின் எல்லா எழுத்தையும் அமுக்குகிறார்கள் என்பதில் எனக்கு உடன்பாடில்லை. ஏனென்றால் ஆண்கள் ஏதோ ஒருவகையில் பெண்களின் எழுத்தைத் தூண்டுகின்ற செயற்பாட்டைச் செய்து கொண்டேயிருக்கிறார்கள். ஒரு சில வக்கிரமான ஆண்கள், தாங்கள் கட்டியெழுப்பிய கட்டமைப்பைத்தாண்டி, தங்களுடைய புகழை உடைத்து, ஒரு பெண் வெளிவந்து பேசப்படுகிறாள் என்ற இயலாமையில் கோழைகளாகச் செயற்படுகிறார்களேதவிர, முற்று முழுதான ஆண்களை இதே கண்ணோட்டத்தில் பார்க்கக் கூடாது.

**அனார்:** அவ்வாறல்ல எழுத்து என்ற செயற்பாட்டில் ஆண், பெண் என்று பார்ப்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்க்கவேண்டும் என்றுதான் கூறுகின்றோம். எழுத்தில் ஆண் எழுத்து பெண் எழுத்து என்று பிரிக்கத்தேவையில்லை. எழுத்துச் செயற்பாடு என்பது பொதுவானது. அதில் பெண்கள் ஆண்களை ஒதுக்கவில்லை இணைந்து செயற்படத் தயாராகவுள்ளோம்.

நியாயமாகச் செயற்படுபவர்களோடு இன்றும் சேர்ந்துதான் இயங்குகின்றோம். மூன்றாவது மனிதனை பௌசர் கொண்டுவரும்போது 'பௌசரை' ஆண் என்றுபார்பதில்லை. மறுகாவை மலர்ச்செல்வன் கொண்டுவரும் போது மலர்ச்செல்வனை ஆண் என்று யோசிப்பதில்லை. அவர்கள் பெண்கள் தொடர்பில் நியாயமாகச் செயற்படுவதால் அவர்களது செயற்பாடுகளில் எம்மை இணைத்துக் கொள்கின்றோம்.

எனவே எழுதும் பெண்களின் வீதமானது ஒப்பீட்டு ரீதியில் மிகக் குறைவாக உள்ள தொரு நிலையில் அவர்களை பெண் எழுத்து என்று பாகுபடுத்தாமல் அவர்களையும் பொதுச்செயற்தளத்தில் இணைத்துக் கொள்ளும்போது கணிசமான பாதிப்பை, அதற்குரிய முயற்சிகளை இணைந்தே உருவாக்குவது மிகவும் சுலபமானது.

**மலர்ச்செல்வன்:** அதுசரி எனக்குப்புரிகிறது ஆனால் 70, 80களில் பெண்களின் செயற்பாடுகள் மிகுந்த வீச்சு நிறைந்ததாக, காத்திரமானதாக இருந்திருக்கின்றது. அத்தகைய நிலைகள் இன்று இல்லை. அது என்?

**உருத்திரா:** என்னைப் பொறுத்தவரை 70, 80கள் என்பது பெண்களின் முதலாவது தொடக்கம்தான். எழுத்து என்பது மட்டுமல்லாது அரசியல், பொருளாதார முற்போக்கு எண்ணங்களின் எல்லாச் செயற்பாடுகளும் கிளர்ச்சியுற்று முதன் முதலாக எழுந்த காலப்பகுதிதான் அது. இந்த முதன் முதலாக இருத்தல் என்பதும், அடுத்த அடுத்த கட்டங்கள் என்பதும் நாம் யோசிக்க வேண்டிய தொன்று. முதலாவது என்பது சில வேளைகளில் அதிகமான உச்சபட்ச முயற்சியோடு உருவாவதாகக் கூட இருக்கின்றது. அந்தவகையில்தான் 80களை நாம் குறிப்பிடலாம்.
முதலில் வெற்றிப்படங்களை தந்த ஒரு புது *Hero*வின் பரபரப்பு அவரது அடுத்த அடுத்த படங்களுக்கு இருப்பதில்லை. 80களும் அப்படியே



தான். அன்றிலிருந்து இன்றுவரைக்கும் என்பது அடையாளங்களை பெற்று உறுதிப்படுத்தியவர்களும், அவர்களது அடையாளங்களைப் பற்றியதுமான களமாகவே அடுத்த அடுத்த கட்டங்கள் அமைகின்றது. அதாவது அடையாளம் பெற்றவர்களிடமே இலக்கியம் திரும்பத்திரும்ப உருளவேண்டியிருந்தமை இந்நிலமைக்கு காரணமாக இருக்கலாம். அதுதான் நடக்கின்றது. உதாரணமாக இன்று வெளிவரும் ஒரு தரமான இலக்கியம் பேசும் இதழை எடுத்தால் ஒரு வழக்கமான பெயர்பட்டியலையே காண்கின்றோம். எனவே முதலாவது போன்றதான தொடர்ச்சி என்பது தொடர்ந்து நடைபெறுவதில்லை. அது ஒரு தொடர்பு நிலைதான். 80களிலிருந்து எழுதியவர்களின் இன்றுவரை வெற்றிபெற்றவர்கள் எத்தனைபேர்?

**மலர்ச்செல்வன்:** எனக்கு உண்மையில் எழுத்துப் பாகுபாடுகள் இல்லை. இருப்பினும் நீங்கள் கூறுங்கள் அண்மைக்கால பெண் எழுத்தைப்பற்றி என்ன அவதானிப்பு உங்களிடம் உள்ளது?

**அனார்:** உண்மையில் பெண் எழுத்து என்ற பேதம் தமிழ் நாட்டிலிருந்துதான் பரவத் தொடங்கியுள்ளது என்று எண்ணுகின்றேன். குட்டிரேவதி, மாலதிமைத்திரி, சுகிர்தராணி, சல்மா..... என்பவர் களின் எழுத்துக்கள் பெண் எழுத்து என்றுதான் நோக்கப்படுகின்றது. அவர்கள் பேசும் ... அரசியல், பாலியல் விடயங்கள் பற்றியதாக அவை அதிகம் அமைந்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் என்னைப் பொறுத்தவரை தமிழ் நாட்டில் வரிசைப்படுத்தப்பட்டிருக்கின்றவை மட்டும்தான் பெண் எழுத்து என்பதும் இல்லை. அவற்றைத்தான் இங்குள்ள நாமும் பிரதிபலிக்கவேண்டும் என்பதும் இல்லை. ஆனால் பெண்கள் என்ற ரீதியில் ஒன்றுபட்டு நிற்கலாம். சூழ்நிலைகள் ஒன்றுபட்ட வையல்ல எமது சூழ்நிலை வேறு. அதிக அச்சுறுத்தல் நிறைந்த... நினைத்ததை எழுத முடியாதது. எமது அரசியற் சூழலும் சட்டதிட்டங் களும், எமது படைப்பாற்றலை தீர்மானிக்கின்றது. மிகுந்த அவதானத்துடன் சுயதணிக்கை செய்தே எழுதவேண்டியுள்ளது. இன்னும் சில விடயங்களை எமது முழு ஆற்றலோடு எழுதமுடியாதுள்ளது. எமது சூழ்நிலைதான் கவிதைகளையும் பாதிக் கின்றது. ஆனால் தமிழ் நாட்டில் அப்படியல்ல. அவர்களது சூழ்நிலை அவர்கள் அனுபவங்களை வெளியிட அனுமதிக்கின்றது. புறரீதியில் அவர்களை பங்கிட்டுக்கொள்ளும் சூழ்நிலை இல்லை. அதனால் அவர்கள் தேடி எழுதுவதற்கு ஏதுவாக அமைகின்றது. நரம் அப்படியல்ல. அவ்வாறு வாய்ப்பானதாக எமது சூழ்நிலையும் அமையும் போது எம்மிடமிருந்தும் நல்ல நாவலோ, வேறுதொகுப்புக்களோ வரலாம். எழுதமுடியாது என்பதல்ல. எழுதுவதற்கு விடயங்கள் உண்டு. ஆனால் எழுதுவதற்கான சுதந்திரம் பூரணமாக வழங்கப்படவில்லை என்பதுதான் உண்மை. அவை கிடைத்தால் நிச்சயம் முடியும் ஒரு நல்ல நாவலையோ, தொகுப்பையோ தருவதற்கு

**மலர்ச்செல்வன்:** இறுதியாக அனார் குறிப்பிடுங்கள். அண்மையில் ஓர் இலக்கியப் பயணமாக இந்தியாவின் ஒரிசா மாநிலத்திற்குச் சென்றீர்கள். அங்கு ஈழத்துப் படைப்பாளி என்ற வகையில் உங்களை எவ்வாறு பார்த்தார்கள்? /நோக்கினார்கள்?

**அனார்:** ஈழத்துப் படைப்பாளி என்ற எந்தவொரு விசேஷ தன்மையும் அங்கு இல்லை. எல்லா நாடுகளிலும் இருந்து வந்திருந்தமையால் எழுத்தாளர்கள் அனைவரும் பொதுவாக இருந்தோம். ஆனால் என்னுடைய கவிதை மேலும் சில இரத்தக் குறிப்புகள் - *Translation* வாசித்த பிறகு, என்மீதான பார்வையில் கொஞ்சம் வித்தியாச மிருந்தது. கவிதையின் கரு, அதுபேசிய விடயம் அவர்களைப் பாதித்திருக்க வேண்டும் என நான் நம்புகின்றேன். அதனால் அந்த வித்தியாசமான பார்வையும் அணுகுதலும் ஏற்பட்டிருக்க இடமளித்தன.

பரிவும், இலங்கை எழுத்தாளர் என்ற விசேட அக்கறையும் கவிதை வாசிப்பின், பின்னர்தான் எனக்குக் கிடைத்தது. ஏனைய நாட்டுப் படைப்பாளர் களிடம் கூட ஒரு நெருக்கத்தை இதன் பின்னர் நான் உணர்ந்தேன்.

**மலர்ச்செல்வன்:**ஏன் இதனை, நான் கேட்கிறேன் என்றால் குறிப்பாக தமிழ் நாட்டில் இருக்கும் ஜெயமோகன், வெங்கட்சாமிநாதன் போன்றவர்கள் இலங்கையில் நல்லதரமான படைப்புக்களோ, படைப்பாளர்களோ இல்லை, என்றதையே அவர்கள் கொண்டுள்ளனர். ஆனால் அனார் குறிப்பிட்டதனை நோக்கும் போது, இங்குள்ள சிறந்த படைப்புக்களை இவ்வாறு விமர்சிக்கும் தமிழ் நாட்டு எழுத்தாளர்கள் வாசிக்கவில்லை, அல்லது அவர்களுக்குப் போய்ச்சேரவில்லை என்றே தோன்றுகின்றது.

**அனார்:** மொழிபெயர்ப்பு கவிதையை நான் கொண்டு சென்றிருக்காவிடில் எனக்கும் நீங்கள் குறிப்பிட்ட அபிப்பிராயத்தை சார்ந்தவளாகவே இருக்க வேண்டியிருந்திருக்கும் என நினைக்கின்றேன். அங்கு வந்திருந்த ஏனைய படைப்பாளர்களை, எனது மூலக்கவிதையைவிட மொழிபெயர்ப்பு கவிதைதான் பாதித்திருந்தது. எனவே எமது படைப்புக்கள் கட்டாயம் மொழி பெயர்ப்பு செய்யப்பட வேண்டும். அப்போதுதான் அது பலரைச் சென்றடைவது மட்டுமல்ல, பலரின் அபிப்பிராயங்களை உருவாக்கவும், பலரின் உணர்வுகளோடு தொடர்பினைப் பெறுவதற்குமான வழியாக அமையவும் வாய்ப்பு ஏற்படுகின்றது என்பது என் கருத்து. ஏனெனில் எம்மிடமுள்ள மிகச்சிறந்த, அல்லது நல்ல ஆக்கங்கள் மொழிபெயர்ப்புச் செய்யப்படவில்லை.

**மலர்ச்செல்வன்:** அனார் இதில் இன்னொரு பிரச்சினையுள்ளது. இலங்கையிலிருந்து தமிழ் நாட்டையோ, முழு இந்தியாவையோ சென்றடையும் சில மலினமான படைப்புக்களை, கொண்டு மொத்த ஈழத்துப் படைப்பும் - இதுதான் என்ற மாயை ஏற்படுகின்றது. இன்று ஆழியாள், சேரன், உங்கள் படைப்புக்கள் என்று அண்மைக் காலத்தில் கிடைக்கின்ற ஒரு சில படைப்புக்கள் தவிர முன்னர் கிடைத்த மலினமான சில படைப்புக்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே ஈழத்து மொத்த படைப்புக்களையும் மலினமானதாக கருதுவதும், பின்னர் ஒரு சில நல்லதரமான படைப்புக்கள் கிடைக்கின்றபோதுதான், குறிப்பாக உங்களுக்கு கிடைத்த மாதிரியான கௌரவமும் மரியாதையும் பெற வழிஏற்படுகின்றது என்று கருதலாம். அப்படித்தானே?

**அனார்:** நிச்சயமாக தமிழ் நாட்டின் இலக்கியப்பார்வையில் நல்ல ஆரோக்கியமான மாற்றங்கள் ஈழத்து இலக்கியப் படைப்புக்களை, சிறந்த படைப்புக்களை பரவலாக்கம் செய்வதில் தமிழ் நாட்டின் பெருந் தொகையான பரப்பும், பரவலும் அவசியம். தமிழ் நாட்டின் வெளியீடுகளில் ரமணிச்சந்திரனையும் வாங்குகின்றோம், ஜெயமோகனையும், ராமகிருஷ்ணனையும் வாங்குகின்றோம். ஆனால் ஈழத்தின் ஓட்டமாவடி அறபாத்தையோ, மலர்ச் செல்வனையோ, S.L.M.N. ஹனிபாவின் படைப்புக்களையோ, இந்தியாவின் எத்தனை கடைகளில் வாங்க முடியும்? எனவே ஈழத்துப் படைப்புலகம் சந்தைதொடர்பாக விரிவடைய வேண்டியுள்ளது.

இன்னொருபுறம் காலச்சுவடு வெளியீட்டால் தான், ஈழத்து படைப்புக்களை வாங்குகின்ற மனோ பாவமும் அங்கு உள்ளது. ஆனால் தனியே இங்கு வெளியீடு செய்பவற்றை, அங்குள்ளவர்கள் தேடி, ஆராய்ந்து விரும்பி வாங்குகின்றார்கள் என்பது கேள்விக்குரிய விடயம். ஒரு அடையாளம் வேண்டியிருக்கிறது. நாம் படைத்தவற்றை அங்கு போய் நிரூபித்துக் காட்ட வேண்டியிருக்கின்றது.

**மலர்ச்செல்வன்:** தமிழ்நாட்டில் இருந்து எழுதுகின்ற எஸ். ராமகிருஷ்ணனின் சாணக்கியாவின் நல்ல படைப்புக்களை வாமு – கோபுவின் சிறந்த படைப்புக்களை என நாம் இங்கிருந்தே வாசிக்க பழகியிருக்கின்றோம். ஆனால் அவர்களிடமிருந்து இவ்வாறான மனோபாவம் ஏன் வரவில்லை? அல்லது இது அவர்கள் சார்ந்த குறைபாடாக கொள்ளலாமா?

**அனார்:**அது யாருடைய குறைபாடு, என்பதைவிட, நாம் நல்லதேர்வுகளோடு வாசிக்க பழகியிருக்கின்றோம் என்பதுதான் முக்கியம். அது நல்லதொரு செயற்பாடு அல்லவா?

**விஜயலட்சுமி:**இந்நிலமை எல்லோருக்கும் சாத்தியமானது என்று கூறுவதற்கு இயலாது. ஏனெனில் எமது பொது நூலகங்களிடையே உள்ள எல்லா நூல்களும் மிகச் சிறந்தவை எனக் கூறமுடியாது. தேர்ந்த வாசிப்பிற்கு இடமளிக்காதவையும் நூல் நிலையங்களில் உள்ளது.

**மலர்ச்செல்வன்:** எமது நூல் நிலையங்களில் இந்தியாவின் மலினப் படைப்புக்களால்தான் நிரம்பியிருக்கின்றன. நல்ல காத்திரமான படைப்புக்களை தேர்வின் போது கவனித்து கொள்வனவு செய்வதில்லை. ரமணிச்சந்திரன் படைப்புக்கள் தான் எங்கள் நூலகங்களிலும் நிரம்பியிருக்கின்றன. காத்திரமான படைப்புகளை ஒவ்வொரு நூல்நிலையங்களிலும் எண்ணி எடுக்கவேண்டியுள்ளது. எனவே இவ்வாறான வாசிப்பு நிலமைகளுக்கு நூலகங்களும் ஒரு காரணம் என்றுதான் கூற வேண்டும்.

**உருத்திரா:**என்னால் இதனை முற்றாக ஏற்றுக் கொள்ள இயலாது. நூலகங்கள் நல்ல வாசிப்பு, மோசமான வாசிப்பு என்ற அடிப்படையில் நூல்களைக் கொள்வனவு செய்வதில்லை. ஒரு ஒதுக்கீட்டில் அகப்படுவனவற்றை விலைக்க ழிவுகளோடு கொள்வனவு செய்கின்றது. இக் கொள்வனவு கூட நகர, கிராம அளவீடுகளால் கட்டுப் படுத்தப்படுகின்றது. இன்னொரு புறம் அதிகவாசிப் பிற்கு, அல்லது அதிகதடவை அதிகமானோரால் உட்படுத்தப்படுகின்ற நூல்களை அதிகளவு கொள்வனவு செய்ய இடமேற்படுகின்றது. எனவே தீவிர வாசிப்புக்குரிய, அல்லது நாம் கூறுவது போன்ற சிறந்தவாசிப்பு நூல்களை, ஒரு குறிப்பிட்ட வட்டத்தினர்தான் பயன்படுத்துவர். ஒரு குறிப்பிட்ட சிறியளவினர்களுக்காக நூலகங்கள் முற்றிலும், மற்றயவற்றை புறக்கணிக்க இயலாது.

●

ஏன்? நமது சிற்றிதழ்கள் கூட 'தனிச்சுற்றுக்கு மட்டும்' என்ற வரையறையோடு குறிப்பிட்டளவான தொகை மட்டும்தானே வெளியிடப்படுகின்றது? எனவே இதே கொள்கைகள் தான் நூலகங்களுக்கும் பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் பாலினம்

## நவரசம் திரைப்படம் பற்றிய ஓர் அறிமுகக் குறிப்பு

—சித்திரலேகா மௌனகுரு



மனித சமூகத்தின் இன்றியமை யாத அடிப்படை அம்சமொன்றாகப் பால்மை அல்லது பாலியல்பு *(Sexuality)* அமைந்திருப்பினும் இது தொடர்பான சொல்லாடல்களும், கருத்துப் பரிமாறல்க ளும் எம் மத்தியில் மிகவும் குறைவு. மனித சாராம்சத்தின் தவிர்க்க முடியாத பாலியல்பு இயற்கையாகவே பல்வேறு பரிமாணங்கள் கொண்டது. ஆனால் ஆண் பெண் ஆகிய உடலியல், உயிரியல் சார்ந்த இரு வேறு வேறான விடயங்க ளாகவே எமது வரலாற்றுப் போக்கு இதனைக் கட்டமைத்திருக்கிறது. இந்த இருமைக்கு அப்பால் உள்ள விடயங்கள் புறமொதுக்கப்பட்டுள்ளன.

ஆண் உடலில் பெண் தன்மை யும், பெண் உடலில் ஆண் உணர்வும் உடைய பால்கடந்த நிலையுடையோர் எம்மத்தியில் இருந்தாலும் அவர்களது நிலையை அங்கீகரிக்காது பேடிகள், அலிகள் எனக் கேலியும், நையாண்டியும் செய்யும் போக்கு காணப்படுகின்றது.

> மனித சாராம்சத்தின் தவிர்க்க முடியாத பாலியல்பு இயற்கையாகவே பல்வேறு பரிமாணங்கள் கொண்டது. ஆனால் ஆண் பெண் ஆகிய உடலியல், உயிரியல் சார்ந்த இரு வேறு வேறான விடயங்க ளாகவே எமது வரலாற்றுப் போக்கு இதனைக் கட்டமைத்திருக்கிறது. இந்த இருமைக்கு அப்பால் உள்ள விடயங்கள் புறமொதுக்கப்பட்டுள்ளன.

இந்துப் பௌராணிகங்களில் ஆண் பெண்ணாக மாறுகின்ற கதைகள் இருந்த போதிலும் யதார்த்தத்தில் உள்ள பால்கடந்த மூன்றாம் பாலினத் தோரின் கதைகள் பேசப்படாது என்றும் ஒதுக்கப்பட்டே வந்துள்ளன.

ஆனால் கடந்த சில வருடங் களாக குறிப்பாக தமிழ் நாட்டில் மாற்றுக் கலாசாரக் குழுக்களிடையேயும் சிந்தனை யாளர்களிடையேயும் மூன்றாம் பாலினம் பற்றிய வெளிப்படையான சொல்லாடல்கள் இடம்பெறுகின்றன. மூன்றாம் பாலினத்தோர் தமது அடையாளத்தையும் உரிமைகளையும் உறுதி செய்யும் வகையில் தமக்கென அமைப்புகளை உருவாக்கியும் உள்ளனர். தமிழ்நாடு அரவாணிகள் சங்கத்தை உதாரணம் கூறலாம். இது தவிர வேறு சிறிய அமைப்புகளும் அவர்களிடையே உள்ளன.

பாலியல் ஆண், பெண் உறவு தொடர்பாக வினோதப் புனைவுகளை வெளிப்படுத்தும் ஜனரஞ்சகத் தமிழ்ச் சினிமா மூன்றாம் பாலினத்தோரை நகைச்சுவைப் பாத்திரங்களாகவும், நையாண்டிக்குரியோராகவும் கட்டமைத்துள்ளது.

தமிழ்ச் சினிமாவின் வன்முறை, வக்கிரம் குறித்துப் பேசுவோரும் மூன்றாம் பாலினத்தவர் மீதான சினிமா வன்முறை குறித்துப் பேசுவதில்லை.

* *

சந்தோஷ் சிவனது இயக்கத்தில் 2005ம் ஆண்டு பிற்பகுதியில் வெளியான 'நவரஸ' எனும் திரைப் படம் மூன்றாம் பாலினம் பற்றிய திரைப்படம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதின்மூன்று வயதுச் சிறுமியான ஸ்வேதாவின் பார்வையூடாக நவரஸ பேசுகிறது.

மூன்றாம் பாலினத்தோரின் உளநிலை, சிந்தனை, அவர்கள் சமூகத்திலும், குடும்பத்திலும் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், மன அங்கலாய்ப்புகள், ஆசைகள் ஆகியவற்றைப் புரிய வைக்கும் முறையில் ஒரு சிறுமியின் பார்வையூடாக கதையை இயக்கியுள்ளார் சந்தோஷ் சிவன். இத் திரைப் படத்தின் கதை இப்படி அமைகிறது.

“ஸ்வேதா பெற்றோருக்கு ஒரே பிள்ளை. தாய், தந்தை, ஸ்வேதா ஆகியோருடன் தந்தையின் இளைய சகோதரனான கௌதமும் வாழ்கிறான். கௌதம் உடலால் ஆணாக இருப்பினும் மனதால் பெண்ணாக வாழ்கிறான். பகலில் ஆண்போலவும், இரவில் பெண்ணாகவும் வாழ்கிறான். பருவமடையும் சிறுமிக்கு கையளிக்கப்படும் குடும்பத்தின் பாரம்பரிய அணிகலன்கள் கௌதத்தையே அதிகளவு ஈர்க்கின்றன. எவருக்கும் தெரியாமல் அந்த அணிகலத்தை கௌதம் அணிவதற்காக எடுத்துச் செல்லும்போது பின்தொடரும் ஸ்வேதா இரவில் பெண்ணாகும் சித்தப்பாவைக் காண்கிறாள். நீங்கள் யார் என்ற வினாவுக்கு விளக்கமளிக்க மகாபாரதத்தில் இடம்பெறும் அரவான் மோகினி கதையை கௌதம் கூறுகிறார். அர்ஜுனனின் மகனான அரவானை களப்பலி கொடுக்கத் தீர்மானித்தபோது அவன் தனது திருமண விருப்பத்தை வெளியிடுகிறான். விஷ்ணு மோகினி வடிவமெடுக்க திருமணம் நடைபெறுகிறது. ஒரு இரவு இருவரும் ஒன்றாக இருந்தபின் அரவான் இறந்து போகிறான்.

விழுப்புரத்திற்கு அருகிலுள்ள கூவாகம் கிராமத்தில் உள்ள கூத்தாண்டவர் கோயிலில் வருடத்துக்கு ஒருமுறை இந்தக் கதை நிகழ்த்தப்படுகிறது. இந்தியா முழுவதிலும் இருந்து அங்கு கூடும் அரவாணிகள் தாலிகட்டிக் கொள்வதும், அடுத்தநாள் அரவான் இறப்புக்காக ஒப்பாரி வைப்பதும் வளையலை உடைப்பதும், தாலி அறுப்பதும் நிகழும். கூவாகம் சடங்கில் கலந்து கொள்ள கௌதமும் செல்கிறான். அவனைத் தேடிப் புறப்படும் ஸ்வேதா மூன்றாம் பாலினத்தவர் உலகுக்கு அறிமுகமாகிறாள். அவர்களிடையே ஒரு தனித்த உலகம். அவர்களது ஆசைகள், இன்பங்கள், தோழமைகள், துயரங்களுடன் இருப்பதை




அறிந்து கொள்கிறாள். வடநாட்டிலிருந்து கூவாகம் விழாவிற்கு வரும் அரவாணியான பொபியின் நட்பும் கிடைக்கிறது. விழா முடிந்தபின் கௌதத்தை வீட்டிற்கு கூட்டி வரும் ஸ்வேதா தனது பெற்றோருக்கு நிலையை விளக்க முனைகிறாள்.

ஆனால் குடும்ப கௌரவத்தைப் பெரிதாக நினைக்கும் அவர்களுக்கு இதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கௌதம் வீட்டை விட்டு வெளியேறுகின்றான். எனினும் கௌதத்திற்கும், ஸ்வேதாவுக்கும் இடையேயான பாசப் பிணைப்பு தொடர்கிறது. கௌதம் அவளை வந்து பார்ப்பதாகச் சொல்வதுடன் கதை நிறைவுறுகிறது.

ஆனால் படம் பார்ப்பவர்களின் சிந்தனைகளும், உணர்வுகளும் தட்டிவிடப்படுகின்றன. அவரவர் இயல்பை நாம் ஏன் ஏற்க மறுக்கிறோம்? மனிதர் தங்களைத் தங்கள் இயல்பில் உணரவும், வெளிப்படுத்தவும் சாத்தியமான வெளியொன்று எமக்கு வேண்டாமா?

‘நவரஸ’ இந்த வினாக்களுக்கு எம்மை இட்டுச் செல்கிறது. இத்திரைப்படம் மிகக் குறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செலவில் தயாரிக்கப் பட்டது. 95 நிமிடங்கள் நீளமானது. சந்தோஷ் சிவனே கமராவையும் கையாண்டு படத்தையும் இயக்கியுள்ளார். ராஜா சந்திரசேகர் கதைக்கான ஆராய்ச்சியில் ஈடுபட்டதாகக் கூறப் படுகிறது. திரைப்பட பிரதி ஆக்கத்தில் சந்தோஷ் சிவனுடன் விஷ்ணுவர்த்தன், ராஜா சந்திரசேகர் ஆகியோரும் பங்கு பற்றியுள்ளனர். படத்திற்கான இசை யமைப்பு அஸ்லம் முஸ்தபா.

இத்திரைப்படம் புனைவு, தொன்மம், ஆவணம் ஆகிய வற்றை இயல்பாகக் கலக்கிறது. ஸ்வேதாவிடம் அரவான், மோகினி கதையைக் கௌதம் கூறுகிறார். கௌதத்தின் வாழ்க்கை யதார்த் தத்துடன் அரவான் மோகினி தொன்மம் கலக்கிறது. கூவாகத் திருவிழா இவற்றுடன் சேர்கிறது. கூவாக திருவிழா, விழுப்புரத்தில் அரவாணிகளிடையே நடை பெறும் அழகுப் போட்டி ஆகியவை காட்சிப் படுத்தப் பட்டுள்ளன. மிக நேர்த்தியாக கௌதத்தின் கதையுடன் சேர்த்து எடிட்டிங் செய்யப் பட்டுள்ளன. அரவாணிகளின் உலகம் இக் காட்சிப்படுத்தல்களுக்குள் அழகாக விரிகிறது. உண்மையும், மாயமும் கலந்த ஒரு உலகு பார்வையாளர்களுக்கு இதன்மூலம் எட்டுகிறது.

இயற்கை ஒளியிலேயே காட்சிகள் படமாக் கப்பட்டுள்ளன. இது மிகவும் இயல்பான ஒரு தன்மையைப் படத்திற்கு அளிக்கிறது. மிகச் சாதாரண மாகவும், இயல்பாகவும் தோற்ற மளிக் கும்படி சிக்கலாக்கப் பட்ட மனிதப் பாலியல்பு ஒன்றைப் பேச முனைகிறது இப்படம். ஹேன்ட் மேட் (Hand Made Films) பிலிம் நிறுவனத்தின் வெளியீடாக இது பல சர்வதேச திரைப்பட விழாக் களில் பங்குபற்றியுள்ளது. ஆனால் பொதுவான சினிமாப் பார்வையாளர் இதுபற்றி அறியா துள்ளனர். இதனை வர்த்தக ரீதியாகத் திரையிடும் விருப்பம் தனக்கிருந்ததாக சந்தோஷ் சிவன் ஒரு பேட்டியில் தெரிவித்துள்ளார். எனினும் ஆடலும், பாடலுமே ஆக்கிர மித்திருக்கும் சினிமா ரசனை உலகில் எத்தகைய ஆரவாரமும், சப்தமும் அற்று மெதுவாய் நகரும் படம் எத்தனை நாள் திரையரங்குகளில் ஓட முடியும்?

திரைப்படத்தில் பெரிய நடிகர்கள் எவருமில்லை. பொபிடார்லிங் தன்னையே நடிக்கிறார். அவர் மட்டுமே ஒரு பொலிவூட் நடிகர். ஏனையோர் திரைப்பட நடிகர் களல்லர். அரவாணிகளுக்காக எவரும் நடிக்கவில்லை. ஸ்வேதாவும் பாடசாலை செல்லும் மாணவிதான். “குட்டி நட்சத்திரமல்ல”. ஆனால் கமராக் கோணங்களும், இயக் கமும் கதைக்குத் தேவையான உணர்வுகளை வெளிப்படுத்தியி ருக்கின்றன.

நவரஸ தேசிய திரைப்பட விழாவில் 2005ம் ஆண்டின் சிறந்த திரைப்பட விருதைப் பெற்றுள் ளது. அத்துடன் வேறு திரைப்பட விழாக்களிலும் திரையிடப் பட்டுள்ளது. சிங்கப்பூர் சர்வதேச திரைப்படவிழா, கொரியாவின் புசான் திரைப்பட விழா, தைவானில் நிகழ்ந்த தைப்பி பொற்குதிரை திரைப்படவிழா முதலியவற்றில் திரையிடப்பட்டது.

இத்திரைப்படம் பற்றிச் சில இணையத் தளங்களிலும், இந்தியப் பத்திரிகைகள் சிலவற்றி லும் குறிப்புகள் வெளிவந்துள்ளன.

எம்மத்தியில் மூன்றாம் பாலினம் பற்றிய உரையாடலை நிகழ்த்து வதற்கு அடிப்படையாக அமையக் கூடிய ஒரு கலைப்படைப்பு இது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணியா

# காற்றில் ஈரலிக்கும் காதல்

முடிவுறாத காதலின்
எச்சங்கள்
அடைக்கப்பட்ட
இருளில் மூழ்கிய
அறைச்சுவர்களில்
அழிக்க இயலாத எழுத்துக்களில்
வரையப்படுகின்றன.
உயர்ந்த மலைகளுக்கப்பால்
மெல்லிய நீல இருளில்
அவளினதும் அவனினதும்
கரைக்க முடியாத சிரிப்பொலிகள்
கேட்டபடியேதான் இருக்கிறது
உயர்ந்த கோட்டைகள்
விசாலமான இரும்புக் கதவுகள்
இவைகளைத் தாண்டி
காற்றும் கனவும்
வளர முடியாமல் போனது
பூர்வீக சாபமாகக் கூட இருக்கலாம்
ஆயிரம் கண்களுக்காகவும்
கோடிக் காதுகளுக்காகவும்
கதைகள் நிரம்பிய கண்களை
மூடியிருக்க வேண்டி
இயற்கை நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கலாம்
வாசம் நிரம்பிய சொற்கள்
நிறம் தீட்டிய பார்வை
உணர்வுகளால் நிரம்பிய உடலைச்
சுமக்க இயலாமல்
காற்றும் கூட
தள்ளாடிய படியே நகர்கிறது.
அழிந்தும் அழியாத காதலுடன்
அவளின் ஆன்மா
கிழித்தெறிந்த கந்தலாடைகள் போல
காற்றில் சடசடத்து
சிரிப்பொலிகளின் பின்னால்
மெதுமெதுவாய் ஊர்கிறது.



# பூக்கள்

கிராமத்தின்
அழகிய தெருக்களில்
பூக்களாய் மலர்ந்து
சிறுசிறு கூடுகளுக்குள்
ஆபாசங்களும்
வெளிறிய முகங்களும்
வேறுபாடுகளும் அறியாமல்
பேசவே அறியாத
ஊமைகளாகவும்
..................................
..................................
இப்படியே நிறையப் பூக்கள்
மலர்கின்றன.


ஒன்றிரண்டு
அவற்றையுமறியாமல்
கம்பிகளை ஊடுருவி
வெளியில் படர்ந்து விடுகின்றன..

சில பூக்கள்
இரவின் கதவுகளைத்
திறந்து
கழுத்துகளை
சுருக்கிட்டுக் கொள்கின்றன.
இன்னும் சில
முட்களை மாலை கோர்த்து
காயப்படும் ஆயுளோடு
காலம் கடக்கின்றன......
..................................
இவைகள் கடந்த பூக்கள்
சில
தனக்கான காற்றை
தனக்காய் நுகர்ந்து
காற்றில் இறங்கி
விரைகின்றன..
பரந்து விரியும்
நெருக்கடி அற்ற
பரப்பை நோக்கி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மொழியும் முரணும்



**உழைப்பு சார்ந்த வரலாறு, ஆதிக்கம், வெற்றி என்பன இரு சமூக அசைவினை ஒரே உலகத்திலேயே தோற்றுவிப்பதற்கொப்பான பெண் சார்ந்த பார்வையும் இருக்கிறது.**

- அத்வைதா -

இந்த நாளின் கனதி கூடிக்கொண்டே போகிறது. இது ஒரு சமய அனுஷ்டானத்திற்கென ஒதுக்கப்பட்டிருக்கலாம். என் பலவீனங்கள் பற்றி திரும்ப திரும்ப சிந்தனை கூர்மை பெறுவது மிகுந்த வலிமையை தருகிறது. அனுபவங்களைப் பகிர்வது ஒரு பெரிய தலையின் (விரிந்த மூளையுடைய) நிர்ப்பந்தமாய் இருக்கலாம். இது எங்கேயும் தாண்டி நான் நானாக மிகுந்த கஞ்சத் தனத்துடன் நாட்களை எதிர்கொள்கிறேன். அது அதுவாய் பார்க்கப்படல், இயல்புடனே ஏற்றுக்கொள்ளப்படல் என்பதை உடைக்க எடுத்த முயல்வுகளில் எரிந்து போனதும், பெருக்கெடுத்த நீரோட்டத்தில் அடித்துச் செல்லப் பட்டு தனியறையில் இயலாமையில் உழல்வதும் நானே!

தனிமையும், கற்பனைத்திறனும் உள்ளவர்களின் போக உச்சம் என்பது சுயஇன்பமே என பனை பாடினால் என்ற அரூப நூலினூடாக தான் கொண்ட அரசியல், பொருளாதார, சமூக வடிவங்களை திணிக்க முயன்ற வீரப்பத்திர பிள்ளையூடாக எதையெதையோ அழுத்த முயற்சித்திருக்கிறார் ஜெயமோகன் தனது 'பின்தொடரும் நிழலின் குரல்' நாவலில். இது 90 களுக்கான பொருத்தப்பாடுடை யதெனினும் (சிந்தனையளவில்) இன்றும் உடல் உண்மையானது. உணர்வும் கூட.

பெண்ணினது ஆளுமை, அறிவு, தேடல், அடைவு உடல் சார்ந்தது. அதுமட்டுமே என்ற ஆதிக்க மனப் பான்மை தொடக்கத்தில் மறுதலிப்பிற்குரிய தெனினும் பின்னர் தவளைக் கூச்சலின் அடங்குத லின் பின்னர் முந்திரி மரத்தைச் சுற்றி தூர்க்கப்பட்ட வெள்ளை மணல் போல ஆழ்ந்தமர்ந்து மீண்டும் சருகுகளுக்கான வரவேற்றலுடன் விடையின்றியே போகிறது.


உழைப்பு சார்ந்த வரலாறு, ஆதிக்கம், வெற்றி என்பன இரு சமூக அசைவினை ஒரே உலகத்தி லேயே தோற்றுவிப்பதற்கொப்பான பெண் சார்ந்த பார்வையும் இருக்கிறது. மேற்கோள்கள், வரலாற் றுக் குறிப்புகள், வாசிப்பு பிரதிகளின் நளின நடை களை துணைக்கழைக்காத போதும் வெறும் உளற லாகவேனும் இந்த பத்தி ஆறுதலளிக்கிறது.

மிகப் பாரமாக மனதை முட்டும் கருத்தியல்களில் அழகியல் என்பதும் மிலேச்சத்தனத்தின் பிரதிபலிப் பாய் இருப்பது பெரும் அவலம் மட்டுமன்றி தொடர்ந்து ஜெயமோகன் புரட்சிக்கென்ற உடல் பெண்ணுடை யது என அங்கலாய்க்கிறார். திரண்ட முலைகள் அனைவரையும் அரவணைக்கக் கூடியது. அதில் அவள் எவரையும் அணைத்துக் கொள்ளலாம் எனவும் யோனியின் வற்றாத கருணையின் ஊற்று எதனையும் வெளித்தள்ளி திமிராது (இந்த இடத்தில் ஆணின் தட்டையான மார்பகங்கள் சுவர்களைப் போல உள்வாங்க தவறுபவை எனவும் உணர்வுச் சத்தில் எழுச்சியடையும் ஆண்குறி எதனையும் இடித்துத் தள்ள முனையும், மாறாக அது அமைதி யையோ, திருப்தியையோ உணர்வதில்லை என்கிறார்).

இங்கு சாருநிவேதிதாவின் மொழிபெயர்ப்பில் (கடல்கன்னி) 'பிறகு டாங்க் அவர்களை விடுதிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளியே பின் பக்கத்துச் சந்தில் சந்திக்கிறாள். அவள் பயங்கர ஆபாசமான ஒரு சைகையை அவனிடம் செய்து காட்டுகிறாள். அது என்னவென்று என்னால் சொல்லக் கூட முடியாது.

''அவன் குறியை அவள் சுவைத்துக் கொண்டு இருந்தாள். ஓ மை காட். ஊது குழாய் ஊதியது. கட்டை போன்றதொரு நீண்ட வார்த்தை கொண்டிருந்தான் ஜான். அது மிகவும் சங்கடமாக இருந்தது'' என்று வரும் வரிகளில் இதன் மூல ஆசிரியரான சுகேனிக் ஆண்களின் உடல் சார்ந்த அந்தரங்கமான, சங்கடங்களை ஏற்றுக்கொள்வது பெண்களின் எழுத்துலகம் சார்ந்த பலம் என்றே கருதுகிறேன்.

> **வ**ரலாறு ஆதிக்க மனப்பான்மையுள்ள சமுகக் கட்டமைப்பாகவே எப்போதும் இருந்து வந்துள்ளது எனப் பேசும் துணை சமுகக் கூறுகள் கூட இன்றைய நிலையில் ஆண்வயப்பட்டேதான் இயங்குகிறது.

தாராளமயமாக்கலின் அடையாளச் சின்னங்களில் ஒன்று பெண்களின் உடல் வெளிப்பாடு. இது குறித்த சில சதவீதத்தினருக்கானதாய் மாற்றப்பட்டு சினிமா அரசியல் மேற்கொள்ளப்படுகிறது.


மிகுந்த பதட்டமாய் உணர்கிறேன். அரசியல் மேடையொன்றில் தஸ்லீமா நஸ்ரின் மீது தம் வன்முறையைத் திணிக்க முயன்ற சில அடிப்படைவாதிகளின் குழப்பங்களின் போது அவரது முந்தானை உரியப்பட்டமை. இச்சம்பவத்தையடுத்த சில மாதங்களின் பின்னர் அவசர அவசரமாக அவர் இந்தியாவை விட்டு வெளியேற்றப் பட்டமை, அவ்வளவு இலகுவாய் பத்தோடு பதினொன்றாக கடந்துவிட முடியாது. 'பாலியல்' பெண் எழுத்தின் மீதான தாராளமயமாக்கலின் நிர்ப்பந்தமாய்க்கூட இருக்கலாமில்லையா? இந்த கட்டுகள் கேள்விக்குட்படுத்தப் படும்போது அது வெறுமனே முலைகளை திறந்து விட்ட கேலிக்கூத்தாய் மாறிவிடுவதென்னமோ அபத்தமே. நீண்ட துயிலைக் கலைத்து எம் பெண் கவிகள் மௌனத்தை உடைக்காதிருப்பது அவர்கள் சார்ந்த வெளி அழுத்தம், கொள்ளளவு பற்றாக்குறை அல்லது கற்பனையை வேறு எங்கோ அடகு வைத்துவிட்டு பொன் முட்டைக்காய் வயிறை அறுக்காதிருக்கும் முன்ஜாக்கிரதையாய் கூட இருக்கலாம்.

திரும்பவும் பின்தொடரும் நிழலின் குரலுக்கே வரலாமென நினைக்கிறேன். ஒவ்வொரு முறையும் ஒரே விடயத்திலேயே புதிது புதிதாக தெரிபவர் ஜெயமோகன். தனது ஆண், பெண் கதாபாத்திரங்களின் மிக நுண்ணிய பக்கங்களில் பெண் பற்றிய பல விம்பங்களை துணிக்கைகளாக நிரப்பி விட தெரிகிறது அவருக்கு. கால்மாக்ஸ் வெறும் புணர்ச்சிக்காகவே ஆண்கள் பெண்களிடம் இழக்க அனுமதித்தாரென்றும், பின்னர் அவரால் அவர்களை அங்கீகரிக்க முடியவில்லை என்ற வாதம் பொதுவான ஆண் மனநிலை, வெறுமனே பகல் கனவுகளில் நெருக்கமாய் அமையும் சதைத்திரட்சி நிஜத்தில் அவ்வளவு இன்பமாய் இல்லையென்பது ஆண் உளவியல். இந்த ஒன்றுக்கொன்று முரணான பெண் உலகம் சார்ந்த பிரதிபலிப்புகள் கொட்டி கவிழ்க் கப்பட வேண்டியவை. அதன் நீட்சிக்காய் ஒரு காற் புள்ளியையேனும் இடலாமென்கிற ஆதங்கம் எனக்கு.

அதுமட்டுமன்றி சமுகம் சார்ந்த அரசியல் பிரக்ஞை, பொருளாதார வகிபாகம், இருத்தலியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடர்பான எத்தனிப்பில் அதீத கவன முடையவராய் தோற்றும் எமது செயற் பாட்டாளர்களிடம் (அரசியல், சமுகவியல், இலக்கியம்) எத்துணை தூரம் பெண்க ளின் உலகம் பற்றிய துளியளவேனுமான அக்கறை இருக்கிறது என்ற வினா திரும்ப திரும்ப ஒரு அலையின் உருக்கொண்டு சிறிதும், பெரிதுமாய் நீண்டே செல்கிறது. இங்கு மௌனம் காக்கும் எம் பெண்களின் சிந்தனை முழுக்க வாழ்வு தொடர்பான அர்த்தங்களை கோக்கும் மின்மினிகள்தான் பறந்து கொண்டு இருக்கிறதா இன்னமும்.

வரலாறு ஆதிக்க மனப்பான்மையுள்ள சமுகக் கட்டமைப்பாகவே எப்போதும் இருந்து வந்துள்ளது எனப் பேசும் துணை சமுகக் கூறுகள் கூட இன்றைய நிலையில் ஆண்வயப்பட்டேதான் இயங்குகிறது. எல்லா போராட்ட அமைப்பிலும் படையணி, சங்கங்கள் என்பவற்றில் பெண்களின் இருப்பு ஓர் குளுமையைதானும் தருமே என்ப தையே ஜெயமோகனின் குறித்த நாவலும் வலியுறுத்துகிறது. சோவியத் ரஷ்யாவின் சிறந்த அரசியல் வகுப்பாளரான புகாரின்-அன்னா உறவு நிலையில்கூட பெண்களுக்கு பங்களிப்பு எத்தனை வீதம் வலியுறுத்தப்படுகிறது என தெரியவில்லை. புனைவு சார்ந்த பதிவுகளுக்கும், அறிவியலுக்கும் அத்தனை அளவு தூரம் இருப்பதாய் கருத முடியாதுள்ளது.

மாறாக வரலாற்றடிப்படையில் பெண்களின் போராட்டப் பதிவுகள் எவ்வாறாய் அமைந்துள்ளது. இங்கு பெண்களின் மனநிலை, வாழ்நிலை, எதிர்கால நகர்வுகள் தொடர்பாய் சிரத்தை கொள்ளப் படுகிறதா என்பதும் கவனத்துக்குரியதுதான். இந்த நாட்களில் உசாவ முடிந்த கலாசாரமும் பெண் வெளிப்பாடும் நூலில் கம்லா பாசினுடனான உரை யாடலில் (இவர் இந்தியாவைச் சேர்ந்த சிறந்த பெண்நிலைவாதி) ஆசியாவில் பெண்ணுரிமைக் காக போராடியவர்களை பட்டியலிட்டுக் காட்டுகிறார். இதில் 19ம் நூற்றாண்டிலிருந்து அறியப்பட்டவர்கள் அடங்குகின்றனர். இந்தியாவின் பண்டிதராமா பாய் (1858-19220, இந்தோனேஷியாவின் கார்த்தினி (1879-1901), ஈரானின் குவாரத் உல் அயின் (1815-1851), சீனாவின் ஜிவு ஜின் (1875-1907) போன்றோரோடு அது நீண்டு செல்கிறது. இந்த இடத்தில் ஈரானின் குவாரத் உல் அயின் தனது விடுதலை உத்தியாக குடும்பத்தை விட்டு வெளியேறியமையும், பர்தா எதிர்ப்பு மேற்கொண்டமையும் குறிப்பிடப்பட்டிருந் தது. எப்போதும் முஸ்லிம் பெண்கள் மீதான பார்வை அவர்களின் ஆடையணிகளோடு சம்பந்தப் படுத்தி நோக்கப்படும் எவ்வளவு வக்கிரபுத்தியான அபத்தமான உலக மயத்தில் வாழ்கிறோம்!

பெண்களும், எழுத்தும் அவர்களுக்கே உரித்தான வையும் இன அடையாளங்களுக்கு அப்பாற்பட்டு மனிதம் என எண்ணப்படல் வேண்டும் என சொல்லத் தோன்றுகின்றது. அதேவேளை தனிநபர் சார்ந்த இலக்கியப் பார்வை பரவலாக்கப்படும் நவீன சூழலில் தனிமனித பெண் ஆளுமை, அங்கலாய்ப்பு என்பன சமாந்தரமாய் கூர்மைபெறல் அவசியம்.

திரும்ப திரும்ப பேசப்பட்ட வேண்டியதாயும் எடுத் துச்செல்லப்பட வேண்டியதுமான பெண் சார்ந்த சமுகவியல், இலக்கியப் பார்வைகளில் நீண்ட தொடர்ச்சியை எட்ட வேண்டுமென்பதே பெரிய அவா. அதற்கான ஆரம்பம் மட்டுமே இது. இந்த சிந்தனை நகர்வு நிறைய கோர்க்கப்பட்ட பேனைக் கரங்களை ஒரு புள்ளியில் ஒன்றிணைய வைக்கும் என எல்லா(மும் போல நம்புவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சலனி

# பூனையின் இருட்டு

விரல் நுனிகளில்
கவிதை ததும்ப
என் ரோஜாக்களை ஆய்ந்து கொள்ள
முன் நகரு முன் கைகள்
நிலவின் மெல்லிய இருளில்
நாம் கடலின் நுனி வாயிலில்
பொறுக்கிய சொப்பனங்கள்
சிப்பிகள் கோர்த்த
நீளமான நூலில் தொங்கக் காண்கிறேன்
வெண்மையான
சீலைகளின் வாளிப்பான தோற்றப்
பொலிவில் மெழுகிவிடும்
நேசங்களை
உதிர்த்தும் பனியின் நுண் துழைகளில்
பயணித்து மேலெழுவேன்
கட்டில் விளிம்பில்
என் அழைப்பு மிகையான
பாரங்களை நெகிழ்த்தும்
சிறு முயல்வுகள் - இருந்தும்
இன்னும் நீ துயிலெழவில்லை.





# ஜன்னலின் அருகாமை

ஜன்னலின் அருகாமை
முக்கியமானது
அது சிவந்த முயல் குட்டிகள்
போல
மிரண்டு சோரும் பிஞ்சு விழிகளுடன்
துரு துருத்துக் கொள்ளும்
இளம் பூவரசின் மஞ்சள்
நிறத்தாலானது ஜன்னல்
நேர்த்தியும் அழகும் கொட்டும்
நு ற்றாண்டு காலமாய் பழக்கப்பட்ட
ஆல மரத்தினது அல்லது பெரிய
விருட்சமொன்றினது மௌனம்
தெரியுமதற்கு
மெல்லிய கம்பிகளிடையே
விரியும் பெருவுலகு
அணிலின் சமாந்தரமான உடலின்
நேர்த்தியையும்
இலை கொட்டும் மாதுளையையும்
என்னிடம் சேர்த்து விடுவது.
ஜன்னலிடம் அடகு வைத்த என்
மௌனக் குஞ்சுகள்
இன்னும் பொரிபடாமலேயே
கத கதக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் நோயின் முந்திய நிலையிலிருந்து விரிகிறது கவிதை

என் நோயின் முந்திய நிலையிலிருந்து
விரிகிறது கவிதை
பழமையான கட்டடத்தின்
உள் விளிம்புகளில்
தங்கிச் சரியும் என் எண்ணங்கள்
ஈரக் கசிவுடன்
மழையில் நனைந்த
புராதன வளாகம் முற்றிலும்
சுற்றிய மரங்களில்
தாவி நனையும் நினைவுகள்
பின் உலரும்
இரவின் நீண்ட படிகளை மறுதலித்து
நிலத்தின் காய்ந்த பிளவுகளை
கண்ணீரால் நிரப்புகிறேன்
தானாய்த் திறந்து மூடும்
கதவின் அசைவில்
பேயின் சஞ்சாரமா
ஊதிய காற்றின் நிசப்த
துணிக்கைகள் பரவும் என்னை
கண்ணாடியில் பார்த்து வெறுக்கிறேன்
எல்லாமே மரபின் சின்னங்கள்
ஒவ்வொன்றும் கூட
கட்டில் அதன் பழைய நூதன விரிப்புகள்
குளியலறையின் அலங்காரமான
றப்பர் விளிம்புகள்
வாசனைத் திரவியங்களிலிருந்து எழும்
மரபு வாசம்
பூக்கள் நரைத்த தோட்டத்தில் நான் மட்டும்
புதிய நோயாளியாக திரிகிறேன்.
இதை உடைத்து வீழ்த்தும் கணங்களில்
பேரிரைச்சலுடன் மௌனமாக
தனியறைகளில் அடைக்கப்படுகிறேன்
தீர்ந்த மெழுகுதிரியின்
இறுதித் துளிகளை வெறிக்கும்
கண்கள் அயர்வுடன் விழிக்கின்றன
இன்னுமொரு நோய் கொண்ட
அதிகாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபகத்தில் தெருக்கள்
மாங்கிக்கொண்டு வருகின்றன.
குச்சொழுங்கைகள்
முற்றிலுமாக மறைந்துவிட்டன.
பிறந்த மண்ணின் சித்திரத்தை
இணையத்தளங்களின் வரிகளே
தீட்டுகின்றன. எங்கோ வெறித்த
விழிகளுடன் குந்தியிருக்கும்
அகதிகள், குருதிதோய்ந்த
பிணங்கள், கட்டுப்போடப்பட்ட
கைகள்-கால்கள், பசியில்
அலறும் குழந்தைகள்...



- தமிழ்நதி -

# கையறு காலம்

மைக்குப்பியிலிருந்து மையைத் தொட்டுத் தொட்டு எழுதுவதைப் போல இறந்த காலத்தின் துளிகளைத் தொட்டு எழுத்தாகவும் பேச்சாகவும் வெளிப்படுத்துகிறோம். இறந்தகாலந்தான் எப்படியெல்லாம் சுடர்விடுகிறது! முன்னெப்போதும் பார்த்திராத குழந்தையொன்றின் கையசைப்பைப் போல இறந்தகாலம் முகத்தில் புன்னகையைப் பூசிவிடுகிறது. ஞாபகங்கள் சரம்சரமாக அவிழ்கின்றன. போதாக்குறைக்கு சாதாரண நினைவுகளைக்கூட நமது கற்பனா திறத்தினால் பேருன்னதமான நிகழ்வுகளாக்கிவிடுகிறோம். ஆவலினால் விழிகள் பளபளக்க கதைசொல்லியின் முன் அமர்ந்திருக்கும் குழந்தைகளினைப் போல நமதேயான கதைகளின் முன் நாமே பிரமித்து அமர்ந்திருக்கிறோம்.

ஏறக்குறைய எல்லாவற்றையும் இழந்துபோன கையறு நிலையில் இறந்தகாலத்தின் தெருக்களில் நடப்பதொன்றே ஆசுவாசம் அளிப்பதாக இருக்கிறது. நிகழ்காலமோ எத்தனை முயன்றும் விழித்தெழ முடியாத பயங்கரக் கனவாயிருக்கிறது. போர் எங்களை ஏதிலிகளாக்கிற்று. அலைக்கழியும் வாழ்வு தலைக்குமேல் விடிந்தது. மரணம், பசி, இடப்பெயர்வு, அகதி.... இன்னபிற சொற்களின்பால் நம்மையறியாமலே சலிப்பின் நிழல் படர்ந்துவிட்டது. எமது நாட்களின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் அதிகாரத்தின் கைகளில் ஒப்புக்கொடுத்துவிட்டு யாரோபோல பார்த்துக்கொண்டிருக்க விதிக்கப்பட்டிருக்கிறோம். இந்நிலையில் உலகமெங்கிலும் 'டயஸ்போரா'க்களாகப் பரந்துவாழும் ஈழத்தமிழர்களின் மனங்களில் ஊர் என்னவாக இருக்கிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபகத்தில் தெருக்கள் மங்கிக்கொண்டு வருகின்றன. குச்சொழுங்கைகள் முற்றிலுமாக மறைந்துவிட்டன. பிறந்த மண்ணின் சித்திரத்தை இணையத் தளங்களின் வரிகளே தீட்டுகின்றன. எங்கோ வெறித்த விழிகளுடன் குந்தியிருக்கும் அகதிகள், குருதிதோய்ந்த பிணங்கள், கட்டுப் போடப்பட்ட கைகள்-கால்கள், பசியில் அலறும் குழந்தைகள்... இணையச்செய்திகள் வழியாக அறியப்படும் நிலமானது கண்களை மூடிக்கொண்டு கதற வைக்கிறது. உதிர்ந்தகாலமே! உன் நினைவுச் சேலையினால் இந்தக் கறுப்பு நாட்களின் முகங்களை தற்காலிகமாக மூடப்பார்க்கிறேன்.

திருமலை சண்முக வித்தியாலய மாணவிகள் இந்துக் கல்லூரியை 'சகோதரப் பள்ளிக் கூடம்'என்று சொல்லும் முறைமை இன்னமும் நீடிக்கிறதா? முற்றவெளியை அண்மித்த கடற்கரையில் எவனாவது தனது காதலியின் பெயரை எழுதி எழுதி அலை அழிக்கக் கொடுத்துக்கொண்டிருக்கிறானா? யாரோ விரித்து வைத்த புத்தகத்தை நகரசபை நூலகத்தின் யன்னல் வழியாக உட்புகும் காற்று புரட்டிப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருக்கிறதா? சல்லிக் கோயில் திருவிழாவில் பிலாப்பழமும் புட்டும் வாங்கிச் சாப்பிடும் அழகிய பெண்ணில் நிலவொளி முகம் பார்க்கிறதா? அலையடிக்கும் கடலும் அப்பெண்ணும் எவனோ ஒருவனுடைய மனதில் அந்த இரவை ஆணியடித்து இறுக்குகிறார்களா?

திருநெல்வேலியின் வீதிகளில் இன்னமும் மாணவர்கள் சைக்கிள்களில் கைகளைப் பிடித்துக்கொண்டு போகிறார்களா? ஆரியகுளத்தின் கலங்கிய தண்ணீரில் இப்போதும் அல்லி மலர்கிறதா? றேடியோஸ்பதியில் விடாமல் பாடல் ஒலித்துக் கொண்டிருக்கிறதா? கல்யாணி ஐஸ்கிரீம் கடைச் சுவர்களில் பதிக்கப்பட்டிருக்கும் கண்ணாடிகளில் இப்போதும் காதலர்கள் ஒருவர் அறியாமல் மற்றவரைப் பார்த்து ரசிக்கிறார்களா? யாழ்ப்பாண நகரத்தில் தனியார் பேருந்துகள் இடங்களின் பெயர் சொல்லிக் கூவிக் கொண்டிருக்கின்றனவா?

## கையறு காலம்



**முற்றவெளியை அண்மித்த கடற்கரையில் எவனாவது தனது காதலியின் பெயரை எழுதி எழுதி அலை அழிக்கக் கொடுத்துக் கொண்டிருக்கிறானா? யாரோ விரித்து வைத்த புத்தகத்தை நகர சபை நூலகத்தின் யன்னல் வழியாக உட்புகும் காற்று புரட்டிப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருக்கிறதா?**

இலையான்கள் சுற்றியலையும் அந்த சர்பத் கடைகள் இப்போதும் இருக்கின்றனவா நண்பர்களே!

மட்டக்களப்பின் வாவிகளில் இத்தனைக்குப் பிறகும் மீன்கள் பாடுகின்றனவா? சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் கூரைகள் கிடைத்தனவா? மரங்கள் கரைவைத்து உள்நோக்கி இறங்கும் கிழக்குப் பல்கலைக்கழக விடுதியில் வெளியூர் மாணவிகள் இப்போதும் தங்கியிருக்கிறார்களா? 'மறுகா', 'கிறுகி', 'கெளிச்சு'போன்ற வார்த்தைகளை இப்போதும் பிறமாகாண மாணவர்கள் கேலி செய்கிறார்களா? இரவுகளில் உடுக்கொலித்துப் பாடவும் கூத்து நிகழ்த்தவும் அனுமதியுண்டா? வெகுளித்தனமான சிரிப்பையும் விருந்தோம்பும் பண்பையும் மரணமும் இடப்பெயர்வும் தின்றுவிட்டனவா?

கிளிநொச்சி கனகாம்பிகை அம்மன் கோயிலடியில் மரங்களாவது எஞ்சியிருக்கின்றனவா? மேய்ச்சல் முடித்த மாடுகளைச் சாய்த்துக்கொண்டு போகும் தலையில் துணி சுற்றிய பெரியவர்கள் எங்கு போனார்கள்? வயல்வெளிகளில் கத்தியலையும் குருவிகளால் போரை உணர முடிகிறதா? உருத்திரபுரத்தில் 'காந்தி நிலையத்தில்' ஆதரவற்ற ஏழைப் பெண்கள் இப்போதும் தங்கியிருக்கிறார்களா? வட்டக்கச்சிக்குப் போகும் வழியில் இருக்கும் வாய்க்காலில் இந்த மழைக்கு வெள்ளம் சுழித்தோடியிருக்குமே... நீரை உறிஞ்சி மீண்டும் வான்நோக்கி உமிழும் உற்சாகத்திற்கு சிறுவர்களை போர் அனுமதித்ததா?

போர்நிறுத்தத்தின் போது வவுனியாவில் பூமி விற்று புதையல் பெற்றவர்கள் அனைவரும் நலந்தானா? திடீரென முளைத்த பெரிய புதிய வீடுகளில் குடியேறிய வெளிநாடு வாழ் தமிழர்கள் திரும்பிப் போய்விட்டார்களா? 'சிம்பொன்' ஐஸ்கிரீம் கடைக்கு இப்போதும் டெனிம் ஜீன்ஸ் அணிந்த முகம் பளபளக்கும் வெளிநாட்டுக் காரர்கள் வருகிறார்களா? என்.ஜி.ஓக்களின் சொகுசு வாகனங்கள் இப்போதும் அந்தப் புழுதித் தெருக்களில் ஓடித் திரிகின்றனவா? மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதி நாலாம் கட்டையில் இருந்த சாராயக் கடையில் இப்போதும் திருவிழாக் கூட்டந்தானா? குரங்குகள் கூட்டமாக வந்து கூரை ஓடுகளைச் 'சரிபார்ப்பதை' இப்போதாவது நிறுத்தவிட்டனவா? போரை அவைகளின் கண்களில் காணமுடிகிறதா?

இங்கே நாங்கள் உயிரோடு இருக்கிறோம். நேற்று (02.01.08) கொஞ்சம் இடிந்துபோனோம் என்பது உண்மைதான். சிலர் அழவும் செய்தார்கள். சரிந்துபோனவர்களை வரலாற்றின் பழைய பதிவுகள் தாங்கிப்பிடித்தன. விடாமல் பனி மழை பொழியும் ரொறன்ரோவின் நிலக்கீழ் புகையிரதத்தில் இருண்ட மனதுடன் நிறையப்பேர் நேற்று பயணித்திருப்பார்கள். கையுறைகளை மீறி நுழையும் குளிருக்கு கோழிக்குஞ்சாக விறைத்தபடி இலண்டனின் பேருந்து தரிப்புகளில் நிற்கும் எவருடையவோ ஊருக்குத் திரும்பும் நம்பிக்கை தகர்ந்துபோயிருக்கலாம். பிரான்சில் சில பேர் மதுவுடன் கொண்டாட மேலும் சில பேர் இறுகிய இருண்ட முகங்களுடன் கடந்துபோயிருக்கலாம். சென்னையில் மார்கழிக் குளிரின் இதம் மீறி நள்ளிரவில் சிலர் விழித்தபடி இருந்திருக்கலாம். 'கிளிநொச்சி' என்ற சொல்லை ஊடகங்கள் விடாமல் உச்சாடனம் செய்கின்றன. தமிழகத்தின் கடைக்கோடி மனிதன் வரை கிளிநொச்சியை நேற்று அறிந்திருப் பான். நேற்றின் ஞாபகங்கள் இனிதானவை

# இல்லாமல் போகும் வலி

நோயின் பெருஞ்சூறையில்
நினைவின் திரி
எழுந்தும் தணிந்தும்
ஊசலாடிய பின்னொருநாள்
மரணம் கைவிட்டுக்
கடந்தது இவ்வுடலை.

மீளவும் உயிர்த்தெழுதல்
சாதாரணர்களுக்குச் சாத்தியமில்லை
நம்பிக்கை இல்லாமல்தான்
கேட்டுக்கொண்டிருக்கிறேன்
உங்கள் உதடுகளிலிருந்து உதிரும்
தேன்சொற்களை.

இருண்டிருந்த உலகம் புதிதாய்
ஒளியுமிழவாரம்பித்துவிட்டது.

லசந்தரா மலர் சொரியும் வீடு...
எண்ணுக் கணக்கற்ற உடமைகள்...
புதிதாய் வந்த
மிக்கி நாய்க்குட்டி...
இரவல் கொடுத்து திரும்பாத புத்தகங்கள்...
இன்னமும் வரவேற்பறையில்
வைக்க வாய்க்காத தாஜ்மஹால்
எனக்குப் பின்னும்
உயிரோடிருக்கப் போகும் நீங்கள்...



மரணம் இட்ட பிச்சையை
உடல் மறுபடியும்
மறுதலித்துவிட்டது.

இருக்கும்போது
இல்லாமற்போவதைப்பற்றி
அத்தனை பேசியிருக்க வேண்டியதில்லை.

தலைக்குமேல் பறந்து
'ததாஸ்து'(அப்படியே ஆகுக)என்ற
தேவதைக்கு நன்றி

-தமிழ்நதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரல்கள் ஒடுங்கும் காலம்

தமிழ் நதி



இப்போதெல்லாம் எழுதிவிட முடிவதில்லை
ரத்தத்தின் ஈரம் படியாத சொற்களை.

கவிதைகளில்
அவிழ்ந்துகொண்டிருந்த பூக்கள்
சருகுகளாகி
போர்க்காற்றில் பறந்துவிட்டன
விழிகளில் என்றென்றைக்குமாக வற்றிவிட்டது
காதலின் சாறு.

இழப்பின் காலத்தில்
எதிர்ப்படும் நண்பர்களே!
என்னை எதுவும் கேட்காதீர்.
உடைந்துபோன
நம்பிக்கை நாளங்கள் வழியாக
துளிகளாய்
சொட்டிக்கொண்டிருக் கிறது உயிர்.

இந்தக் கையறு காலத்தில்
மழையின் குளிர்ச்சியை சொற்களில் முயல்கிறேன்
அப்போதுதான் துண்டிக்கப்பட்ட தலையொன்றின்
வெம்மையுடன் வழிகிறது மழை.

கடலின் நீலத்தை
காகிதத்தில் எழுதவே அமர்ந்தேன்
காடுகளில் விஷம் தீண்டி மரித்த
குழந்தைகளின்
நிறமாகித் திரிந்தது கடல்.

மரணத்திலும் கொடியதாய்
இந்தக் கல்வாரி நாட்கள்
ஒரு இமைத் திறப்பில்
கனவென உதிர்ந்து போகலாகாதா?

நாற்காலியில் தைக்கப்பட்ட
இதயங்களில்
ஏதாவதொரு நரம்பு
எங்களுக்காய் துடிக்காதா?

மரணம் கண்ணீர் குருதி
குண்டுமழை சதைத்துண்டு
ஆக்கிரமிப்பு அதிகாரம்
இடப்பெயர்வு அகதி
பாம்புகள் பாலகர்கள்
வன்கலவி வதைசெய்தல்
கைதுகள் காணாமல் போதல்
சிறைவாசம் சித்திரவதை
மரண வாசனை மனச்சிதைவு

இன்னபிற சொல்தவிர்த்து
நாங்கள் எழுதும் நாள் கூடாதா?


விரலுயர்த்தியோ குரலுயர்த்தியோ
பேச அனுமதி மறுக்கப்படும்
தேசங்களில்
எழுதுகருவிகளும்
இனிமேல்
மௌனம் பழகட்டும்.

நாங்கள் அறிவோம்
எந்தச் சிறையுள்ளும்
நிலா வெளிச்சம் புகாது
பறவைகள் இசைக்காது
மேலும்..
கனத்த சப்பாத்துக் கால்களும்
காக்கிச் சட்டைகளும்
கருணையே அறியாதவை!

ஆதலினால்
எழுதுகருவிகள்
இனிமேல் மௌனம் பழகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேதைகளும் மாபெரிய வீரர்களும்
மீண்டு வராமற்போன
மருத்துவமனைக் கட்டிலொன்றிலிருந்து
அதே தீர்க்கமான முடிவொன்றிலிருந்து
எழுந்து வந்துள்ளாய்

திருநாமங்களையெலாம்
உச்சாடனம் செய்து
எல்லாம் வல்லவனிடம்
உனை மீட்டுத் தரவேண்டி
ஏந்தித் தவித்த கரங்களை
அழுத்திக் கொண்டிருந்தது
அன்பின் கொடும் சுமை

உயிரோடு போராடிக் கொண்டிருந்த
இன்னுயிரைத்
தூர தேசத்தில் விட்டு விட்டு
ஊர்ந்தூர்ந்து வந்ததந்தக்
கொடிய காலம்
இருக்கும் இடத்தை
நொந்து போன எண்ணங்களால்
நிரப்பி விட்டுத்
துயரேறிய பொழுதுகளை
இழுத்தவாறு நொண்டி நகர்ந்தன
இரு பாதங்கள்
செல்லப் பறவையே
இறுதியில் நீ வந்தாய்
உதிரமெங்கும் கலந்தோடிய நஞ்சிலிருந்து
உன் ஜீவனை மீட்டெடுத்து வந்தாய்

உறங்க மறந்த இரவின் மீது
ஆனந்தக் கண்ணீரைக்
கசிய விட்டவாறு
வாழ்விலிருந்து நழுவிப் போனதொரு
பெரும் வலி

என்ன வார்த்தையால் உனை வரவேற்பது
எந்தக் கரம் கொண்டு உனை அரவணைப்பது
எனத் தெரியாத கடலொன்றுக்கப்பாலிருந்து
கையசைக்கிறாய்

ஆருயிரே வருக
பாக்கியம் புரிந்தவர் நாம்
உனை மீளவும் பெற்றிருக்கிறோம்

## கடைசிச் சொல்

நம்மெதிரே வீழ்ந்து கிடக்கிறது
காலத்தின் பிறிதொரு முகம்

இன்று
மீளவும் பழைய ஆரோக்கியத்திடம்
மீண்டுள்ளேன்
முதன் முறையாக
நிறைவு செய்யப்பட்ட வசனமொன்றை
உன்னிடம் ஒப்பிக்கிறேன்
அதே புன்னகையை மறுபடியும்
எடுத்து வைக்க முடியாமல்
விலகிச் செல்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகத்தான பொறுமையொன்றின்
காத்திருப்பைக் கண்டு கண்டே
புறக்கணிப்புக்களை வளரவிட்டிருந்தாய்
மனதில் பதிந்த உனது நிழல்
சிதறிய வாசனைத்திரவியம் போல
மெல்ல மெல்ல மறைந்தே போயிற்று

நீ உரிமை கொண்டாடிய
எல்லாவற்றிலிருந்தும்
எனை விடுவித்துக் கொண்டேன்
துயரத்தில் பதை பதைத்த சொற்களையும்
துரோகத்தால் நசுங்குண்ட சத்தியங்களையும்
உனது சுவர்களுக்குள்ளேயே விட்டு விட்டு
வெளியேறிப் போகிறேன்

இப்பொழுதும்
ஆதித்திமிர் தடுத்திட உன்னிடம் எஞ்சியுள்ளது
ஒரு சொல்
விதி தன் கண்ணீரை வழியவிட்ட சொல்
நாம் நமக்குக் கிடைத்திடக்
காத்திருந்த கடைசிச் சொல்



# கல்யாண வைரவன்

முதிர்ந்த திராட்சையின் நிறம் பொருந்தியவன் நீ
பிரளயங்களின் பின் பொழுதில் பிறந்திருக்கிறாய்
ஒளியின் பரீட்சயங்களற்றபடி.

கசியும் மேனியை குழைத்துக் குழைத்து
எண்ணில்லாப் பெண்களின் கனவுகளில் அலைந்து
களைத்திருக்கிறாய்.
மின்மினிக்கும் கூசுகிறது உன் விழிகள்

இரவுக்கொன்றாய் முளைத்தெழும்
உன் எண்ணில்லா முகங்களிலிருந்து பெருகுகின்றது
தீரா ஆசையின் பெருந்தீ
உன் அண்மையின் மின்சாரம்
ஆடைகளோடு எரிகின்றது என்னையும்

தேநீர் இடைவேளையில்
புராண இதிகாசங்களிலிருந்து நீ எடுத்து வந்த
ஆயிரந்தலை நாகங்கள் கவ்வுகின்றன.
வேர் படர்ந்த மெத்தைக்கடியில்
அடைகாத்திருந்த என்விரியன்களை.

உருவென திரண்டிருந்த உணர்வுகள்
ஒவ்வொன்றாய் பிரிந்தாடுகின்றன -
உன் நாகங்களோடு
அமுக்கத்தில் சிதறி அறையின்
சுவர்களில் மோதி வீழ்கின்ற
என் தனித்திருத்தல் பற்றி கதைகளை
பிரமிட்டுக்களில் தூங்கும் -
இளவரசிகள் படிக்கிறார்கள்

கணங்களை விரட்டும் அதிகாலை
கோயில் மணியொலியில் நீயும் கரைந்து போகிறாய்
என்னை மட்டும் பாம்புகளோடு சேர்த்துக் கட்டிலில்
புதைத்து விட்டு.


த. உருத்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணியப் பார்வையில் சொல்லும் பொருளும்

—வ. கீதா



பெண்ணிய சிந்தனையும் செயல்பாடுகளும்சமுதாய நிலைமைகளை கேள்விக்குட்படுத்த முனைகின்றன. உள்ளவற்றை விமர்சனம் செய்யும் போது, அவற்றை குறித்த மாறுபட்ட புரிதலை உண்டாக்குவது என்பது பெண்ணிய சிந்தனையின் முக்கிய செயல்பாடுகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. இவ்வகையில் பழகிப்போன சொற்களுக்கு புதுப் பொருள் வழங்கும் பொருட்டு தமிழ்நாட்டில்ஒரு சிலர்மேற்கொண்டு வரும் முயற்சிகளை இங்கு அறிமுகப்படுத்த விரும்புகிறோம். தயாரிப்பில் இருக்கும் பெண்ணிய அகராதியிலிருந்து சில பகுதிகள்.

## அடக்குமுறை

பொதுவாக அதிகாரம், அதிகார துஷ்பிரயோகம் மூலம் உருவாக்கப்படுவது. அரசியல் தளத்தில் மட்டுமன்றி பொருளாதார சமூகத் தளத்திலும் செயல்படுவது. ஆதிக்க நிலையிலுள்ள வகுப்பு அல்லது வர்க்கம் அல்லது சாதியைச் சேர்ந்தவர்கள் அவர்களுக்குக் கீழ்ப்பட்ட நிலையிலுள்ளவர்களை அடக்குவதும் ஆளுவதும் அடக்குமுறைகளாகும்.

பெண்களைப் பொருத்தவரையில் அடக்குமுறை என்பது குறிப்பிட்ட ஒரு அதிகார நிலையிலிருந்து மட்டும் உருவாக்கப்படுவதில்லை .. தந்தை, கணவன், மகன், சுற்றம், சாதி, சமயம், அரசு என்று பலரும் அதிகாரமாகவோ அன்பாகவோ கடமை, அறம் என்ற ஏதோ ஒன்றின் பெயரிலோ பெண்களது வாழ்க்கையை வழிநடத்துகிறார்கள். அல்லது நடத்த முற்படுகிறார்கள். உண்பது, உடுப்பது, உறங்குவது, பேசுவது, சிரிப்பது, உறவு கொள்வது.... இப்படி எதைச் செய்யவேண்டுமானாலும் எப்படிச் செய்ய வேண்டும்எந்த அளவிற்குச் செய்ய வேண்டும் யாரை அனுசரித்துச் செய்ய வேண்டும் என்று இவர்கள் பெண்களுக்கு கட்டளை யிடுகிறார்கள் அல்லது ஆலோசனை வழங்குகிறார்கள் அல்லது அறிவுறுத்துகிறார்கள். பெண்களில் பலரும் அவர்களை நோக்கிச் சொல்லப்படுபவற்றை விதிகளாக, நெறிகளாக, சாங்கியமாக, சம்பிரதாயமாக ஏற்றே வாழ்கின்றனர். அவற்றால் சுகப்படுகின்றனர். அல்லது துன்புறுகின்றனர்., அல்லது அவற்றை சமாளித்து வாழப்பழகிவிடுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்காலமாக, பல்வேறு சமுதாய சூழல்களில் பெண்கள், கடமை, விதி, அன்பு, நியதி என்று எண்ணி ஏற்பவற்றை அவர்களை அடக்கும், அவர்களது வாழ்வை வரம்பிடும் வழி முறைகளாக பெண்ணிய சிந்தனை அறிகிறது. அடிக்கிற கைதான் அணைக்கும் என்று கொள்ளாமல், பெண்ணை அணைக்கும் கைக்கு அவளை அடிக்கவும் அதிகாரம் வழங்கியுள்ள சமுதாயத்தையும் அதன் நடை முறையை தீர்மானிக்கும் ஆண் தலைமையும் மனித மாண்பினை ஒடுக்கி அடக்குவது போலதான், பெண்கள் அன்றாடம் சகித்து வாழும் கட்டுப்பாடுகளும் கட்டளைகளும் அடிதடிகளும் அவர்களது மனிதத்தை சிதைக்கின்றன என்றும் பெண்ணியம் கூறும்.

**அகம்**

புறம் என்பதன் உள்ளார்ந்த நிலையை குறிக்கும் சொல். மனம், உள்ளம் ஆகியவற்றுடன் தொடர் புடையது. வீடு என்ற பொருளும் உண்டு. பல சமுதாயங்களில் புறவுலகம் ஆணுக்குரியதாகவும் அகவுலகம் பெண்ணுக்குரிய தாகவும் கொள்ளப்படுகிறது. வேலை, சம்பாத்தியம், ஆட்சி, அதிகாரம் ஆகியன புறவுல கத்துக்குரியவை, எனவே ஆணுக் குரியவை. காதல், குடும்பம், பராமரிப்பு ஆகியன அகவுலகத்துக் கானவை, எனவே பெண்களுக் குரியவை என்ற வரையறைகளை பல சமுதாயங்கள் ஏற்று வாழ்கின்றன. சங்க இலக்கியம் போற்றும் திணைத் தத்துவமும் கூட இந்த அடிப்படையில்தான் வகுக்கப்பட்டுள்ளது. பெண்கள் வேலைக்குப் போனாலும் வெளியில் உழைத்தாலும், ஆண்கள் வீட்டுப் பணிகளைப் பார்த்து குடும்பத்தைப் பராமரித்தாலும் பெண்கள் தம்மை இல்லத்தரசிகளாகவும் ஆண்கள் தம்மை சமுதாயத் தலைவர்க ளாகவுமே உணர்வர், அடையாள ப்படுத்திக் கொள்வர்.

பெண்களின் அனுபவத்தின்படி, அகவுலகம் என்பது அடக் கமானது, கனவுகளுக்கானது, அவர்களது ஆளுகைக்கு உட்பட்டது. புறவுலகம் அந்நியமானது, பெண் களை அச்சுறுத்தக்கூடியது. அகவு லகம் உறவுகளுக்கானது, புறவு லகம் உறவுகளுக்கு அப்பாற் பட்டது. அகவுலகில் தோழமைக் கும் அந்நியோன்னியமான நட்பு களுக்கும் இடமுண்டு, புறவுலகிலோ பணமும், அதிகாரமும் செல்வாக் குமே பிரதானம். என்றாலும் எல்லா பெண்களுமே ஏதோவொரு நேரத்தில், ஏதோவொரு வகையில் வீட்டுக்கு அடங்கிய வாழ்க்கையை சுமையாகவும் உணர்கின்றார், தங்களை சுதந்திரமற்றவர்களாக அறிகின்றனர்.

அகம் - புறம் என்ற பாகுபாட்டை பெண்ணியச் சிந்தனையாளார்கள் விமர்சித்துள்ளனர். இந்த இரண்டு களங்களும் இணையானவையாக தோன்றினாலும் அவற்றுக்கு சம அந்தஸ்து வழங்கப்படுவது கிடையாது. ஆண்கள் அதிகமாக புழங்கும் புறவுலகத்தில்தான் ஒட்டுமொத்த சமுதாயத்தையும் இயங்கும் அதிகார அமைப்புக்கள் உள்ளன. ஆண்கள்தான் அவைகளுக்கு அதிபதிகளாகவும் உள்ளனர். அவர்கள் விதித்துள்ள பொறி களின் படிதான் பெண்கள் ஆளும் அகவுலகமுமே இயங்குகிறது. இன்னார் இன்னாரை மணக்கலாம், இன்னாரை மணக்கக்கூடாது என்ற விதியிலிருந்து தொடங்கி தாம்பத்தியம், தாய்மை, பிரசவம், சொத்து, வாரிசுரிமை ஈறாக, சட்டம் என்ற பெயரிலும் வழக்கம் என்ற வடிவிலும் பல்வேறு விதிகள் அகவுலகத்தை ஒழுங்கமைக் கின்றன. இவை அனைத்துமே ஆண்களின் நலன்களை முன் நிறுத்தியே செயல்படுகின்றன. "தலையணை மந்திரம்" ஓதி வேண்டுமானால் ஒரு பெண்ணால் வேண்டியவற்றை சாதித்துக் கொள்ள முடியும். ஆனால், சுய சம்பாத்தி யமோ, பொது உரிமைகளோ, பெண்களின் மனிதத்தை மதிக்கும் பொது பண்பாடோ இல்லாத சூழலில் அவர்களது படுக்கையறை சாமர்த்தியம் தனிமனித சாகசமாக எஞ்சி விடுகிறது. இல்லத்தரசி என்ற பட்டமும் கூட, வரப்பிடப் பட்ட வாழ்க்கைக்கான கௌரவ த்தை தேடித் தருகிறதே தவிர, உண்மையில், பெண்களுக்கு மெய்யுலகில் எந்தவொரு அதிகாரத் தையோ, உரிமையையோ, அவர்கள் இயல்பாக புழங்குவதற்கான வெளியையோ அளிப்பதில்லை. அதே சமயம், தாம் வாழ நிர்பந்திக் கப்பட்டுள்ள அகவுலகத்தை பெண்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்குரிய ஒன்றாக மாற்றிக் கொள்ள முனைவதையும் காணலாம். தாய் மையிலும், உறவுகளிலும், கனவு களிலும் ஆறுதல் தேடுகின்றனர்.

**அசூயை**

பொறாமை என்பதற்கான மாற்றுச் சொல். தனிமனித உறவுகளிலும், பொது வாழ்க்கையிலும் பிரச்சினை களை கிளப்பக்கூடிய உணர்ச்சி யாக கருதப்படும் ஒன்று.

பல சமுதாயங்களில், அசூயை என்பது பெண்களின் பிறவிக் குணமாகக் கருதப்படுகின்றது. காதலில், தாய்மையில் தங்களுக் குரியதாக தாம் நினைப்பவற்றை பெண்கள் விட்டுக்கொடுக்க மாட்டார்கள், பிறர் அவற்றுக்கு சொந்தம் கொண்டாட நினைத் தால் அவர்களுடன் சண்டையி டவும், ஏன், அவர்களைப் பழிவாங்கவும் கூட தயங்க மாட்டார்கள் என்பன போன்ற நம்பிக்கைகள் எல்லா காலகட்டங் களிலும் இருந்து வந்துள்ளன. மேலும் சமையல் கட்டையும், இல்லத்து பொறுப்புக்களையும் ஒரு பெண் பெற்ற தாயுடன் கூடப் பகிர்ந்து கொள்ளமாட்டாள், அவற்றை தனது ஆளுகைக் குட்பட்டதாக கருதி அவற்றை பாதுகாத்துக் கொள்வாள் என்ற கருத்தை பெண்களுமே ஏற்று வாழ்வதைக் காணலாம். இத் தகைய மனநிலையினால்த் தான் மாமியார் / மருமகள் பிரச்சனைகள் தோன்றுகின்றன என்று சொல்வ தும் உலக வழக்காயுள்ளது.

பெண்களுக்கு ஆண்களைப் போல "குறி" வாய்க்கப்பெறாததால் தான் அவர்கள் பொறாமையுடை யவர்களாக உள்ளனர், தம்மிடம் ஏதோவொரு குறையுள்ளதாக எண்ணுகின்றனர் என்பார் உளவியல் பகுப்பாய்வு நிபுணரும் சிந்தனை யாளருமான சிக்மன்ட் பிராய்ட்.

பெண்ணியம் வேறுவிதமாக வாதிடுகிறது. ஆசூயையை பெண் களுக்கான "பிறவி" குணமாகக் கருதுவது என்பது காலப்போக்கில் ஏற்பட்டதுதான். வரலாற்று ரீதியாகப் பார்த்தால் ஆதி காலத்தில் பெண்களின் கருவுரும் ஆற்றலைக் கண்டு ஆண்கள் அதிசயத்திருக்கின்றனர். பொறாமை கொண்டிருக்கின்றனர், ஏன் இதற்காக பெண்களை படைக்கும் தெய்வங்களாகப் போற்றி யுள்ளனர். எல்லா சமுதாயங் களிலுமே ஆதிகாலங்களில் தாய்த் தெய்வ வழிபாடுதான் பிரதானமாக இருந்துள்ளது. குழந்தைகள் எவ்வாறு பிறக்கின்றன என்பதை தெரிந்து கொண்ட பிறகுதான், பெண்களின் கருவுறும் ஆற்றலை ஆண்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முற்படுகின்றனர். பல சமுதாயங்களின் வரலாறு களிலிருந்து இதை நம்மால் அறிய முடிகிறது. ஆண்களுடைய ஆதிக் கம் பெண்களை முற்றிலும் ஆட்கொள்ளத் தொடங்கிய பிறகு, ஆண்களின் கவனம், பாராட்டு, அன்பு, ஏன் கடைக்கண் பார்வை ஆகியவற்றை பெற்றால் தான் தம்மால் ஆணாதிக்க சமுதாயத்தில் தொடர்ந்து மனுஷியாக வாழ முடியும் என்று பெண்கள் எண்ணத் தொடங்குகின்றனர். இத்தகைய பாராட்டை, கவனத்தைப் பெற ஆண்களை நாடுவதும் இதர பெண்களை பொறாமையுடன் அணுகுவதுமான செயல்கள் நடைபெறுகின்றன. மேலும் அவரவருக்கு சொத்து, குடும்பம் என்று வந்த பிறகு, உறவுகளுமே சொத்துகளாகப் பாவிக்கப்படும் சூழல் உண்டாகிறது. மனைவி கணவனுக்கு சொந்தம் என்ற கருத்தும், கணவனை கைக்குள் வைத்துக் கொண்டால் தான் மனைவிக்குப் பெருமை என்ற கருத்தும் காதல், தாம்பத்திய உறவுகளை பொறாமை, போட்டிக் கானகளங்களாக்கி விடுகின்றன. இந்த போட்டி மனப்பான்மை பெண்களை அதிகமாக பாதிக்கிறது காரணம், பொது வாழ்க்கையிலும் சமுதாயத்திலும் உரிமைகளை அவர்கள் பெற இயலாத சூழலில், தமது ஆதிக்கத்தையும் உரிமை களையும் குடும்ப வாழ்க்கையில், அகவுலகில் நிறுவுவதை முக்கிய மானதாக கருதுகின்றனர். அழகு, பாலியல் கவர்ச்சி, தாய்மை என அவர்கள் தங்களுக்குரியதாய் கருதும் ஒவ்வொன்றையும் அசூயை யுணர்வே விரட்டுகிறது.

ஆண்குறியைக் கண்டு பெண்கள் பொறாமைப்படுகின்றனர். அதனா லேயே தம்மிடத்தில் குறையுள்ள தாக நினைக்கின்றனர் என்ற பிராய்டின் கருத்தையும் பெண் ணியம் ஏற்பதில்லை. மெய்யுலகில் தாம் இரண்டாம்பட்சமாக நடத்தப் படுவதைக் கண்டும், தமது ஆற்றல்கள் தொடர்ந்து அலட்சி யப்படுத்தப்படுவதாலும் பெண்கள் அடையும் எரிச்சலையும், கோபத் தையும் பிராய்ட் சரிவர புரிந்து கொள்ளவில்லை. தான் பெண் ணாகப் பிறந்ததை ஒருவர் நொந்து கொள்வதற்குக் காரணம் ஆண்கள் மீதான பொறாமையால் அல்ல, மாறாக, உலகத்தின் போக்கினை பற்றிய கவலையும் சினமும்தான் அவளை இவ்வாறு சிந்திக்க வைக்கிறது என்பது பெண்ணியம் காட்டும் உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Friend வந்திட்டா

-ஆழியாள்

மிளகும், கிராம்பும் கூடிய
கவிச்சை வயற்காடாய்
என்னைக் கமிழ்ந்தெழச் செய்த வண்ணம்
வருகிறாய் நீ மாதந்தோறும்

மார்பு இரண்டின் கனம் ஏற
அடிவயிறு அலைந்துளைகிறது
துளித்துளியாய்ப்
பரவும் ஈரலிப்பின் வெதுவெதுப்பில்
நகக் கண்கள் இருபதும் பளபளக்கின்றன
இடுப்போ இளகிக் கிடக்கிறது.

உடன் பகிர
இருபத்தியெட்டு நெடுநாட் கதைகள் உண்டு
சொல்லி முடிப்பதற்குள்
நெஞ்சு வெம்பித் தொண்டையும் கம்முகிறது.
தொடர்ச்சியாய் என்னுள் எழும் வட்ட வட்டக் கோபத்தை,
ஏனென்றே தெரியாத எதற்கோவான சலிப்பை
தூக்கிப் போட்டு உடைக்கிறேன்
சலீர் சலீரென அவை சிதறி நம்முன் கிடக்கின்றன.



கதவடியில் அண்ணர் முறைத்துக் கொண்டு
நிற்கிறதையிட்டு நமக்கென்ன கவலை?
இப்போது நம்
குதித்தாடும் அசைவுகளோடான உடலின்
கூத்தாட்டம் தொடங்கிவிட்டது
சிரிப்பும் எம்மை அப்பிக்கொண்டாயிற்று

எம் சிரிப்பின் களி கூடக் கூட
முழுதாய் ஜொலித்துப் பெருவெளியில் பிரகாசிக்கிறது சந்திரன்.
இதோ கால்களிடையே
சந்தோஷத்தின் புதிர்ப்பாதைகளெல்லாம் மடைதிறக்க
ஒரே அள்ளாய் அள்ளுப்பட்டுப் போகிறது
ஒரு துண்டுச் செங்கபிலப் பகமை.

இந் நாளில் எந்நாட்களிலுமற்ற நிம்மதியுடன்
கழிமுகத்து வண்டற் படிவாய் - உன்
அடிவயிறு கட்டி உறங்குகிறேன் வெதுவெதுப்பாய் - அது
பிறப்புக்கு முன்னதாயும் சாவை மிக அண்மித்ததாயும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரகசிய சிநேகிதன் ஒருவனுடன் வாழ்வதன் ருசி தெரியுமா உங்களுக்கு?

**-வெண்ணிலா**



ரகசிய சிநேகிதன் ஒருவனுடன்
வாழ்வதன் ருசி தெரியுமா உங்களுக்கு?

கள் போதையேற்றி
உன்மத்தம் பிடித்து
களிறொன்றின் மதநடை போடுபவன்
மண்டியிட்டு கனிவுத்தாங்கி
காலமடியில் நிற்பான்.

விஷம் தோய்த்த சொற்களை
அம்பாரியில் நிறைத்திருக்குமவன்
என் முன் எப்போம் நிராயுதபாணியே.

குளிர் பிளக்க இயலாமல்
தோற்று விழும்
மார்கழியின் இளம் வெயில் போல்
என் முன் பணிந்தேகுவான்.

பருவங்களின் சுழற்சியும்
உணர்ச்சிகளின் சுழற்கியும்
வாழ்வைச் சுழற்றாட்டும் போதும்
உள்ளங்கை பூமிப்பந்தாய்
எனைப் பொதிப்பான்.

அன்றாடங்கள் தின்றுபோடும்
குறை முத்தங்களையும்
அவசரப் புணர்ச்சிகளையும்
விடுபட்ட மோதல்களையும்
சிந்திப் போகாமல் தருவான்

தலையணையாகி
தவிப்படக்கும்
இரவொன்றைப் போல்

ரகசிய சிநேகத்தை
கைக்கொள்கிறோம்

ஒத்துக் கொள்ளும்
விகித முரண்பாடுகளில்
கை நழுவிக் கிடக்கிறார்கள்.
ரகசிய சிநேகிதர்கள்.

ரகசிய சிநேகிதன் ஒருவனுடன்
வாழ்வதன் ருசி தெரியுமா உங்களுக்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாய் நிலமும் தாய் மொழியும்

—குட்டி ரேவதி

இலங்கையைப் பொறுத்தவரை பௌத்த மதம் எப்படி அரசியல் நிறுவனமானது என்பதையும் நவீனப் பெண்ணியக் கருத்தாக்கம் கட்டமைப்பதில் இலங்கைத்தமிழ்க் கவிதைகளும், புலம் பெயர்ந்தோரின் தமிழ்க் கவிதைகளும் தாய்நிலத்தையும் தாய் மொழியையும் எவ்வாறு மையப் பொருளாக்கின்றன என்பதையும் பேசுவது இன்றைய கால கட்டத்திற்கு மிகப்பொருத்த மானதாகும்.

இலங்கையில் மத நிறுவனங்கள் அரசியல் கட்சிகளை எப்படி ஆட்டுவிக்கின்றன என்பதைப் புரிந்து கொள்வதும் அம்மதநிறு வனங்களை உடைப்பதும் அந் நிலத்திற்கான பெண்ணியத்தைப் பேசுவதற்கான அவசியங்கள். அரசியல் கட்சிகளுக்கும் மத நிறு வனங்களுக்கும் இடையிலான அமைப்புகள் நாட்டின் இறையா ண்மைக்கு ஆதரவாக இருப்பதாக் கூறினாலும் இனவாதத்தை பெருக்குவதற்கான சூழ்ச்சித் திறன்களை வளர்த்துக் கொண் டேயிருக்கின்றன. இதற்கு சாதகமாகவே புத்தரின் கருத்து க்கள் மானுடத்திற்கு எதிரான அரசியல் செயல்பாடுகளாக மாற்றப்பட்டுள்ளன என்பதும் தெளிவாகிறது.

பௌத்த இலக்கியங்களான மகாவம்ச, மகாவம்சய சிங்கள, மகாவம்ச பூஜாவலிய, சதர்ம வங்காலிய, தூபவம்சய, ராஜவலி போன்றவற்றில் கூட, துட்டகை முனு, தமிழர்களைக் கொன்று குவிக்க நேர்ந்த, குற்ற உணர்வு டன் பேசும்போது அவனுக்குச் சொல்லப்பட்டது. "தமிழர்கள், மனிதர்கள் அல்லர். எனவே அவர்களை கொல்வதில் தவறி ல்லை". இந்த வாசகத்தின் காலகாலத் திறகுமான தொடர்பை நிறுவிக் கொண்டே யிருக்கும் அரசியல் கட்டமைப் பையும் உருவாக்கிக்கொண்டே யிருக்கிறார்கள்.

உண்மையான பௌத்த இயக் கங்களோ, பௌத்தத்தை வளர்த் தெடுப்பதாக எண்ணிக்கொண்டு அதை அழித்தொழிக்கும் செயற் பாட்டில் தாம் ஈடுபடுகின்றன. அது மட்டுமன்றி இலங்கையில் அதை வேகமாக அழித்தொழிக் கும் தேவைகளும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் நிலை வேறு. இந்தியாவில் பௌத்தம் அதற்கேயான அடிப் படையான அறவியலையும் சமூகவியலையும் அரசியலையும் கொண்டு இயங்குவதற்கன காலத் தேவைகளையும் வெளியையும் தேர்ந்தெடுத்துக் கொண்டது. சாதி ஒழிப்பிற்கான ஆயுதமாக அம்பேத்கரால் கண்டடையப்பட்ட பௌத்தம் இன்று அதற்கான நவீன வடிவ மைப்புக்களையும் உருவாக்கிக் கொண்டது.

இவ்வாறு காலந்தோறும் அரசியல் அதிகாரத்திற்கு உதவும் நிறுவன மாக நிலவெளிக்கு ஏற்றவாறு மதம் தன்னை தகவமைத்துக் கொள்கிறது. இலங்கையைப் பொறுத்தவரை தீர்வுகளாக அறிவிக்கப்பட்ட மாகாணசபைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வும் நாட்டை பிளவுபடுத்தும் முயற்சி'. என்றும் நாட்டிற்கு எதிரானது என்றும் பௌத்த பிக்குகளால் அந்தத் தீர்வு செயல்படுத்தாமல் தடுக்கப் பட்டது. மகாவம்ச நூலின் ஏகசத்தா கருத்தாக்கம் அதாவது 'ஒரு குடையின் கீழ்' என்னும் சிங்கள பௌத்த மேலாதிக்கமே நாட்டின் இறையாண்மை என்று வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில் மதம், சாதி, வர்க்கம் என்ற நிறுவனங்களைத் தகர்க்க அந்த நிலவெளியை தாய்நிலமாக்கும் கருத்தியலைப் பெண்கள் கண்டறிய வேண்டி யிருந்தது. அதற்கான ஊடகமாக அவர்களின் தாய்மொழி இருந்தது. ஆனால் இப்படியொரு வரை முறை ஈழ மக்களிடமும், இலங்கைத்தமிழர்களிடமும், ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்தவர் களிடமும் உருவானது தற்செய லானது அன்று அங்கு நிலவும் கொதிநிலையில் புடம்போடப் பட்ட மக்களின் வாழ்நிலை உருவாக்கிய வேதியற்பரிமா ணமாகவும் இருந்தது.

எப்போதுமே போர் பெண் களுக்கு எதிரானவையாகவும், ஆண்களால் வருவிக்கப்படு வதாயும் இருக்கின்றது. பெண் தன்னை ஒரு தொட்டிச்செடியைப் போலவே பராமரிக்க வேண்டிய தாயிருக்கிறது. தாய் நிலத்தை விட்டு புலம் பெயர வேண்டி யிருக்கும் பெண்கள் தொட்டிச் செடிகளைப்போல, ஈழத்தி லிருந்து புலம் பெயர வேண்டியி ருக்கும் பெண்கள், தாங்கள் படைக்கும்கவிதைகளால் உலரும் தம் வேர்களுக்கு நீரூற் றிக்கொள்ளும் பணியைத்தான் செய்கின்றனர்.

எல்லை வரையறைகளின் மீது மூர்க்கங்கொண்டு எழும்போர்கள் குறித்த வேதனையும் வலியும் கண்ணீரும் அங்கதமும் பகடியும் எள்ளலும் வெறுப்பும் பேரமும் காலங்காலமாய் நிலவெளியைக் குதறுகின்றன. இதற்கு கைப் பாவைகளாகப்பயன்படும் பெண்கள் தம் உரிமைகளுக்காக மேம்போக் கான போராட்டங்களை நிகழ்த்தி யும் போர் குறித்த தமது எதிர்ப்பு களைத்தொடர்ந்து பதிவு செய்தாலும் சற்றும் மாற வில்லை. போரின் உள்ளீடுகளும் விளைவுகளும் 'போர்' என்பதே இறுகி இறுகி இரத்தம் உறைந்த காட்சியாகிவிட்டது. இந்நிலையில் பெண்கள் செய்ய வேண்டிய தெல்லாம் தாய் நிலத்தின் மீதான தமது உரிமையை விவாதத்திற்கு கொண்டு வருவதும், தாய்மொழி யில் படைப்பாளு மையைப் பதிவு செய்வதுமே. ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்த படைப்பாளி களைப் பொறுத்தவரை கவிதைப் படைப்பாக்கத்தில் நிலம் என்பதை வேறுவேறு பார்வைக் கோணங்களிலிருந்து அணுகி அதை ஒரு பாடுபொரு ளாக விவாதப்பொருளாக ஆக்கி யுள்ளதைக் காண முடிகிறது. மேலும் சமீபத்திய இலங்கைப் போரும் வன்முறையும் நிலம் என்பது பெண்கள் தமது உரிமையாக வரிந்து கொள்ளும் தீவிரத்தை, அப்படியானதொரு உரிமையெழுச்சி நிலையை அடையும் நெருக்கடியை, இனவாதமும் தேசியவாதமும் பீடித்த ஆணாதிக்கச்சூழலும் செயல்பாடும் ஏற்படுத்தியுள்ளது என்றே சொல்ல வேண்டும்.

தாய்நிலத்தையும் தாய்மொழி யையும் தமது வாழ்நிலைக் கோட்பாட்டுக்குள் எவ்வளவுக் கெவ்வளவு நுணுகிப்பார்க்க முடிகிறதோ அவ்வளவுக்கவ் வளவு நவீன பெண்ணுரிமையும் பெண்விடுதலையும் சாத்தியம் என்பது உணரப்பட வேண்டும். தாய்மொழி என்ற இனமொழி யுணர்வு பெண்ணுக்கு அளிக்கப் பட்டதேயில்லை. எந்தச்சொற்களை எந்தெந்த அர்த்தங்களோடு படைப்புக்குள் பயன்படுத்தலாம் என்ற தணிக்கையுணர்வு பெண் மீது சுமத்தப்படுகிறது. மேலும், மொழிவரலாறு அறியப்படாத நிலையில், அதன் அரசியல் சாயத்துடன் ஆண்களின் படைப்புக்குள் ஊடாடும் அள விற்கு பெண்ணின் படைப்புகளில் இயங்கமுடிவதில்லை. ஆக, இங்கே பெண் சொற்களின் எல்லைகளைக் கடந்து சொற் கோவையாலும் வார்த்தைச்சங் கிலியாலும் படிமங்களை உருவாக்கி அவற்றை போரைத்தகர்க்கும், மறுக்கும், நிராகரிக்கும் யுத்திக ளாகப்பயன்படுத்துகின்றனர். தாய்மொழி என்பது பெண்ணுக்கு வழங்கப்பட்ட மொழியில்லை. அவளே தனது நுண்மாண் நுழைபுலத்தால் உருவாக்கும் மொழி. மேலும், மொழிப்பற்றும் மொழிவெறியும் பெண்ணின் படிப்பில் 'உணர்வின் தருணங் களை எழுச்சி மிக்கவையாக்கு வதற்கான ஓர் உயரிய வழியாகப் பெண்ணிடம் பரிணமிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, பெண்கள் மொழியசைவை தீவிரமாய் உருவாக்க வேண்டியிருக்கிறது. சமூக அசைவியக்கத்தை இது நேரடியாகச் சென்று ஊடறுக்கும் என்றும் நம்பலாம். ஏனெனில் இன்றைய தமிழகத்தில் நிலவும் தமிழ் மொழி விருப்பமும் பற்றும் வெறும் தமிழ்ச்சொல்லின் அளவிலும் அவற்றின் உச்சரிப்பு எல்லைகளோடும் தீர்ந்து போகிறது. இத்தகைய அணுகு முறையால் அடுத்தக்கால கட்டத்திற்கான எந்த அர்த்தப் பாட்டினையும் ஒளிமயமான எதிர்காலத்தையும் சொற்கள் ஒரு போதும் சுமந்திருக்கப் போவதில்லை.

தாய் நிலம் என்பது பெண்ணால் தீர்மானிக்க முடியாததாக இருக்கும் நிலையில் நிலம் என்பது பூகோள ரீதியானது மட்டுமே இல்லை என்று உறுதியாகக்கூறமுடியாது. ஆணுக்கு பூகோள ரீதியானதாகத்தோன்றும் நிலம், பெண்ணுக் குத்தன் உணர்வு நிலை காலூன்றும் செம்மண்ணா கவும் கால வெளியுடன் தொடர்புடையதாகவும் இருக்கிறது. நிலத்தைப் பெண்கள் கைப்பற்ற வேண்டும். நிலத்தின் மீதான தமது ஆதிக்கத்தைப் பெருக்கிக் கொள்ளவேண்டும். வெறுமனே விவசாயக்கூலிகளாய் முதுகு மடித்து நிற்கும் பெண்களுக்கு நிலம் வாழ்வாதாரமாய் தாய்மண் ணாய் தனது நாடாய் மாற வேண்டும். ஆனால் இது சாதாரண விஷயமுமில்லை. எளிதாக நிகழும் மாற்றமு மில்லை. தொடர்ந்து நிலம் குறித்த தமது அர்த்தங்களை தொடர் உறவுகளின் வழியாகப் பேச வேண்டும். பெண்களால் நிகழ்த்தப்படும் நிலம் பற்றிய பேச்சுதான் போர் மூண்ட உலகை மணக்கவ்வச்செய்யும். அதிலும் ஓடுக்கப்பட்ட பெண் களுக்கு நிலம் கையகப்படும்போதே விடுதலை பூரணமாகும். நாடு என்ற சொல், பல அர்த்தங்கள் தொனிக்க பேச்சிலும் வழக்கிலும் இலக்கியங்க ளிலும் அரசியலிலும் விடுதலைப் போராட்ட வடிவங்களிலும் பரிணமிக்கும்.

ஈழத்தினரிடமிருந்தும், இலங்கைத் தமிழர்களிட மிருந்தும், இலங்கையிலிருந்து, புலம் பெயர்ந்த தமிழரிடமிருந்தும் வரும் கவிதைகளில் இரண்டு வகையான கவிதைகளைக்காண முடிகிறது. அவை, பெண்ணுரிமையை மேலெழுந்த வாரியாகப்பேசும் வழக்கமான கவிதைகள், நிலத்தை சொற்களின் வேர்களால் வேரெனப் பற்றியிருக்கும் பச்சைக் கவிதைகள்.

**வரி மங்குகிற நினைவு**
பொட்டுப் பொட்டாகத்
தாடை விளிம்பில் தொங்கிற்று.....
ஆற்றுக்கு அந்தப் பக்கம் நிற்கிற
வாழ்வின் புலம்பல்

அரசல் புரசலாக
ஊர்க்காதில் விழுந்தும் விழாததுமாக
காற்றின் இறுக்கம் தளர்ந்திருந்தது.

வயல்வெளிக்கு நடுவில் போகும்
தென்னைகள் ஓரமிட்ட சாலையில்
தலை கிடந்த அலங்கோலத்தில்
விரல்கள் பதிந்த கன்ன நோவில்
நுரையீரல்களும்,
விலா எலும்புகளும்
நொறுங்கிய மூச்சடைப்பில்
ஒரு குரல்
நடுங்கி நடுங்கி வீழ்ந்தது

அவர்கள்....
உட்கார்ந்திருந்த தரையை இழுத்து
அந்தரத்தில் தொங்கவிட்டார்கள்
குளத்தையும் ஏரியையும் தூர்த்துக்
குப்பை கொட்டினார்கள்....
குப்பைகள் எரிந்து
கட்டைக் கரியும் புகையுமாக
நெடி வீசிற்று
அதனூடு அவர்கள் வாழ்க்கையின் வாடை வீசிற்று

இன்னும் இன்னும்
இரத்தக் குட்டைகளில் மயிர் உறைந்து...
எனக்கு நாக்கு நுனியில் வந்துவிட்டது.

மறுகணம் என் தாகம் அடங்கி
சாம்பலாயிற்று....."

**எனும் தில்லை (சுவிஸ்) யின் கவிதையில் இருக்கும் நிலம் என்பது**
'உட்கார்ந்திருந்த தரையை இழுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தரத்தில் தொங்கவிட்டார்கள்' என்ற வரிகள் வழியாக சுவற்றில்தொங்கவிடப்படும்ஒரு வரைபடமாக மட்டுமே அர்த்தப்படுகிறதைக் காணலாம்.

**குழந்தைகளின் உலகினைத்தேடும் ஒரு நாடோடி(டி)யின் பாடல்**

நான் நடந்து கொண்டிருக்கிறேன்
எனக்குச் சற்றும் உரிமையில்லாத
இந்தத் தேசத்தின்
தெருக்களினூடாக ஒரு நாடோடியைப் போல
தொலைந்துபோன எமது சந்தோச இருப்புகளின்
எச்சங்களைத் தேடியபடி

நீங்கள் கத்துகிறீர்கள் தான்
நீ இந்தத் தேசத்தின் குழந்தையில்லை
நீ துரத்தப்பட வேண்டியவள்
நான் மறுக்கின்றேன்
எமது குழந்தைகளுக்கான நிரந்தர
உலகினை சிருஷ்டிக்கும் நோக்குடன்

மென்மையான இயல்புகளில் வஞ்சனைகளை
தூபமாக ஏற்றி விட்டு
பற்றியெரியும் தேசத்தின்... "கிழக்கில் விடியல்"
கற்பனையின் அழகியலைக் காகிதக் குப்பைகளால்
சிதைத்தழித்து நுங்குக் குலைகளாய்
காவு கொள்ளப்படும்
மனித உடலங்களுக்கு... "வடக்கில் பலிபூசை"

இவைகளைக் கடந்து போகிறேன்
நீண்ட பயணத்தின்
பயணியாய், நித்திய தேடலுடன்
எச்சங்கள் சிதைந்து சிதறிய குருதியின்
கருநிறச் சிதறல்கள் வரலாற்றின் மேல்
சபிக்கப்பட்ட கறைகளாக
என்னைப் பின் தொடர்ந்து வர
ஒரு விசரியைப் போல

கற்களால் எறிந்து துரத்திய அவர்கள்
மோகித்துக் குதறுகிறார்கள்
தூக்கி எறியப்பட்டு புழுதியில் புரளும் என்னை
சகோதரத்துவம்;செத்திருந்து
மிதித்து நடக்கும் மனிதர்களிடம்

பிய்ந்து தொங்கிய என் உடலை
இழுத்து நடக்கிறேன்
எனதிருப்பின் சொச்ச தருணங்களுக்காய்
அவர்களின் குரோதக் கண்களைக்



கொத்திக் கொண்டு
எதிர்பார்ப்புகளின் குலைதலைத்
தலைமேல் சுமந்து கொண்டு
சோதனைச் சாவடியைத் தாண்டி நடக்கும் என்னை
அவன் சொன்னான்
"கொல்" அந்த வந்தேறு குடியானவளை"
கிழக்கின் விடியலுக்கு... ஜ... ய.... வே... வா

**என்கிறது சிமோன்தி (இலங்கை) யின் கவிதை சொந்த நிலத்தில் தனது அந்தரங்க வாழ்வின் எச்சம் தெடும் பெண்.**

'சாபங்களை அகற்றிய குழிகளின் மீதிருந்து...' **எனும் பஹீமா ஜஹானின் (இலங்கை) கவிதையில்**

"அறுவடை காண மறந்த வன்னிப்பெருநிலத்தில்
நச்சுக் கிழங்குகளை நாளெல்லாம் தோண்டலாம்"

என நிலம் எடுத்திருக்கும் நவீன வடிவம் காட்சியாகிறது.

இவ்வாறு நிலம் பெண்களுக்கு அவரவர் எதிர் கொண்ட அனுபவங்களின் நீட்சியாகவும் காண விரும்பிய கனவின் பரப்பாகவும் தொலைந்து போன உரிமையாகவும் கொடூரமான எதார்த்தமாகவும் சொற்களுக்கிடையே எதிரொலித்துக்கொண்டேயிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் எனது படைப்புலகமும்

**1990**களில் மட்டக்களப்பில் உருவான புதிய தலைமுறையினரின் காத்திரமான சிந்தனைப் போக்கும் தீவிர வாசிப்புக் காரணமாக ஆற்றலும், ஆளுமையும் மிக்க எழுத்தாளர்கள் பலர் உருப்பெற்றனர்.

~மண்டூர் அசோகா



**நிலா** முற்றத்தில் அம்மாவின் மடியில் தலை வைத்துப் படுத்துக் கிடந்து "அம்மா ஒரு கதை சொல்லம்மா" என்று கேட்பதும், "ஆண்டாரே ஆண்டாரே எங்கெங்கே போறாய்...." எனத் தொடங்கி அம்மா கதை சொல்வதும் அதைக்கேட்டு ரசிப்பதுமாய் தொடங்கியது எனது இலக்கியப் பயணம்.

இரண்டு மூன்று வயதுகளில் கேட்டு ரசித்து மகிழ்ந்த அந்த ஆண்டார் கதையும், கரிக்குருவி நாச்சியார், ஆக்காண்டி கதைகளும் அலுப்புத் தட்டியபோது விக்கிரமாதித்தனும், வேதாளமும் படிக்கொன்றாக நின்று கதை சொல்லும் பதுமை களும் அசோக வனத்தில் இருந்து கண்ணீர் விட்ட சீதையும், துகிலுரியப்பட்டுக் கதறியழுத பாஞ்சாலி யும் என்னுடைய பத்துப் பன்னிரெண்டு வயது மனதில் நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்டு எனக்குள்ளே ஏதோ உணர்வலைகளை எழுப்பிக் கொண்டிருந்தனர்.

விபரம் புரியாத எந்த அகப் புறக் காரணிகளாலும் மாசுபடாத அந்தப் பசுமையான பராயங்களில் சிறுபிள்ளைத்தனமான கற்பனைகள் இயல்பாகவே என் மனதில் கொழுந்து விட்டதை என்னால் மறக்கமுடியாது.

இந்த எல்லையைத் தாண்டி, சற்றே அறிவுத் தெளிவு உண்டான பின்னர் என்னைச் சுற்றியிருந் தோரின் வாசிப்புப் பழக்கம் என்னிடமும் படிந்து கொண்ட தால் ஏற்பட்ட வாசிப்புத் தாகம் என்னுள்ளே கொழுந்துவிட்ட கற்பனைகளுக்குத் தீனி போட்டன என்பதையும் என்னால் உணர முடிகிறது.

பண்டைய மரபு வழியில் சற்றும் பிறழாமல் ஆசார அனுட்டானங்களில் ஊறி, கலாசார அடையாளங்க ளைக் கட்டி காத்து வந்த எனது கிரா மத்து மக்களின் வாழ்க்கை முறை யில் ஓர் அமைதி, தெளிந்த நீரோ டைபோல விரவிக்கிடந்ததால் மரபு மீறல் களோ, கலாசாரச் சிதைவுகளோ அவற்றால் ஏற்படும் முரண்பாடுகளோ மிக அரிதிலும் அரிதாகவே இருந்தது. மண்ணோடும் மண்ணின் வளத்தோடும் தம் வாழ்வைப் பிணைத்துக்கொண்ட கள்ளம் கபடமில்லாத மக்களிடையே வாழ்தலுக்கான போராட்டம் மட்டுமே காணப்பட்டது. இந்த தெளிந்த நீரோடை போன்ற வாழ்க்கை முறைமை கொண்ட மக்களிடையே வாழ்ந்ததன் காரணமாய் எனது சிந்தனையிலும் மாற்றங்கள் ஏற்படாமல் இருந்தி ருக்கலாம்.

இதற்குமப்பால் எழுபதுகளில் எனது வாசிப்புத்தளம் சற்றே விரிவுபடுகையில் ஏற்பட்ட சிந்தனை மாற்றங்கள், எனது கிராமத்து மக்களின் வாழ்வியல் மாற்றங்கள், அவை பற்றியதான எனது அவதானிப்புக்கள் எல்லாமாய் என் கற்பனைகளில் தீவிர மாற்றத்தை ஏற்படுத்தின. இதன் காரணமாக எனது எழுத்துத் தளம் சற்றே ஆழமாகியது எனலாம். அக்காலகட்டத்திலேயே சமூகம் பற்றிய தான எனது அவதானிப்புகளும் கூர்மையடையத் தொடங்கின.

பெரும்பாலும் விவசாயத்தையே தமது ஜீவனோபாயத் தொழிலாக கொண்டிருந்த எனது கிராம மக்களின் அப்பாவித்தனமான சிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும், அந்த அப்பாவித்தனங்களையே சாதகமாக்கி அவர்களது உழைப்பையும் சுரண்டும் போடிமார்களின் கெடுபிடிகளும், அகம்பாவங்களும், வசதி படைத்த குடும்பப் பெண்கள் உரிய வயதில் வாழ்வைத் தேடிக்கொள்ள தம்வாழ்வுக்கு எந்த வொரு பற்றுக்கோடுமில்லாத ஏழைப் பெண்கள் முதிர் கன்னியராய் இருந்து விடுகின்ற பெருமூச்சுக் களும், கால்வயிற்றுச் சோற்றுக்கும், வருடத்துக்கு ஒன்றோ இரண்டோ புடைவைக்குமாய் குடிகாரக் கணவன்களின் கொடுமைகளைத் தாங்கி வாழும் அபலைப் பெண்களின் கண்ணீரும், கதறலும் எனக்குள்ளே ஏற்படுத்திய சலனங்கள் என் எழுத்துக் களுக்கு சற்றே வலுவான பெறுமானத்தைத் தந்தன.

இந்த எழுபதுக்குப் பின்னரான எனது எழுத்துலகம் என்னைப் பொறுத்த வரையில் ஒரு பொற்காலத்தைச் சிருஷ்டித்துத் தந்ததென்றே கூறலாம். வர்க்கபேதங்கள், சீதனக் கொடுமைகள், பெண்ணடிமைத்தனம் அல்லது பெண்கள் மீதான வன்முறைகள் எனது எழுத்துக்களில் பேசப்பட்டன.

இந்தக் காலகட்டத்தில் நான் எழுதிய சிறுகதைகளுக்குள் சமதையாய் அல்லது அதற்கும் அதிகமாய் கவிதைகள் எழுதினேன். என்னை ஒரு சிறுகதை எழுத்தாளராய் அறிந்துகொண்ட பலர் ஒரு கவிஞராக அறிந்துகொள்ளாதது அல்லது எனது கவிதா ஆற்றலை வெளிப்படுத்திக்கொள் ளாதது எனது துரதிஷ்டம் என்றே கூறவேண்டும்.

புதுக்கவிதை பற்றிய ஆழமான அறிவோ அல்லது அதன் வடிவம் பற்றியதான தெளிவோ இல்லாத அந்த எழுபதாம் ஆண்டு காலங்களில் ஏராளமான புதுக்கவிதைகள் எழுதினேன் என்பது பலருக்கு வியப்பைத் தரலாம். அக்கவிதைகளில் சமூகக் கொடுமைகளே கருப்பொருளாய் அமைந்தி ருந்தன. வர்க்க முரண்பாடு, சாதியம், சீதனக் கொடுமை, பெண்கள் மீதான வன்முறை என்று பலவிதமான பிரச்சினைகளைக் கூறும் கவிதைகள் என் சிந்தனைகளில் உருப்பெற்றன. அக்கவிதைகள் யாவும் அச்சுருவம் காணாது வானொலியிலேயே ஒலிபரப்பானதால் காற்றோடு கலந்து போயின. இக்காலங்களிலேயே எனது மெல்லிசைப் பாடல்க ளும் ஏராளமாய் ஒலிபரப்பாகின.

76ல் 'கொன்றைப் பூக்கள்' சிறுகதைத் தொகுதி வெளி வந்தபின்னர் அதற்கு சாகித்திய விருது கிடைத்ததன் மூலம் எனது எழுத்துக்கான அங்கீகாரம் கிடைத்ததாகவே உணர்ந்தேன். அதன் பின்னர் என்னிடம் உருவான புதிய உத்வேகம் என் எழுதும் கரங்களுக்கு வலுவைத் தந்தன.

சிந்தனைகள் பரந்துபட்ட அக்கால வியா பகத்தில் பெண்களின் மீதான அடக்குமுறைகளும், கொடுமைகளும் என்னை வெகுவாகப் பாதித்ததன் காரணமாய் எனது எழுத்துக்கள் ஒடுக்கப்பட்ட பெண்களின் போராட்டத்துக்கான குரலாய் வெளிப் பட்டன.

"தற்போது பல பெண்கள் அமைப்புக்கள் பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான போராட்டங்களை நடாத்தி வருகின்ற போதும் அவ் வமைப்புக்களுக்கு முன்னரே பெண்கள் மீதான வன்முறைகளை எதிர்த்துக் குரல் கொடுத்தவர் மண்டூர் அசோகா" என்ற பொருள்பட திரு அன்புமணி அவர்கள் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்ததை இங்கு நினைவு கூர விரும்புகிறேன்.

எனது பெரும்பாலான சிறுகதைகளில் பெண்கள் மீதான அடக்குமுறைகளும் அவற்றை மீறத் துடிக்கும் அவர்தம் வைராக்கியங்களும் பேசப்பட்டன.

தந்தையின் வரட்டுக் கௌரவத்தாலும் பிடிவாதத்தாலும் வாழ்க்கையைத் தொலைத்த ஒரு அப்பாவிப் பெண்ணின் கதையைக் கூறும் "பாதை மாறிய பயணங்கள்" நாவலும் இன்னும் இரண்டொரு கூட்டு நாவல்களும் எழுதிய போதிலும் எனது சிறுகதைகள் தந்த மனத் திருப்தியை நாவல் தராததால் அந்த முயற்சியை அதோடு கைவிட நேர்ந்தது.

என் இலக்கியப் பிரவேசத்தின் ஆரம்ப காலம் முதற்கொண்டு இன்றுவரையும் என் எழுத்துக்களில் பாராட்டப்படவேண்டியவற்றைப் பாராட்டியும் குறைகள் பற்றி சுட்டிக் காட்டியும்என் பாதையை செப்பனிட்டவர்கள் பலர். என் எழுத்து மீதான அவர்களது அக்கறையும் என்னை இயங்க வைத்துக்கொண்டிருக்கின்ற காரணிகளில் ஒன்று என்று கூறலாம்.

1990களில் மட்டக்களப்பில் உருவான புதிய தலைமுறையினரின் காத்திரமான சிந்தனைப் போக்கும் தீவிர வாசிப்பும் காரணமாக ஆற்றலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமையும் மிக்க எழுத்தாளர்கள் பலர் உருப் பெற்றனர். அவர்களிடமிருந்து மிகத் தீவிரமான விமர்சனப் போக்கும் வெளிப்படுத்தப்பட்டது.

மட்டக்களப்பு வாசகர் வட்டத்தினரின் கருத்தாடல்கள், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை சார்ந்த அறிஞர்கள் சிலரின் பெறுமதியான செயற்பாடுகள் மட்டக்களப்பின் இளம் எழுத்தாளர்கள் பலரைப் புடம்போட்டன. நவீன எழுத்துக்களின்பால் கவனத்தைத் திருப்பின.

இத்தகையதோர் சிந்தனை விரிவும் நவீன எழுத்துக்களின் மீதான வாசிப்பு ஆர்வமும் எமது படைப்புத் தளத்தை மாற்றிக் கொள்வதற்கு வழிகாட்டுபவையாக நிச்சயமாய் அமையும் என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்டதன் காரணமாய் எனது படைப்புக்கள் மீதான விமர்சனங் களை உள்வாங்கி சிறுகதைகள் எழுதும் முயற்சி களில் இருந்து ஒதுங்கி வாசிப்பில் எனது கவனத்தைச் செலுத்தி இருந்தேன்.

இந்த இடைவெளியில் பல கவிதைகளை என்னால் எழுத முடிந்தாலும் அவற்றை வெளிப் படுத்தும் முயற்சிகள் எதனையும் மேற்கொள்ளா ததால் அந்தக் கவிதைகள் பற்றியும் எவருக்கும் தெரியாமலே போயிற்று.

மொத்தத்தில் எனது சிறுகதைகளும், கவிதைகளும் நான் கண்ணெதிரில் காணுகின்ற அவலங்களை, ஒடுக்கப்படுகின்றவர்களின் ஓலங் களை, அவற்றை மீறும் மன உணர்வுகளை, உந்தல் களை வெளிப்படுத்துபவையாக அமைகின்றன என்பதில் நான் பெறுகின்ற ஆத்ம திருப்தி ஒன்றே என் எழுத்துக்களால் எனக்கு கிடைக்கின்ற வெகுமதியாகும் என்பதை மனம் விட்டுக் கூறிக் கொள்கிறேன்.

- கி. கலைமகள் -

---

# புதிய அர்த்தப்பாடு

என் வார்த்தைகளின் அர்த்தப்பாடு
உனக்கு
புரியாமல் போகிறது

எப்படி முடிந்தது உன்னால்?

என்னுடனே
குசினி தொடக்கம்
விறாந்தை வரை
இருந்து விட்டு
புரியாமல் போவது

என்னை
புரிந்துகொள்ள வேண்டிய
தேவைப்பாடு எதுவும்
உனக்கில்லையென
நீ எண்ணுகிறாய்

உன்னை
புரிந்துகொள்வது எப்படியென்றே
இன்றுவரை - எனக்கு
சொல்லித்தரப்பட்டுள்ளது

உன்னை - உன்
குளியலறை தொடக்கம்
படுக்கையறை வரை
புரிந்துகொள்ள - நான்
நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறேன்

எனக்குப் புரிகிறது

நான் - உன்
விலா எலும்பிலிருந்து
உருவாக்கப்பட்டவள்

என்றான பின்
எப்படி - உன்னை
புரிந்துகொள்ளாமல் இருப்பது

என் வார்த்தைகளின் அர்த்தப்பாடு
உனக்கு
புரியாமல் போவது
நியாயம்தான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணியா

## நான் உணர்ந்தவைகளும் பதிந்தவைகளும்

**-சலனி**



பெண்ணியா பற்றிய எனது மனப்பதிவுகள் கணிசமானவை அவற்றுள்ள அவரின் வாழ்வனுபவங்கள் எனக்கு மிகவும் நெருக்கமானவை. அது முதுகுக்கும் நெஞ்சுக்குமிடையேயானது போல, அத்துடன் பிரதேசம் சார் வாழ்வியல், பண்பாடுகளை சேர்ந்தே நுகர்ந்தவள் என்ற வகையில் இந்தப் பெண் மீதான அடக்குமுறையை, அங்கலாய்ப்பை என்னால் மிகத் தெளிவாக புரிந்து கொள்ள முடியும்.

கவிதைகளுக்கு முன்னர் பெண்ணியா என்ற பெண் என கண் முன்னால்நிழலாடுகிறார். ஒரு சமுகம் மீதான பொதுவான சிந்தனையிலிருந்து முகிழ்த்து வெளியில் வந்தவர் பெணணியா தனது இருப்பை நிலை நிறுத்துவும் தனது முகத்தை வெளிக்காட்டவுமென அவர் கவிதையை தேர்ந்தெடுத்திருப்பது வியப்பாக உள்ளது. இறுக்கமான சமுக தழைகளை தனது பெண் மொழியினால் மட்டுமே தளர்த்த முடியுமென்ற நம்பிக்கை அதிக பிரமிப்புக்குரியது.

இன்றைய பெண்களின் விடுதலை முயல்வுகள் அவர்கள் சார்ந்த இயங்குதளங்களின் பெறுபேறுகளிலேயே தங்கியிருப்பதான பெரும் மரபை எழுத்து முயற்சியால் கட்டுடைக்க, கேள்விக்குட்படுத்த முயன்றிருக்கிறார் பெண்ணியா. அதனை அவர் சாத்தியப்படுத்தியுமிருக்கிறார்.

கல்வி மறுப்பு (இடைநிறுத்தம்) பெண் சார்ந்த பொருளாதார வகிபாகங்களுக்கு தடை விதித்தல், தனது துணையை தானே தேர்ந்தெடுப்பதிலுள்ள குழப்பங்கள். நான்கு சுவர்களுக்குள்ளான வாழ்க்கை. வெளியுலகு அறிகை தொடர்பான மட்டுப்பாடு, நட்பு வட்டத்தை பேண முடியாமை. இழந்து போகின்ற நண்பர்களின் எண்ணிக்கை, நாளடைவில் வந்து சேரும் இரக்கமற்ற தனிமை, தன்னுள்ளேயே தன்னைச் சொல்லி புலம்புதல், கண்ணாடியில் பார்த்து அங்கலாய்த்தல், எதிர் நாட்கள் தொடர்பான மனச் சோர்வு என இந்த சமுகம் பெண்ணுக்கென வழங்கியிருக்கும் வாழ்வை நன்கறிவேன். இதற்கு பெண்ணியாவும் நானும் எனது நண்பிகளும் விதிவிலக்கானவர்களல்ல.எனவே இந்த வாழ்வு, சமுக போக்கு மீது பெண்ணியா ஆற்றும் எதிர்வினை என்னுடையதும் தான். அந்த வகையில் பெண்ணியா கவிஞர்என்பதை தாண்டியும்எனக்கு முக்கியப்படுகிறார். (நல்லதொரு சிந்தனையாளர் என்ற வகையில்)

அன்று அவ்வினிய உலகில்
நானும் அவளுமாய்த்தான்
எம் சிறகுகள் கோர்த்து.........
சுற்றித் திரிந்தோம்.....

ஓவ்வொரு பெண்ணும் இழந்து துடிக்கும் கணங்களை அப்படியே பதிவு செய்யத் தெரிகிறது பெண்ணியாவுக்கு என்ற பிரமிப்பிலேயே இது நதியின் நாள் தொகுப்பை புரட்டினேன். பெண்ணியாவின் முன்னைய தொகுப்பு அதன் அட்டைப் படத்திற்காகவே (உள்ளடக்கமும் சேர்ந்துதான்) அனேகரை வசீகரித்திருந்தது. ஒரு தசாப்த காலத்தில் வெள்ளப் பிரளயமாகவே அது கொண்டு வரப்பட்டது. அத்துடன் குறிப்பிடத்தக்களவு அதிர் வலைகளையும் ஏற்படுத்தத்தான் செய்திருந்தது. முந்தைய தொகுப்பிலிருந்து பேசு பொருள், மொழி வடிவம், எடுத்துரைப்பு முறைமை, அழகியல், கற்பனை, படிமங்கள், நுட்பம் போன்றனவற்றின் அடிப்படையில் முற்றிலும் வேறுபட்ட அதே நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் நல்ல தொகுப்பாக இதை காண முடிகிறது. அத்துடன் பொதுத் தளம் நோக்கியதான பெண்ணியாவின் பார்வை விரிவுபட்டிருப்பதன் விளைவு எனவும் இதனை கொள்ள முடியும் அத்துடன் தன்னிலிருந்தான தனது கவிதை (அகவலயத்தன்மை) என்ற நிலையிலிருந்து சற்று விலகி கவிதை பாட முயற்சித்திருக்கிறார் என்பதையும் அவதானிக்க முடிகிறது.

அந்த வகையில் புராதன கால காதல் மீதான நெருக்கமுற மறுத்த நேசம் பற்றியதான அங்கலாப்புகளை பெண்ணியாவின் கவிதைகள் பேசுகின்றன.

அந்த உலகு
அவளை மிதக்க வைத்தது
தூதுவன்
அவளை
மடியில் உறங்கச் சொல்லி
அவளுக்கு பிடித்த கவிதையை
பாடலாய் இசைக்கிறான்.

உணர்வு நிலையின் ஆரம்பத்தில் அல்லது விளிம்பில் நின்று எட்டிப்பார்க்கும் அனுபவத்தை பதிகிறார். தீவிரமான பெண் மொழியை நோக்கி வேர்விடும் தறுவாயில் நிற்கிறார் பெண்ணியா.

ஆண்மை வழியும் இரவில்
இராப் பிச்சைக் காரனின்
கெஞ்சலும் தோற்றமும் மிகைப்பட
கையேந்துகிறாய்
ஒரு இரவுக்காக
.........................

பூமியின் முலைகளில்
ஊற்றெடுத்து வழியும்
வெண்மையின் பாலில்
........................
முத்தங்களிலும் அணைப்பிலும்
பால் சுரந்து வற்றிப்போன
முலைகள் பூரிக்கின்றன.

இயலுமான மட்டும்
தன் பின்புறத்தை உரிந்து காட்டுகிறது
இயலாமை மிக்க
அகங்கார விலங்கு போன்ற வரிகளில் அதனை அவதானிக்க முடியும். இரவின் அந்தரங்கமான விரகத்தையும் தன் விரல் நுனிகளால் சீண்டிப் பார்க்கும் ஆரம்ப நிலையில் பெண்ணியா இருக்கின்றார்.

பார்வையின் இடையே
முத்தங்களின் ஸ்பரிசத்துக்காய்
துடிக்கும் உதடுகளின்
வார்த்தைகளின் இடையே
..............

முகத்தை திருப்ப முனைந்து கொண்டிருக்கிறது
முடிவில்லாத இரவு
.........
இரவின்
இன்னுமொரு அத்தியாயத்தில்
காதல் என்ற சொல் வரும்போது
...........

மறைந்து போ
இரவின் இருட்டு

இன்றைய பெண் மொழியின் தேடல் அந்தரங்க உறவுகள் மீதான படர்தலாகவும், தன் ஆண் உறவு மீதான திருப்பதியின்மை உடல் சார்ந்த விரக வெளிப்பாடென அதிசயிக்கத்தக்க அளவான முந்தானை அவிழ்ப்புகளிலும் பெண்ணியாவின் கவிதைகள் சிக்கலுறத் தவறவில்லை என்றே கொள்ள முடிகிறது. மரபார்ந்த தனது அனைத்தும் மீதான வெறுப்பு ஒரு விதமான கிளுகிளுப்பான பலகாதல் நிலைக்கு பெண் எழுத்தை நகர்த்திச் செல்வதான குற்றச் சாட்டையும் பலர் முன்வைப்பதை அவதானிக்க முடிகிறது. இது அந்தரங்கம் சார்ந்த அதீதமான உடலிச்சையை பேசுதல் என்ற புனிதங்களை கட்டுடைக்கும் முயற்சியாகவும் பெண் கவிகள் மீதான ஓரப்பார்வையாகவும் தற்காலப் போக்கில் இடம் பெறுகிறது. இதற்கு பெண் கவிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் மௌனம் அதற்கான அங்கீகாரத்தை வழங்கிவிட்டதோ என்னவோ!

தனக்கான ஒரு மொழியை கண்டடைவதில் கவிஞர் உன்னிப்பாய் இருக்கிறார். அது அவருக்கு இலகுவில்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவில் வசப்படும் என்பது எனது நம்பிக்கை. உள்ளடக்கத்தினால் கூடிய தொகையளவான கவிதைகளை கொண்டுள்ளது. உதிரிகளாக அறியப்பட்ட நிறைய கவிதைகளை தொகுப்பாக பார்க்கும் போது எனக்கு அவ்வளவான ஈடுபாட்டை வாசிப்பில் தரவில்லை. என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை நூல் தொடர்பில் எனக்கு பேச இருந்த நிறைய விடயங்கள் இப்போது என்னுள் வற்றிப்போயிருப்பதை அவதானிக்க முடிகிறது. அது எனது செழிப்பு தொடர்பான குறைபாடு.

கவிதைகளை அவை வெளிப்படுத்தும் முறையில் குறிப்பிட்ட சில வகைப்பாடுகளுள் கொண்டு வர முடிகிறது. சுயம் சார்ந்த கவிதைகளாக காட்டின் அரசி, அரசியாகும் ஓர் கழுகு, இது நதியின் நாள், என்பனவற்றை குறிப்பிட முடியும். காற்றில் ஈரலிக்கும் காதல், இலவு காத்தல், நீ என் நண்பனாகிறாய் போன்றன புராதன காதல் மீதான படிவாக தெரிகிறது. வெளியனுபவம் சார்ந்த கவிதைகளாக பயணம், இருளின் நதிக்கரையில், பூக்கள் என்பவற்றையும் அவரது தற்கால நேசத்தை பதிவு செய்யும் பிரதிகளாக காதல், நீலமான இரவு, மற்றுமொரு நீயும் நானும் குறிப்பிட முடியும்.

மழை கவிதை இயற்கை மீதான லயிப்பைச் சொல்கிறது நிகழ்தல், நிழல், கண்ணாடிகளின் பின்னால் இன்றைய பெண்ணியாவின் நெருக்கு தல்களை அவாவும் கவிதைகளாக தெரிகின்றன. வெளி சஞ்சாரம் சார்ந்த வியாபகம் சில நேரம் திகட்டிவிடும் ஒன்று. அதனையே காட்டின் அரசி கவிதை குறித்து கூறலாம். அத்துடன் அனாரின் அரசி கவிதையை இது ஞாபகப்படுத்துகிறது. ஒரே சாயலில் அமைந்த ஒத்த தன்மையுடைய சில வரிகளையும் காண முடிகிறது. இது பெண்ணியா தன்னையே தான் நகல் எடுக்கும் போக்கை அவதானிப்புச் செய்ய வைக்கிறது. இது கவிதைக்குள் கவிதையெனும் பிணைப்பை காட்டுகிறது.

வெற்று இடைவெளியில்
எதுவும் இல்லாத படியால்
உரிய உருவம் ஒன்றினை
அங்கு நிரப்பிக் கொள்ளுதல்
காற்றுக்குச் சாத்தியமானது




இதே பாணியிலமைந்த

ஞாபகங்களை
இருந்த இடத்திலேயே
இருக்க விட்டு
எழும்பி நகர்கிறது நிழல்

வரிகளில் ஒத்திசைவான மொழியின் நீரோட்டம் தெரிகிறது. சமூக நிலையியலில் பழைய ஞாபகங்களை, அதன் குறியீடு, மற்றும் அடையா ளங்களைச் சுட்டி நிற்கும் வார்த்தைகளின் லாவகப்பாடும் இவரின் கவிதைகளில் தெரிகின்றன.

பூர்வீக சாபமாகக் கூட இருக்கலாம்
.........................
வெறுமனே மூடியிருக்கும்
செம்புப் பாத்திரத்தில்
எதைத் தேடுகிறாய்..........

தன்னில் தன்னோடு நெடுங்காலமாய் தங்கிவிட்ட பொருட்களிலும் சொல்லாடல்களிலும் நவீனத்தை நோக்கி திசைதிருப்பி விடுகிறார் பெண்ணியா.

தென்றல்
கால்களில் முத்தமிடத் தொடங்கியபோது
புகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண்ணாய் மாறத் தொடங்குகிற.

கால்களில் இடும் முத்தம் தவிப்பு நிறைந்தது. அந்த கணங்களை கவிதையில் பதிதல் அசாத்தியமான முயற்சி நீலமான இரவு....... மிக அதிகாலை நீல இருளின் பாதிப்பா (?) தெரியவில்லை. ஆக்ரோஷமதான எதிர்ப்புக்கவிதைகள்,புலம்பல்கள், கூவல்கள், பிரகடனங்களிலிருந்து திடீரென அழகியலுக்கு தாவியவர் பெண்ணியா, அவரது மிதமான, நிதானமான கவிதை ஆரம்பம் அதன் நடுவில் அல்லது அந்திமத்தில் வன்முறை தொடர்பான எதிர்ப்பதிவாக அமைந்து விடுகின்றது. இது அவரையறியாத தவறாக நிகழக்கூடும்.

இருட்டும் அவர்களும்
அறிந்திரா உண்மைகள்
இன்னமும் ஊமையாய்
மனதெங்கிலும்
ஓங்கி ஒலிப்பதும்
பின்பு
வாயிலும் வயிற்றிலும்
அடித்துக் கொண்டு அழுவதும்
பின்
பிம்பங்களை உடைத்து விட்டு

வன்மமான அல்லது வல்லினம் மிகைபடும் ஒரு வித உடைவான போக்கை காண முடிகிறது. சுதந்திர வெளி மீதான ஆண் - பெண் உறவு நிலையின் வியாபித்த மனநிலையையும் சேர்க்கையையும் மற்றுமொரு நீயும் நானும் கவிதை சொல்கிறது. கவிஞர்களின் குழந்தமையெனும் பண்பையும் காண முடிகிறது. காதல் மீதான பெண்ணின் இழிநிலையை தூதுவன் பிரதி செய்கிறது.

உடல் விற்கும்
வேசியையும்
உவமானத்திற்கு இழுக்கின்றாய்

பெண்ணியாவின் தற்காலப் போக்கின் ஒரு விதமான வளர்ச்சியை காட்டுகிறது. இரவு நேரத் தொழிலாளி பேசப்பட்ட அளவு முக்கியத்துவமுடைய கவிதை யாக தெரியவில்லை. (பெண்ணின் பார்வையில்) தனக்கென்ற மொழி லாவகப்பாடெனவும் சொல்லத் தகாதவற்றை இப்படி சொல்ல முயலலாம் என சிலாகிக்கப்பட்ட கவிதை ஆணிவேரின் மரபணுக்கள். ஆனால் அனாரின் மேலும் சில இரத்தக் குறிப்புகளுக்கும் இந்த கவிதைக்கும் பெரியளவான வித்தியாசம் இருப்பதாக எனக்கு தெரியவில்லை. நிறங்கள் பற்றிப் பேசும் பிரதிகள் இனிமையைப் பூசுபவை. நாவல் நிறம் குறித்து இதனைச் சொல்லலாம். அத்துடன் நல்ல கவிதை சில கவிதைகளில் தளர்வான மொழிநடையைக் கையாள்கிறார். இதனை மாலதி மைத்ரி, சுகிர்தராணியிலும் அவதானிக்கலாம். எல்லாப் பிரதிகளையும் படைப்பாளியால் செறிவாய் கொடுக்க முடிவதில்லை என்பதை ஏற்கத்தான் வேண்டி யிருக்கிறது. வெளிப்புற அல்லது புறவயப்பட்ட வர்ணனைப்படுத்தல்களில் வித்தியாசமான தன்மைகளை வெளிக்காட்டுகிறார். நட்சத்திர ங்களின் உதிர்வில் கனாக் காண்கிறார் பெண்ணியா.

என் மனக்கனவில்
ஒரு குமரி இருக்கிறாள்
இதுவரை
எந்த ஜந்துவினாலும்
காதலிக்கப்படாதவள்
எந்த நிழலினாலும்
தீண்டப்படாதவள்

இந்த ஏக்கம் இன்னும் பெண்ணியாவினுள் தொடரத்தான் செய்கிறது. தனக்காய் ஒரு காதலனையும் காண முடியாத வெற்று நிலை இன்னமும் எஞ்சி நிற்பதை குறிப்பிட்டு நிற்கிறார்.

கதவை சாத்துகையில் தெரிந்த
உன் இன்னுமொரு பார்வை
...............
என் இரவில்
போர்வையின் மேல்
படர்ந்திருந்தது
அந்தப் பார்வைதான்

காதல் மீதான விரகத் தவிப்பையும் மெல்லி பய உணர்வையும் குறிப்பிட்டுச் சொல்வதாயுள்ளது. ஒரு ஆணுடன் தனித்து வாழும் போது தோன்றும் இயல்பான பதட்டம் பெண் கவிகளில் வெளிப்படுவது ஆரோக்கியமான கவிதைத் தள வெளிப்பாடென்றே கொள்ள முடிகிறது. இரவு செறிவான கவிதை.

இறுக்கமான தசைகளில்
நெகிழ வைக்கும் இரத்த ஓட்டத்தின்
நாடித்துடிப்பை உணர முடிகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

......................

கண்கள் தெளிவாக இருக்கும் வரை மட்டுமே
ஒரு நல்ல புத்தகத்தை
நான் படிக்க முடியுமென்பது
பல நேரங்களில்
மறக்கப்பட்டு விடுகிறது

கண்ணாடிகளின் பின்னால் இயந்திரமயமான வாழ்வை கூறுகிறது. நான் என்ற அகங்கார வழியில் விரியும் கவிதையாக அரசியாகும் ஓர் கழுகை கொள்ள முடியும்.

பெரிய பெரிய மதில் சுவர்கள் கொண்டு
மறைக்கப்பட்டுள்ளதை
எந்தக் கயல்விழிக் கண்களும்
கண்டு கொள்ளவில்லை

முஸ்லிம் சமுகத்தின் இறுக்கமான நிலையை சூட்சுமமாக சொல்கிறார். ஒரு படிம வெளிப்பாடு

இவை எதிலுமே பதிந்திராத
அந்தப் பைத்தியம் பற்றி
சிலர் பேசினர் ஒரு மேதாவியென
சிலர் சொல்லிக் கொள்கின்றனர்.
ஒரு பைத்தியம் என ..........

தனது உச்சமான வளர்ச்சியிலும் பெண் என்ற அடையாளம் அவளை மழுங்கடிக்கும் ஓர் ஆயுதமாக பயன்படுத்தப்படுவதை தன் நிலை உணர்வுப் போக்கில் கூற முற்பட்டிருக்கிறார். ஒவ்வொரு பெண்ணுக்கும் இக்கட்டான தருணங்களிவை. பெண்ணியா எப்போதும் தான் இழந்து போன அல்லது இடம் பெயர்ந்த இளம் பராயம் பற்றியும் வாழிடம் பற்றியும் ஏங்கித் தவிப்பவர். அந்த வாழ்வு மாற்றம் தன்னை இடிந்து விழச் செய்ததாக பெரிதும் நம்புவர். பால்ய கால வீடு, நட்பு, காதல், உறவுகள், ஆற்றங்கரை, நெல்லிமரம் என்ற அவரது ஆதங்கப் பட்டியலில் பழைய வீடு இந்த தொகுப்பை நிரப்பியுள்ளது. அதுவும் அவரது உலகில் பெரும் இடத்தை பிடித்துக் கொண்டிருக்கிறது. இது அவருக்கு மட்டுமான ஏக்கம் எனச் சொல்ல முடியாது. அவரது உறவுகளில் அங்கலாய்ப்பும் இதுதான்.

அவர்களிடமும்
இதையெல்லாம்
கொண்டு போய்ச் சேர்க்குமா!

நிச்சயமாக கொண்டு போய்ச் சேர்க்கும் பெண்ணியா என்ற ஒரேயொரு ஆறுதலை மட்டுமே இப்போதைக்கு கொடுக்க முடியும் உள்ளார்ந்த நேர்மை? என்ற அறிமுகக் குறிப்பு விடயம் எனக்கு விளங்கவில்லை. இது பெண்ணியாவின் எழுத்துக்களை புனிதப்படுத்தும் முன் முயற்சியாக இருக்கலாம். என் குழந்தை ஓவியம் தாய்மையின் குழந்தை உறவு நிலையை கூறுகிறது.

கேத்திர கணித சமன்பாடுகளும்
வரைபடங்களும்
திகில் கலந்த அச்சுறுத்தலாய்

கடந்து வந்த பாடத்திட்டங்கள் தொடர்பான சுமை, பதட்டம் என்பவற்றை நாசுக்காக சொல்கிறார். பாடசாலைக் காலங்கள் எச்ச சொச்சமாய் அவருள் இன்னும் தங்கி நிற்கிறது. மறை பெண்ணியாவின் ஆன்மீகப் பார்வை, அனாரின் எட்ட முடியாத அண்மையை நினைவூட்டியது.

கால வரையறையின் படி பெண் கவிகள் மீதான பார்வை அவ்வளவு உடன்பாட்டுக்குரியதல்ல. மாறாக மொழியின் கூர்மை அல்லது வீச்சு அறியப்படும் வீதம் அல்லது விதம் எதிர்பார்க்கப்படும் அளவு அடிப்படையிலேயே அவர்கள் நோக்கப்பட வேண்டும். அந்த வகையில் பெண்ணியா 90 களுக்கானவர் என்ற மீண்டும் மீண்டுமான வலியுறுத்தல்கள் எத்துணை தூரம் அவசியப்பாடுடையதென தெரியவில்லை. அவர் தற்காலத்திற்குமாக கவிதை எழுதுகிறார்தானே! இனிவரும் பதிவுகளிலாவது 90 மீதான புராணத்தை மேதாவிகள் பாடாமல் இருப்பார்களா?

பெண்ணியா தொடர்பான எதிர்வுகூறல்கள் முக்கியத்துவமுடையன. அவரது அடுத்தடுத்த பரிமாணங்கள் எத்தகையதாக இருக்கப் போகின்றது என்பதை அறிவதில் நானும் ஆர்வமாய் இருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# தமிழர் உணவு முறையில் பெண்

**முல்லை**

தமிழர்களுடைய பண்பாட்டு பாரம்பரியத்தில் உணவு முறைமை சிறப்பான இடத்தைப் பிடித்துவந்துள்ளது. **“கூத்துக்குப் பிந்து சோத்துக்கு முந்து”** என்ற சொல்லாடல்கள் உணவின் முக்கியத்துவத்தையே எடுத்து இயம்புகின்றன.

சங்க கால மக்களின் வாழ்வியலும் உணவு முறைக்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளது. ருசித்துச்சாப்பிடுவது அவர்களின் நாளாந்தம்

“அவைப்புமாண் அரிசி அமலை வெண்சோறு
கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுவீர்”

என்ற சங்கப்பாடலடி நண்டும் பீர்க்கங்காயும் சுவையூட்டும் உணவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

*புளித்த உணவின் முக்கியத்துவத்தை புறநானூற்றில்*

“ தினைமுற்ற அதைக்கொய்து
காட்டெருமைப்பாலில்
முன்பு மானிறைச்சி சமைத்த
பழைய வெள்ளைக் கொழுப்பு
கரையெல்லாம் ஒட்டியிருக்கும்
பானையில் இட்டு
சமைத்துச் சாப்பிடுவார்கள்”

பானையைக் கழுவாமல் புளித்த பானையிலேயே திரும்பத்திரும்பச் சமைத்து ருசியை அதிகப்படுத்தினார்கள்.

இவ்வாறு உணவுக்கு முக்கியத்துவம் கொடுத்த தமிழ்ச்சமூகம் பெண்களுக்கான உணவு முறையை இருபருவகாலத்தில் முக்கியப் படுத்தியுள்ளது. ஒரு பெண்ணானவள் பூப்பெய்யும் போதும், மகப்பேற்றின் போதும் பெண்ணுடைய உணவு முறைமை தனித்துவமானதாக உள்ளது.

மகப்பேறு கண்ட பெண்ணுக்குரிய உணவு மருத்துவப்பயன் சார்ந்ததாகவே காணப்படுகிறது

“ பாலூண் குழவி பசுங்குடர் பொறாதென
நோயுண் மருந்து தாயுண்டாங்கு”

எனக் குழந்தைக்காகத்தாய் மருந்துண்பதனைச் சங்க இலக்கியம் பதிவு செய்கிறது.

குழந்தை பிறப்புக்கு முன்னரே ஒரு பெண்ணானவள் உடல் ஆரோக்கியத்துக்கு ஏற்றாற்போல் கிரந்தி உணவுகள் கருவைச் சிதைக்கும் உணவுகள் போன்றவற்றைத் தவிர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மகவைக்காத்து வந்தாள். மகப்பேற்றுக்குப் பின் பத்தியச் சாப்பாடே அவளுடைய உணவு. சோற்றுடன் மிளகு தண்ணிக் கறி வைத்துக் கொடுப்பார்கள். மிளகு தண்ணி பொதுவாக ஆற்றுமீனாக இருக்கும் சள்ளல், கிளக்கன் போன்ற பாலூறும் மீன்களை (கிரந்தியற்ற மீன்கள்) அம்மியில் அரைத்தெடுத்த தேங்காய்பூவுடன் கூடிய பொருட்களுடன் மிளகு தண்ணி சமைத்துக் கொடுக்கப் படுவதே மகப்பேறு கண்ட பெண்ணின் முக்கிய உணவு மகப்பேறு கண்ட பெண் மூன்றாம் நாளிலிருந்து உணவு உண்பதற்கு சற்று முன் வெள்ளச்சாராயம் (தென்னஞ்சாராயம்) சிறிதளவு குடிக்கக்கொடுப்பார்கள். அதன் பின்பே உணவு உண்பார்கள். இக்காலத்தில் சட்டிக்காயம் அல்லது வேர்க்கொம்பு சூரணம் எனப்படும் வேர்க்கொம்பு, பறங்கிக்கிழங்கு, அசமதாகம் போன்ற மூலிகைகளைச்சேர்த்து இடித்து மென்னையான பட்டாக (தூளாக) எடுத்து இஞ்சியுடன் அரைத்தெடுத்து சிறிது தேனுடன் கலந்து தினந்தோறும் உண்பார்கள். இது பிள்ளை பெற்ற பெண்ணின் குடலை ஆற்றுவதற்கான உணவு.

மூன்றாம் நாள் விசேட சாப்பாடாக கோழி விறாத்து முக்கியமானது. குஞ்சுக்கோழியை மிளகு, செத்தல் மிளகாய், கொறுக்காய், உள்ளி போன்ற பொருட்களுடன் சேர்த்து சூப்பு வைத்துக் கொடுக்கப்படும். பொதுவாக இரவுச்சாப்பாடு மென்மையான உணவாகவே இருக்கும். இக்காலங்களில் குடிநீர் கூட கொதிக்க வைத்து சூடாறிய தண்ணீரே கொடுப்பார்கள். பச்சத்தண்ணீர் பாவனை தவிர்க்கப்படும்.

### பூப்பெய்த பெண்களுக்கான உணவு.

பெண் பருவமெய்திய போது அவளுக்கான உணவு முறையும் தமிழர்களின் பழக்கவழக்கத்தில் முக்கியம் கொள்கின்றது.

பெண்பிள்ளைகள் “ருது” கண்டவுடன் பச்சைமுட்டை, வேப்பெண்ணை, நல்லெண்ணெய் என்பன அவளின் முதல் உணவாகும். அதன் பின் பிட்டு அவித்து நல்லெண்ணெய் ஊற்றி பிரட்டி துணியில் முடிச்சுக்கட்டி இடுப்பில் ஒத்தடம் பிடித்து அதை உண்ணக்கொடுப்பார்கள். அன்றோ அல்லது மறுநாளோ கத்தரிக்காயையும், முட்டையையும் நல்லெண்ணெய்யில் பொரித்து கொழியல் அரிசிச்சோறும் உணவாக கொடுக்கப்படும். முதல் மூன்று நாட்களும் பிட்டு, நல்லெண்ணெய், பச்சைமுட்டை என்பன பிரதான உணவாக இருக்கும்.

ருது கண்ட பெண்ணின் உடலை ஆரோக்கியப்படுத்துவதற்காக சிறுதானிய உணவும் இக்காலங்களில் முக்கியம் கொள்கின்றது. எள்ளு, உளுந்து, குரக்கனின் பாவனை மிக முக்கிய பாவனையாக எமது மூதாதையர்கள் பயன்படுத்தி வந்துள்ளனர்.

எள்ளு, வெங்காயம், பனங்கட்டி போன்ற பொருட்களை மரவுரலில் இடித்து உணவுண்ணக்கொடுப்பார்கள். இது ஒருவகை மணம் வீசும். ருதுப்பட்ட பெண்கள் இவ்வுணவை மிகக்கஸ்டப்பட்டு உண்பார்கள்.

உளுந்துக்களி “ருது” பெண்ணிற்கு ஆரோக்கிய உணவு. நல்லெண்ணெய் ஊற்றி ருதுப்பட்ட நாளிலிருந்து ஒன்பதாவது நாள்வரை அத்தியாவசியமான உணவாகும்.

குரக்கன் கூழ் ருதுப்பட்ட பெண்ணின் இரவு உணவாகும். நன்றாக முற்றிய தேங்காயிலிருந்து பெற்ற பாலுடன் சீனியும் சேர்த்து நன்றாக இறுகக்காச்சி கிண்டி எடுத்த கூழே ருதுபெண்ணின் எஃகு உணவு. பத்தியச்சாப்பாட்டுடனான உணவைமேற்கொள்ளும் ருதுவானவர்கள் மீன், இறைச்சி, உப்பு முதலியன தவிர்க்கப்பட்ட உணவாகவும் காலம் காலமாக கடைப் பிடித்துவந்துள்ளதை இப்பொழுதும் காணமுடிகின்றது.

தமிழர்களின் உணவு முறையில் பெண்ணுக்கான உணவு எவ்வளவு முக்கியமானதாக அமைகிறதோ அதுபோல் அவளின் குடும்பநிலையும் முக்கியமானது. பெண்ணானவள் உணவு தயாரிப்பதிலும், விருந்து படைப்பதிலும் தன் காலத்தைக் கழிக்கிறாள்.

**புறநானூற்றில் வரும் பாடலொன்றில் பெண்ணின் உணவு பரிமாறல் பற்றி குறிப்பிடுகையில்**

“ வரகு அறுத்து தினை அறுத்து
எள் கறுக்கும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை அவரை அறுத்து
நிலத்திலே புதைத்து மூப்படையச்செய்த
கள்ளைப்பகிர்ந்து
வெண்ணையில் கடலை பொரித்து
சமைத்த அரிசி உணவை
வீட்டுப்பெண்கள் நீண்ட கைகளால் பரிமாறி
குழைத்து உண்பர்''

இப்பாடல் தமிழர்களின் குழைத்துண்ணும் பண்பையும், பெண்ணுடைய உணவுப்பரிமாறல், பொறுமையையும் பறைசாற்றுகின்றது.




அதிர்கின்ற முதல் நாளில்
நகரத்தின் சுவர்களில்
மாடுகள் முளைத்தன

இது என் காலம்
நசுங்கிப் பியிந்தொழுகும் காலம்

~02~

பேய்கள் கூத்தாடும்
வீதிகள் தோறும்
ஒரு சனமும் இல்லை
எல்லாம் பேய்கள் மயம்

எந்த வெளிச்சமும்
ஒளிரா நகரில்
பேய்கள் உறைந்து
பேய்கள் உறைந்து
நரகமாய் போனது

இவ்வாறு தமிழர்களுடைய உணவு முறையில் பெண்ணுக்கான உணவு முறை தனித்துவமானதாய் பின்னிப்பிணைந்திருந்தன. இன்று அவை அருகி வருகின்றன. நாகரீக மோகம், உலகமயமாக்கலின் தாக்கம் நம் ஆரோக்கியமான உணவு முறைமையையும், தமிழர்களுடைய பண்பாட்டையும் மெல்ல மெல்ல விழுங்கிக்கொண்டு வருகின்றது.

## இறங்குகின்ற விம்பம்

எப்போதும் வாழ்வின்
இருப்பைப் பற்றி பேசாத நீ
சற்று நேரத்தின் முன்னிருந்து
தொடங்கியிருக்கும் துவக்கம்
இருளில் மின்னுகின்ற மின்மினியாய்
நீ எனக்குள் படர்கின்றாய்

விசம் படர்ந்த இப்பூமியில்
பாழ்கிடக்கின்ற தெருக்களில்
முளைத்திருக்கும் அழுக்குக் கரங்கள்
நஞ்சைக் கக்கும் தருணங்களில்
நீ எப்படி உயிர் வாழ்வாய்?

நீ சொல்லுகின்ற
ஒவ்வொரு பெரும்கதையாடல்களும்
எனக்குள் விழுந்து
பெரும் விருட்சமாக முளைக்கின்ற போதும்
உன் இருப்பின் தொடக்கம் ~ எனக்கு
கானல் நீர்களில்
அசைகின்ற படிமமாய் விழுகின்றாய்

கண்கள் இரண்டும்
உன் விம்பத்தை நிரப்பி
எனக்குள்ளே உன்னை இறக்குவதை விட
இப்போது அதுதான் என்னால் முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ௨௯.௦௯.௨௦௦8 , இரவு ௬.௨5



எனது மரணத்தின் ஓலம்
ஜன்னலுக்கு வெளியே
இன்னும் கேட்கின்றன

நண்பர்கள் வருவதும்
உறவினர்கள் சுகம் விசாரிப்பதும்
தொலைபேசி அழைப்புக்களும்
எனது இருப்பை நினைவுபடுத்துகின்றன

முழுவதுமாய் விடுபட
என்னால் முடியவில்லை

என் உருவில் புதைந்து கிடக்கும்
அந்தக் கணம்
சொற்பணமா? வேறு என்ன?
படார்ச்சத்தும்
தீப் பிழம்பு
நச்சுப் புவியில்
எனக்கு புதிது.
ஓடிக் களைத்து மீண்டும்
எழுந்திருக்கும் உரு
விச ஜந்து நிறைந்த தெருக்களில்
நடமாட நடுங்குகிறது

இப்போ
புரவிகளின் குளம்பொலியோசை எழும்
நரகத்தில் இருந்து
முழுவதுமாய் மறந்து விட
எனக்கு இயலவில்லை

—முல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Arethy Jewellers
## ஆர்த்தி ஜீவலர்ஸ்

22, பிரதான வீதி,
மட்டக்களப்பு
தொ.இல. 2222305

## Vision
## Pharmacy and Supermarket

290 C, திருமலை வீதி,
மட்டக்களப்பு
தொ.இல.
0653654229, 0654906516
065364669, 0779123494

## Madura Jewellers
## மதுரா ஜீவலரி

17 A, முனை வீதி,
மட்டக்களப்பு
தொ.இல. 0652222196

## பலநோக்கு கூட்டுறவுச்சங்க
## எரிபொருள் நிரப்பு நிலையம்

24மணி நேர சேவை
தங்கு தடையற்ற எரிபொருள்
விநியோகம்

ஆரையம்பதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org